விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள்: இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail :valampurii@yahoo.com
valampurii@sltnet.lk


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 தை 23 சனிக்கிழமை (06.02.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 049

# உள்ளக விசாரணை பொறிமுறையில் சர்வதேசத்தின் பங்களிப்பு அவசியம்

## பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் உறுதி



(லண்டன்)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமைகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க இலங்கை அரசாங்கத்தால் அமைக்கப்படவுள்ள உள்ளகப் பொறிமுறையில் சர்வதேச பங்களிப்பு அவசியம். இப்பொறிமுறை நம்பகமானதாகவும், சர்வதேச நியமங்களுக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும் என்பதில் நாம் உறுதியாகவும், தெளிவாகவும் இருக்கின்றோம்."

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கேள்வி நேரத்தின் போது, இலங்கை அரசாங்கத்தால் உருவாக்கப்படவுள்ள உள்ளகப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளை அனுமதிக்க மாட்டேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் கூறியிருந்தமை தொடர்பில் பிரித்தானிய அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன எனக் கேள்வி எழுப்பபப்பட்டிருந்தது.

இந்தக் கேள்விக்கு எழுத்து மூலமான பதிலை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை அளித்த போதே, பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய பணியக இணை அமைச்சர் ஹியூகோ ஸ்வைர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கேள்வி நேரத்தின் போது இலங்கை விவகாரம் தொடர்பில் ஒன்பது கேள்விகள் எழுப்பப்பட்டிருந்தன. இந்தக் கேள்விகளுக்கு அந்நாட்டின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய பணியக இணை அமைச்சர் ஹியூகோ ஸ்வைர் எழுத்து மூலம் பதிலளித்திருந்தார். அமைச்சர் ஹியூகோ ஸ்வைர்

24ஆம் பக்கம் பார்க்க

# ஐ.நா ஆணையாளர் ஹுசைன் இன்று இலங்கை விஜயம்!

(கொழும்பு)

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் இன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளார். கூட்டு எதிர்க்கட்சியினர் அல் ஹுசைனின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாரிய ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ள நிலையில் அவர் விஜயம் செய்யவுள்ளார். 2013 ஆம் ஆண்டில் அப்போது மனித உரிமைப் பேரவை ஆணையராக இருந்த நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை ஆராய்ந்த பின்னர் பதவி ஏற்றுள்ள அல் ஹுசைன் இன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொள்கிறார்.

23ஆம் பக்கம் பார்க்க



# இலங்கையில் சுஸ்மா சுவராஜ்

(கொழும்பு)

இந்தியா-இலங்கை கூட்டுக் குழுவின் 9ஆவது கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பை வந்தடைந்தார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை தனிவிமானத்தில் வந்தடைந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ், வெளிவிவகாரச் செயலாளர் எஸ்.ஜெய்சங்கர் மற்றும் மூத்த அதிகாரிகளை இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர விமான நிலையத்தில் வைத்து வரவேற்றார்.

இப்பயணத்தின் போது அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.

இச்சந்திப்புகளின் போது இலங்

24ஆம் பக்கம் பார்க்க

# வடக்கில் 27 பாடசாலைகளை புனரமைக்க இந்தியா இணக்கம்

(கொழும்பு)

இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையில் முக்கியத்துவம் வாய்ந்த இரு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இலங்கை-இந்தியா ஒன்றிணைந்த ஆணைக்குழுவின் 9ஆவது மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா நேற்று வெள்ளிக்கிழமை இலங்கை வந்தடைந்தார்.

இந்நிலையில் நேற்று மாலை கொழும்பு தாஜ் சமுத்ரா விடுதியில் நடைபெற்ற மாநாட்டின் முடிவில் இரு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

ஒன்றிணைந்த ஆணைக்குழுவின் மாநாட்டில் இந்திய தரப்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர்

23ஆம் பக்கம் பார்க்க

# ரணிலை சந்தித்து பேச்சு முதலீடு செய்ய அழைப்பு!



23ஆம் பக்கம் பார்க்க

# ஜனாதிபதி, பிரதமர் தலையிடாவிடில் வரிசையாய் பலர் உள்ளே செல்வர்!


## ஜே.வி.பியின் அனுரகுமார தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள தேவைக்கு அமையவே பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

பயங்கரவாதம் பிரச்சினையாகும்போது பயங்கரவாத விசாரணைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. போதைப் பொருள் பிரச்சினையாகும் போது போதைப் தடுப்பு பிரிவு ஏற்படுத்தப் பட்டது. அதேபோல் தற்போது நிதி



24ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## அனங்கம் குறும்படம் நாளை திரையில்

(யாழ்ப்பாணம்)

ஈழத்துக் கலைஞர்களின் உரு வாக்கத்தில் அகி தயாரிப்பில் வெளி வந்துள்ள **அனங்கம** குறும்படம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5.50 மணியளவில் கார்கிள்ஸ் ஸ்குவெயர் திரை அரங்கில் காண் பிக்கப்படவுள்ளது.

அகர்சன் தயாரிப்பில் வெளிவந் துள்ள இக் குறுந்திரைப்படத்திற்கு பரண்ணா இசையமைத்துள்ளார்.

இக் குறும் திரைப்படக் காட்சிப் படுத்தலுக்கான நுழைவுச் சீட்டு அனுமதி ரூபாய் 300 என்பதும் குறிப்பிடத்தக்கது. (5)

## விற்பனைக்கு

தரமான கினிராஜ் (கறுப்பினம்) கோழிக் குஞ்சுகள் முற்பதிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : 077 837 6620

(3510)

# சம்பந்தனுக்கு வந்த கண்ணீரால் தமிழ் மக்களுக்கு ஏதும் நன்மையா?

## ஆனந்தசங்கரி கேள்வி

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சம்பந்தன், சுதந்திரதின விழாவில் கலந்து கொண்டிருந்தபோது தமிழில தேசிய கீதம் பாடப்பட்ட வேளை கண்கள் கனிந்து கண்ணீர் முட்டியதாக வந்த செய்தி எம்மை ஆச்ரி யத்துக்குளளாக்கியது என தமிழர் விடுதலை கூட்டணியின் செய லாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அதில மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

எமது பிள்ளைகள் சிறையில் விடு தலை பற்றிய கனவு கண்டு கொண்டு பல தடவை ஏமாற்ற மடைந்து விரக்தியுடன் இருக்கும் அரசியல்கைதிகளை நினைதது வராத கண்ணீர், காணாமல் போன உறவு களின் நிலையறியாது, நாளும் பொழு தும் கண்ணீருடன்வாழும் ஆயிர மாயிரம் தாய்மார்கள் கதறி அழும் போது வராத கண்ணீர், இன்று மட்டும் தேசிய கீதம் தமிழில் பாடபட்டபோது எப்படி கண்கள் பனித்தன என்பது ஆச்சரியமானதே.

இதுவரை காலமும் மேலே குறிப்பிட்ட சம்பவங்களில், குறிப்பிடப்பட்டவர்கள் சிந்திய கண்ணீர்கள் ஆறாக பெருக்கெடுக்க கூடியதாகும். சுதந்திர தினநிகழ்வில் கலந்து கொள்ளாது, ஏதேனும் ஒரு பொது இடத்தில் இருந்து கொண்டு கண்ணீரை அரசுக்கு காட்டியிருந்தால, அரசு மனதை கரைத்திருக்கும்.



இன்றும் பல முன்னாள் போராளி கள் வேலைவாய்ப்புகளிற்காக காத்திருப்பதும், கல்வி தகைமை இருந்தும் அவர்களிற்கான தொழிலை பெற்று கொளள முடியாதவாறு தத் தளிப்பதையும் மாற்று திறனாளி களாக்கப்பட்டு மற்றொருவருடைய உதவி யுடன் எஞ்சிய காலத்தினை கழிக்கும் பல்லாயிரம் இளைஞர் யுவதிகள், கணவனைஇழந்த இளம் பெண்கள் தொடர்பில் தாங்கள் எதிர்க்கட்சி தலைவராக பதவி ஏற்று பல மாதங்கள்கடந் துள்ள நிலையில் அரசிற்கு எவ் வாறான அழுத்தத்தினை கொடுக்க தங்களால் முடிந்தது? அது உங்கள் கடமை அல்லவா? மக்களின் பசியைதீர்க்க என்ன செய்ய முடி யும் என்பதை சிந்தித்து செய்யுங்கள.

அதை விடுத்து சுதந்திர தினத் தில் தமிழில் தேசியகீதம் இசைக் கப்பட்டமைக்கு கண்ணீர் வடிப் பதால் எவ்வித பயனும் மக்களிற்கு, குறிப்பாக தமிழ் அரசியல் கைதி களிற்கும், காணாமல் ஆக்கப்பட்டவர் களிற்கும், அவர்களின் உறவுகளிற கும் கிடைக்க போவதில்லை என் பதை தாங்கள் உணர்ந்து செயற்படு வீரர்கள் என நம்புகிறேன் என்றுள் ளது (க)

## கோழி இறைச்சி விற்பனை



உள்ளூர் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் (குல்பேட்) சுகாதாரமான முறைப்படி சுத்தம் செய்து தினமும் காலை 6.00 தொடக்கம் மாலை 8.00 வரை நியாயமான விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

(3644)

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்,யாழ்ப்பாணம்.

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர் என்.கே.குலசிங் கம் எழுதிய யாழ்.மாவட்டத்தில் உள்ள தொண்டு நிறுவனங்களின் கட்டுரைத் தொகுப்பான **'நிழல்'** நூல் வெளியீட்டு விழா இன்று சனிக் கிழமை காலை 9.30 மணிக்கு சுன்னாகத்தில் அமைந்துள்ள வாழ் வகத்தின் செல்லா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் க.தேவராஜா தலை மையில் நடைபெறவுள்ள இந் நிகழ் வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாய கன் கலந்து கொள்ளவுள்ளார். (க)

## அதிரடிச் சலுகை

வலம்புரியின் அதிரடிச் சலுகை

- மரண அறிவித்தல்கள்
- கண்ணீர் அஞ்சலிகள்
- நினைவு கூருதல்

ஆகியவற்றுக்கு

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு :-
021 221 7603,
021 321 0815
021 567 1543

Valampurii@yahoo.com

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# விமானங்களை தாக்க காணி வாங்கிய புலிகள்

(கொழும்பு)

விமானங்கள் மீது தாக்குதல் நடத்த தமிழீழ விடுதலைப் புலி கள் கட்டுநாயக்கவில் காணி கொள் வனவு செய்திருந்தனர் என சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளி யிட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலை யத்திற்கு அருகாமையில் காணி யொன்றை புலிகள் கொள்வனவு செய்திருந்தனர்.

தாக்குதல் நடத்தப்பட்டு பல ஆண்டுகளின்பின்னரே இது வெளிச் சத்திற்கு வந்துள்ளது. இந்த காணி பற்றிய விபரங்களை திரட்டிய பயங்கரவாத தடுப்புப் பிரிவினர், அதனை அரசுடமையாக்கியுள்ள னர்.

கைது செய்யப்பட்ட தமிழீழ விடு தலைப் புலி உறுப்பினர் ஒருவர் காணி பற்றிய விபரங்களை வெளி யிட்டுள்ளார். எனினும், இந்த விபரங்கள் இரகசியமாகவே காணப் பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலை யத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்ட தன் பின்னரும் காணி பற்றிய தகவல்கள் அம்பலமாகியிருக்க வில்லை என சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (12)

## மணிவிழா வாழ்த்துக்கள்

எமது தேசத்தின் கல்விக்காய் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றும்



"பொன்மனச் செம்மல்", "மனித நேய ஈகையாளன்", "கல்விக் காருண்யன்" என்னும் கௌரவப்பட்டங்களைப் பெற்ற உயர்திரு.

ESP. நாகரத்தினம்

அவர்களின் மணிவிழா சிறக்க எமது இதயபூர்வமான நல்வாழ்த்துக்கள்

வாழ்த்துவோர் :
பீடாதிபதி, கல்வியியலாளர்கள், கல்விசாரா ஊழியர்கள், முகிழ்நிலை ஆசிரியர்கள்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

(C-3643)

## சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பதிவு இல :- J/1594 பதிவு திகதி :- 11.03.1972

### கட்டட ஒப்பந்தகாரர் கூறுவிலை கோரல்

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு கச்சாய் வீதியில் அமைந்துள்ள எமது சங்கத்திற்குச் சொந்தமான 04 பரப்பு 11.5 குழி விஸ்தீரணம் கொண்ட காணியில் 39 அடி நீளமும் 16 அடி அகலமும் கொண்ட நவீன கிளைக் கட்டடம் அமைத்து அக் கட்டடத்திற்கு பூச்சு பூசி வர்ணம் பூசுவதற்கும் உட்சீற் அடிப்பதற்கும் மின் இணைப்பு வேலை கள் மேற்கொள்வதற்கும் இவ் 04 பரப்பு 11.5 குழி விஸ்தீரணம் கொண்ட மேற்படி காணிக்கு சுற்றுமதில் அமைப்பதற்கும் இக் காணி யினுள் மலசல கூடம் மற்றும் கிணறு என்பன அமைப்பதற்குமான கூறுவிலைகள் எம்மால் கோரப்படுகின்றன.

இதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களுடைய விண்ணப் பங்களை சுயமாகத் தயாரித்து 20.02.2016-ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தலைவர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) டச்சு வீதி, சாவகச்சேரி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

*குறிப்பு :- இதற்கான வரைபடம் மற்றும் மேலதிக விபரங்களை எமது சங்க காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.*

தலைவர்
ப.தெ.வ.அபி.கூட்.சங்கம்
சாவகச்சேரி.

06.02.2016

(C-3642)

### விடுதலைப் புலிகளின் தீவிர செயற்பாட்டாளர்களை

# கண்காணிக்கும் பொறிமுறையை வலுப்படுத்தக்கோரும் கோத்தா

விடுதலைப் புலிகளின் தீவிர செயற்பாட்டாளர்களை கண்காணிப்பதற்கான பொறிமுறையை அரசாங்கம் வலுபடுத்த வேண்டும் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள, விடுதலைப் புலிகளின் தீவிர செயற்பாட்டாளர்களை விடுதலை செய்வதற்கு முன்னர், இந்த கண்காணிப்பு பொறிமுறையை வலுப்படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

“இராணுவப் புலனாய்வு அமைப்புகளின் கண்காணிப்பு வலுப்படுத்தப்படாமல், விடுதலைப் புலிகளின் தீவிர செயற்பாட்டாளர்கள் விடுவிக்கப்படுவதால், நாட்டின் பாதுகாப்புக்கும், அமைதிக்கும் பாரிய அச்சுறுத்தல் ஏற்படும்.

2009 மே மாதம் போர் முடிவுக்கு வருவதற்கு முன்னர், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 5 ஆயிரம் விடுதலைப் புலிகள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், அவர்களின் பின்னணி குறித்தும், விடுதலைப் புலிகளுடனான தொடர்புகள் குறித்தும் நாம் விசாரணை நடத்தினோம்.

அவர்களில், குறைந்தளவு தொடர்புகளை வைத்திருந்தவர்கள், தெரிவு செய்யப்பட்டு, புனர்வாழ்வு அளித்து விடுவிக்கப்பட்டனர்.

2015 ஜனவரியில் இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த போது, விடுதலைப் புலிகளின் 273 தீவிர செயற்பாட்டாளர்கள் சிறைகளில் இருந்தனர்.

அவர்களில், விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களும், கொழும்பில் பல்வேறு தாக்குதல்களுக்கு சூத்திரதாரிகளாக இருந்தவர்களும் அடங்குவர். இவர்களை விடுவிப்பது பாதுகாப்புக்கு மோசமான அச்சுறுத்தலாகும். இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவர்கள் அரசியல் கைதிகள் அல்லர், தீவிரவாதிகள்.

இவர்களைக் கைது செய்வதற்கு இராணுவம் மிகப் பெரிய தியாகங்களைச் செய்துள்ளது. இவர்களை எப்படிக் கைது செய்தோம் என்று தெரியாமல், இவர்களை விடுவிக்க வேண்டும் என்று சிலர் இலகுவாக கூறுகின்றனர்.

ஆனால் அரசாங்கம் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேணடும். விடுவிக்கப்பட்ட பின்னர், இவர்களைக் கண்காணிப்பதற்கான பொறிமுறை ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டியது முக்கியம்.

இவர்கள் பற்றிய இராணுவப் புலனாய்வு அமைப்புகளின் சரியான தகவல்களை பெற்று, ஆபத்துக்களை அரசாங்கம் ஆராய வேண்டும்.


இல்லாவிட்டால், இது ஒரு ஆபத்தான முடிவாக இருக்கும். நாட்டின் பாதுகாப்பே அரசாங்கத்தின் மிக உயர்ந்த முன்னுரிமையான விடயமாக இருக்க வேண்டும்.


2009 இல் நாம், விடுதலைப் புலிகளை முற்றுமுழுதாக தோற்கடித்தோம். அந்த அமைப்பின் 12 ஆயிரம் போராளிகள் அமைதியான குடிமக்களாக இருக்கின்றனர்.

ஆனால் சில தமிழ் அரசியல்வாதிகள், விடுதலைப் புலிகளின் கொள்கையை பரப்புகின்றனர். அதனை இன்னமும் உயிர்ப்புடன் வைத்திருப்பதற்கு, சில புலம்பெயர் பிரிவுகள் விரும்புகின்றன. எனவே, விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணைவதற்கு வாய்ப்புகள் உள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# கம்மன்பில-வீரவன்ச கடும் இனவாதிகள்

## டியூ. குற்றச்சாட்டு





(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உடைத்து வேறு கட்சியை ஏற்படுத்தும் தீர்மானமானது நாட்டை அராஜக நிலைக்கு கொண்டு செல்லும் தீர்மானம் எனவும் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகிய இருவரும் கடும் இனவாதிகள் எனவும் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரான முனனாள் அமைச்சர் டியூ. குணசேகர தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உடைக்கும் நடவடிக்கைக்கு தமது கட்சி ஒரு போதும் ஒத்துழைப்பு வழங்காது எனவும் அவர் கூறியுள்ளார்.

வேறு ஒரு கட்சியை ஆரம்பித்து அதன் தலைமைத்துவத்தை பெறும் நபருக்கு நன்மை ஏற்படுமேயன்றி, இந்த தீர்மானத்தினால் பொது மக்களுக்கு எந்த நன்மையும் ஏற்படாது.

புதிய கட்சி தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டு வரும் உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ச ஆகிய இருவரும் கடும் இனவாதிகள் என்பதால், புதிய கட்சியானது எந்த விதத்திலும் கம்யூனிச மற்றும் முற்போக்கான கொள்ளைகளுடன் செயற்படாது.

தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக முன்வைக்க வேண்டிய விமர்சனங்கள் இருந்தாலும் எதிர்க்கட்சி அணியினர் ஆக்கபூர்வமான விமர்சனங்களுக்கு பதிலாக இனவாத கருத்துக்களை மாத்திரமே முன்வைத்து வருகின்றனர் எனவும் முன் னாள் அமைச்சர் டியூ. குணசேகர தெரிவித்தார். (இ)

## குமார் குணரத்னத்தின் விளக்கமறியல் நீடிப்பு

முன்னிலை சோசலிசக் கட்சியின் அரசியற் குழு உறுப்பினர் குமார் குணரத்னத்தை எதிர்வரும் 15 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில்வைக்குமாறு கேகாலை நீதவான் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தை மீறி நாட்டில் தங்கியிருந்த குற்றஞ் சாட்டப்பட்டிருந்த இவர் கேகாலை அருகுருவெல பகுதியில் வைத்து நவம்பர் மாதம் 4 ஆம் திகதியன்று சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)



அண்மையில் இடம்பெற்ற யாழ்.பல்கலைக்கழகத்தின் 31ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெற்ற 15ஆம் அணி முகாமைத்துவ வணிகபீட மாணவர்கள் தமது cap collection ஆக வழங்கியிருந்த பணத்திலிருந்து, போரினால் பாதிக்கப்பட்ட வறிய குடும்பங்கள் , முன்னாள் போராளி குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் வாழ்வாதார உதவிகளை வழங்கியுள்ளனர்.

# யோஷிதவின் கைது தொடர்பில் பாதுகாப்பு கூட்டத்தில் ஆராய்வு

யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்டது தொடர்பாக தேசிய பாதுகாப்புச் சபைக் கூட் டத்தில், ஆராயப்பட்டுளளதாகத தகவல்கள் தெரிவிக்கின்றன.

யோஷித ராஜபக்ஷவின் கைது பற்றிய தகவல்களை, தேசிய பாதுகாப்புச் சபை கூட்டத்துக்கு தலைமை தாங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பாதுகாப்பு அதிகாரிகளிடம் கோரியுள்ளனர்.

அதற்கு, ஒரு ஆண்டாக நடத்தப்பட்ட விசாரணைகளுக்குப் பின்னரே, யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்டதாகவும், சிஎஸ்என் தொலைக்காட்சியின் தலைவராக அவர செயற்பட்டதை உறுதிப்படுத்தும், 12 ஆயிரம் மின்னஞ்சல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், உயர்மட்டப் பாதுகாப்பு அதிகாரிகள் விளக்கமளித்துள்ளனர்.

அப்போது, அரசியல்வாதிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரைக் கைது செய்வதற்கு முன்னர், அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளின்உண்மைத்தன்மையை சரியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி மற்றும் பிரதமர் வலியுறுத்தியுள்ளனர். (இ)

# சுகாதார உதவியாளர்கள் எதிர்ப்பு



(யாழ்ப்பாணம்)

சுத்திகரிப்பு தொழிலாளர்களாக சேவையாற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைத்தியசாலையின் சுகாதார உதவியாளர்கள் நேற்றைய தினம் எதிர்பபு வெளியிட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் நோயாளர் நலன்களுக்காக பாடுபடும் தம்மை சுத்திகரிப்பு தொழிலாளர்களாக மாற்ற முயல்வதாகவும் அவர்கள் குற்றஞ்சாடடியுள்ளனர்.

இது தொடர்பாக வைத்தியசாலையின் நிர்வாக தரப்பினரினை சந்திக்க முயற்சி செய்யும் போது புறக்கணிப்பதாக ஊடகங்களிடம் குறிப்பிட்டனர். அத்துடன் நோயாளர்களுடன் நெருங்கி பழகும் வேளை பணிப்பாளர் குறிப்பிடும் படி சுத்திகரிப்பு வேலைகளை மேற்கொள்ள முடியாது.

இந்தவேலைஎமதுவேலையும் அல்ல.2006 ஆண்டு வெளிவந்துள்ள சுற்றுநிருபத்தின் படி எமது வேலை நோயாளர்களை பராமரிபதும் அவை தொடர்பான நலன்களை பேணுவதுமாகும். ஆனால் வைத்தியசாலை பணிப்பாளர் புதிய உத்தரவு தற்போது பிறப்பிக்கின்றார்.

இதற்கு எம்மால் உடன்பட முடியாது. அசுத்தமாக உள்ள பகுதிகளை சுத்திகரிப்பு செய்துவிட்டு நோயாளர்களுடன் எப்படி அணுகுவது. அவ்வாறு அணுகினால்நோயாளிகளுக்கு தான் பாதிப்பு அதிகம். எனவே பணிப்பாளர் கூறிய உத்தரவை வாபஸ் வாங்க வேண்டும். இல்லாவிடின் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் என தெரிவித்தனர். (இ-4)

# ஐக்கிய தேசிய முன்னணியில் இணைய பல கட்சிகள் ஆர்வம்

ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்து கொள்ள பல கட்சிகள் ஆர்வம் காட்டி வருவதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபிர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

பல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சியைப் போன்றே மேலும் சில கட்சிகளும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொளள விருப்பம் வெளியிட்டுள்ளதாக அவர் திவயின பத்திரிகைக்கு நேர்காணல் வழங்கியுள்ளார்.

எதிர்வரும் நாட்களில் ஏனைய சில கட்சிகளும் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து கொள்ள உள்ளன.

இது தொடர்பிலான புரிந்துணர்வு உடன்படிக்கை எதிர்வரும் காலங்களில் கைசசாத்திடப்பட உள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கையை கைச்சாத்திடுவது குறித்து கட்சித் தலைவர்களுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசிய முன்னணியை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

ஐக்கிய தேசிய முன்னணியில் பல கட்சிகள் இணைந்து கொண்டதன் பின்னர் புதிய யாப்பு ஒன்று உருவாக்கபபடும் என என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)


# புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவும் யுவராஜ்

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 100 குழந்தைகளுக்கு உதவும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளார் இந்திய அதிரடி வீரர் யுவராஜ் சிங்.

ஒருகாலத்தில் இந்திய அணியின் அதிரடி ஆட்டக்காரர்களில் ஒருவர் யுவராஜ் சிங், இவருக்கென்றே தனி ரசிகர்கள் பட்டாளம் உண்டு.

சில ஆண்டுகளுக்கு முன் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மீண்டு வந்து அதிரடி காட்டத் தொடங்கியுள்ளார்.

இந்நிலையில் தன்னை போன்றே புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள 100 குழந்தைகளுக்கு நீண்டகால அடிப்படையில் கல்வி நிதியுதவி



வழங்க தீவிர ஆர்வம் காட்டி வருகிறார்.

இதுகுறித்து அவர், Together Wecan என்ற இயக்கத்தின் மூலம் 100 குழந்தைகளின் 5 ஆண்டுகால கல்விச் செலவை ஏற்கத் தீர்மானித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும் எனது அனைத்து சதங்களை விடவும், புற்று நோயால் பாதிக்கப்பட்டு மீண்டு வரும் இந்த 100 குழந்தைகளின் கல்விக்கு அளிக்கும் ஆதரவு குறித்து மிகுந்த பெருமை அடைகிறேன் என டுவிட் செய்துள்ளார்.

இந்த திட்டத்திற்கு லக்ஷ்மன், சச்சின் டெண்டுல்கர், சாகீர் கான், ரோஹித் சர்மா, கவாஸ்கர் மற்றும் விராட் ஹோலி போன்றோரும் தங்களது ஆதரவை தெரிவித்துள்ளனர். (க)

# ஹோலி - அனுஷ்கா காதலில் விரிசல்



இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரும், டெஸ்ட் அணித் தலைவருமான விராட் ஹோலி இந்தி நடிகை அனுஷ்கா சர்மாவை தீவிரமாக காதலித்து வந்தார்.

இருவரும் ஜோடியாக சுற்றினார்கள். முக்கிய விழாக்களில் ஜோடியாகவே பங்கேற்றனர். விராட் ஹோலி விளையாடும் கிரிக்கெட் போட்டியை அனுஷ்கா சர்மா தவறாமல் சென்று பார்த்தார். மைதானத்தில் அவர் இருப்பதை டி.வி.யில். காட்டி ரசிகர்களை குதூகலப்படுத்தி வந்தனர்.

வெளிநாடுகளில் நடைபெறும் போட்டிகளுக்கும் கோலியுடன் அனுஷ்கா சென்று வந்தார். ஹோலி சதம் அடித்தால் அனுஷ்கா சர்மா 'பிளையிங் கிஸ்' (பறக்கும் முத்தம்) கொடுத்து அவரை பரவசப்படுத்துவார்.

விரைவில் இருவருக்கும் திருமணம் நடைபெற இருப்பதாக கூறப்பட்டது. இந்நிலையில், கோலி - அனுஷ்கா சர்மா காதலில் விரிசல் ஏற்பட்டு பிரிந்து விட்டதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

விரைவில் திருமணம் செய்து கொள்வது பற்றி அனுஷ்கா சர்மாவிடம் ஹோலி சமீபத்தில் பேசி இருக்கிறார்.

ஆனால், அதற்கு ஒப்புக்கொள்ளாத அனுஷ்கா சர்மா, 'என் கவனம் எல்லாம் சினிமா மேல்தான் இருக்கிறது' என்று ஒரே போடாக போட்டு விட்டாராம்.

இது திருமண கனவில் இருந்த ஹோலிக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதனால், கோபம் அடைந்த அவர் அனுஷ்காவுடன் பேசுவதை நிறுத்திவிட்டார். டுவிட்டர், இன்ஸ்கிராம், சமூக வலைதள தொடர்புகளையும் துண்டித்து விட்டார்.

இதன்மூலம் இருவருடைய காதலி லும் விரிசல் ஏற்பட்டுள்ளது அம்பலமாகி இருக்கிறது. மீண்டும் சமரசம் ஏற்படுமோ? அல்லது விரிசல் அதிகமாகுமோ? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். (க)

# உலக, ஆசிய கிண்ணத்துக்கான இந்திய அணி அறிவிப்பு




பங்களாதேஷில் எதிர்வரும் 24ஆம் திகதி ஆசியக் கிண்ண இருபது-20 கிரிக்கெட் போட்டி தொடங்குகிறது.

அத்துடன் இந்தியாவில் அடுத்த மாதம் 15ஆம் திகதி இருபது-20 உலகக் கிண்ண போட்டி தொடங்க இருக்கிறது.

இந்த இரு தொடர் களுக்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

இதில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு வேகப்பந்து வீச்சாளர் மொஹமட் ஷமி அணிக்கு திரும்பியுள்ளார். 2015ஆம் ஆண்டு நடந்த உலகக் கிண்ண போட்டிகளுக்குப் பிறகு விளையாடாமல் இருந்த இவர், அவுஸ்திரேலிய தொடரில் இடம் பெற்றார். எனினும் காயம் காரணமாக நாடு திரும்பினார்.

இந்நிலையில் 100 சதவீத உடற்தகுதி பெறாத நிலையிலும் உலகக் கிண்ண அணிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள அவர், புவனேஸ்வர்குமார் இடத்தை பிடித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான மூன்று இருபது-20 போட்டிகளில் விராட் ஹோலிக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. அவர் இந்த இரு தொடர்களிலும் சேர்க்கப்பட்டுள்ளார். மணீஷ் பாண்டேவுக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை.

**தோனி தலைமையிலான 15 பேர் கொண்ட இந்திய அணி விவரம்:-**

தோனி (தலைவர் - விக்கெட் காப்பாளர்), ரோகித் சர்மா, ஷிகர் தவான், விராட் ஹோலி, அஜிங்கியா ரஹானே, சுரேஷ் ரெய்னா, யுவராஜ் சிங், ஹர்திக் பாண்டியா, ரவீந்திர ஜடேஜா, அஸ்வின், ஜஸ்பிரித் பும்ரா, ஆஷிஷ் நெஹ்ரா, ஹர்பஜன் சிங், மொஹமட் ஷமி, பவன் நெகி. (க)

# கோலாகலமாக நடந்தது ஜடேஜா - ரீவா நிச்சயதார்த்தம்



இந்திய அணியின் நட்சத்திர சகலதுறை வீரர் ரவீந்திர ஜடேஜாவுக்கு ரீவா சோலாங்கி என்ற பெண்ணுடன் நேற்று திருமண நிச்சயதார்த்தம் நடந்தது. ராஜ்கோட்டில் நடந்த நிச்சய தார்த்தத்தில் நெருங்கிய உறவினர் கள் கலந்து கொண்டனர்.

மெக்கானிக்கல் இன்ஜினியரிங் படித்துள்ள ரீவா, UPSC தேர்வுகளுக்காக தன்னை தயார்படுத்திக் கொண்டிருக்கிறார். (க)

# ஐ.சி.சி. ஊழல் தடுப்பு மேற்பார்வை குழுவில் டிராவிட் இணைவு



சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலில் இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய கிரிக்கெட் சபைகளுக்கு அதிக வருவாய் மற்றும் முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் திருத்தம் செய்யப்பட்ட சர்ச்சைக்குரிய விதிமுறையை நீக்க ஷசாங் மனோகர் தலைமையில் நேற்று முன்தினம் நடந்த ஐ.சி.சி. கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்த கூட்டத்தில் ஐ.சி.சி. ஊழல் தடுப்பு மேற்பார்வை குழுவில் இந்திய அணியின் முன்னாள் தலைவர் ராகுல் டிராவிட் சேர்க்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

# ஒன்றாரியோ முதல்வராக தமிழர் தாயகம் செல்வேன்

2018 ஆம் ஆண்டு ஒன்றாரியோவின் முதல்வராக, உங்களை எனது குழுவில் இணைத்து, இலங்கையின் வட-கிழக்கிற்குப் பயணம் செய்வேன் என ஒன்றாரியோ பழைமைவாதக் கட்சியின் தலைவர் பற்றிக் பிறவுன் தெரிவித்தார்.

ஒன்றாரியோ சட்டமன்றத்தில் தமிழர் மரபுரிமை நாள் கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்து உரை நிகழ்த்திய பற்றிக் பிறவுன், 2009 இல் உங்களின் உறவுகளிற்கான குரலாக வெளியி லிருந்து போராடினீர்கள். இப்போது சட்ட மன்றத் தின் உள்ளே இருந்து தமிழர் மரபுரிமை நாளைக் கொண்டாடுகின்றீர்கள்.

நான் முதல்வராக வரும் நாள் வெகுதொலைவில் இல்லை. 2018 இல் நீங்கள் முதல்வரின் வரவேற்பறையில் தமிழர் மரபுரிமை நாளைக் கொண்டாடுவீர்கள் எனத் தெரிவித்தார்.

நான் எதிர்க்கட்சித் தலைவராகப் பதிவி யேற்று இந்த சட்டமன்றத்தினுள் முதன்முறையாக்காலடியெடுத்து வைத்தவுடன், தமிழர் களுடனான இராப் போசன விருந்தைத் தான் முதன் நிகழ்ச்சியாக நிறைவேற்றினேன் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் தனது அமைச்சரவையில் மாத்திரமல்ல, அரச இலாகாக்களின் இயக்குநர் சபைகளிலும் தமிழர்கள் இயக்குநர்களாக மற்றைய சமூகங்களைப் போல பங்குவகிப்பதை உறுதிப்படுத்துவேன் எனவும் பற்றிக் பிறவுன் தெரிவித்தார். (இ)


## விற்பனைக்கு

மில் இயந்திர சாதனங்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 126 7122

(3502)



## பொதுக்கூட்டம்

முறிகண்டீஸ்வரர் ஆலயத்தின் கும்பாபிஷேகம் தொடர்பான ஆலோசனை கூட்டம் இந்து கலாசார திணைக்களத்தின் தலைமையின் சமய தலைவர்களின் ஆசியுடன் நடைபெற இருப்பதால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு: பத்திரிகையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்: ஆலய பரிபாலன சபை,
முறிகண்டீஸ்வரர் ஆலயம், திருமுறிகண்டி.

T.காமராஜ் — தலைவர்
வே.நாகராஜா — செயலாளர்

(சி-3640)



காரைநகர்

## கிழவன்காடு கலாமன்றம்

நடத்தும்

சற்குரு ஸ்ரீ தியாகராஜர் சுவாமிகளின் 169-வது ஆராதனை விழா

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு,காரைநகர்
காலம் : 2016.02.07 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 - 5.30 மணிவரை

நிகழ்ச்சி நிரல்

- மன்றக் கொடியேற்றல்
- தொடக்கவுரை
- மங்கல இசை : ஈழத்துப் பிரபல தவில் நாதஸ்வர கலைஞர்கள்
- இசை அர்ச்சனை : ஈழத்து பிரபல இசைக்கலைஞர்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

குறிப்பு : நிகழ்வுக்கான இலவச போக்குவரத்து கலாமன்ற யாழ்க்கிளையில் (இல.11, கஸ்தூரியார் 1-வது ஒழுங்கை, யாழ்ப்பாணம் – உதயன் பணிமனை அருகிலுள்ள ஒழுங்கை) இருந்து பி.ப 2.30 மணிக்கு ஆரம்பமாகும்.

கிழவன்காடு கலாமன்றம், காரைநகர். (சி-3638)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## கலைப்பீடம்

இரண்டாம் அரையாண்டு விரிவுரைகள் -2013/2014

கலைப்பீட அனைத்து வருட மாணவர்களுக்கான இரண்டாம் அரையாண்டுக்கான (2013/2014) விரிவுரைகள் பின்வரும் திகதிகளில் ஆரம்பமாகின்றன.

1.முதலாம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்களுக்கு- 08.02.2016
2.இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்களுக்கு-10.02.2016
3.நான்காம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்களுக்கு-10.02.2016
4.மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்களுக்கு-29.02.2016

எனவே மாணவர்கள் விரிவுரைகளுக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

பதிவாளர்
02.02.2016

(சி-3641)



## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- அலுவலகச் செய்தியாளர்கள் (உள்ளகம்- பெண்கள்)
- அலுவலகச் செய்தியாளர்கள் (வெளியகம்- ஆண்கள்)

தகைமையும் ஆர்வமும் உடையவர்கள் எதிர்வரும் 09.02.2016 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு வலம்புரி அலுவலகத்திற்கு நேரில் வரவும்

இல.03, 02 ஆம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்

மனிதவள முகாமையாளர்
வலம்புரி



CAPS

SLEAS

தெரிவுப் போட்டி பரீட்சைகளுக்கான வகுப்புக்கள் விரைவில் ஆரம்பம்

பதிவுகள் இடம் பெறுகின்றன

வளவாளர்
பேராசிரியர் மா. சின்னத்தம்பி

CAPS (Near Sampath Bank)
Thirunelvely Junction. Tel: 0773867458/021 205 2262

சிங்கள வகுப்புக்கள் ஆரம்பம்

தமிழ் மொழிமூலம் சிங்களம்
அரசியல் நிர்வாகத்துறை
பொது மக்கள் கலந்துரையாடல்
மேடைப் பேச்சு
முழுமையான நடைமுறையிலான கலந்துரையாடல்

வழிகாட்டுநர்:
கலாநிதி சி. மோகன்
முன்னாள் ஒருங்கிணைப்பு செயலாளர்,
தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சு

ஆரம்பம் 14.02.2016

(3504)


## 5ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு
09.12.1969

இறப்பு
31.01.2011

அமரர் திரு. சண்முகலிங்கம் அரவிந்தன்

திதி:திரியோதசி

எம் அன்பு அரவிந்தன்
இறையுலகு சென்று
ஆண்டு ஐந்து
ஆனது இன்று
எம்மைத் துயரில் ஈர்த்து
ஓம் சாந்தி!

(3489)

அல்லாரை வடக்கு,
மீசாலை.

குடும்பத்தினர்.

## இராசி பலன்

06.02.2016
(தை 23, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு,
திரயோதசி முன்னிரவு 11.33மணிவரை
பூராடம் முன்னிரவு 6.51மணிவரை
சுபநேரம் 3.35-5.05மணிவரை
இராகுகாலம் 9.35-11.05 மணிவரை
சனிப்பிரதோச விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மிருகசீரிடம்,திருவாதிரை<br>இரவு 12.15இற்கு<br>மக-சந் | | |
| சூரி | | | ராகு |
| சந்<br>புத<br>சுக் | சனி | செவ் | குரு |

**மீனம்** – வீட்டை சீரமைப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள்,பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும்.

**மேடம்** – தொழில் ரீதியாக ஏற்பட்ட மறைமுக போட்டிகளைச் சமாளிப்பீர்கள்,பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு.

**இடபம்** – கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, பயணங்களின் போது பொருட்களில் கவனம் அவசியம்,அடுத்தவர் விவகாரங்களில்தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்** – பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்,முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்** – தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம்,பணவரவால் சந்தோசமடைவீர்கள்,எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் நாள்,பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள்.

**கடகம்** – வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம்,மறைமுக எதிர்ப்புகள் மாறும்,வழிபாடு சிறப்பினை வழங்கும்,செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம்.

**மகரம்** – பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.,சுபவிரயங்கள் கூடும் நாள்.

**சிம்மம்** – சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்,பணத்தேவைகள் பூர்த்தியாகும்,தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம்,பிறர்க்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** – மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் கட்டுப்பாடு தேவை,இரவு-பகல் பாராது பாடுபடுவீர்கள்.

**விருச்சிகம்** – குடும்ப மகிழ்ச்சி கூடும்,உறவினர் வருகையுண்டு,தனவரவு திருப்திகரமாக அமையும்,சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்** – எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க சகோதர வழியில் உதவிகள் கிடைக்கலாம், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்,சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள்.

**கன்னி** – பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்,பேச்சில் கனிவு பிறக்கும்,தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம்.





கரவெட்டி, துன்னாலை வடக்கு மெதடிஸ்தமிஷன் தமிழ்க்கலவன்பாடசாலைக்கு மாநாட்டுமண்டப மேடை அமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபனின் 2015ஆம் ஆண்டுக்கான குறித்தொதுக்கப்பட்ட நிதியுதவியின் கீழ் அமைக்கப்பட்ட மாநாட்டுமண்டபமேடையின் திறப்புவிழா அண்மையில் பாடசாலையில் இடம்பெற்றது. பாடசாலையின் அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர்பா.கஜதீபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டதுடன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும், கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## வேலை பெற்றுத்தருவதாகக் கூறி

# பணம் மோசடி

## இளைஞர், யுவதிகள் ஏமாற வேண்டாம்

யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் வங்கி ஒன்றில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி இளைஞர், யுவதிகளிடம் இருந்து 10 இலட்சத்திற்கும் அதிகமான பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை பாதிக்கப்பட்ட இளைஞர், யுவதிகள் தமது பிரதேசங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளனர். குறித்த சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 3 மாதங்களாக யாழ். மாவட்டத்தில் உள்ள தனியார் வங்கி ஒன்றின் கிளை அலுவலகங்களுக்கு வேலைக்கு ஆட்சேர்க்கப்படுவதாகக்கூறி பரவலாக இளைஞர், யுவதிகளிடம் தொலைபேசி ஊடாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் வங்கி ஒன்றின் பெயரைக்கூறி அதில் வேலை செய்வதற்கு முதலில் மடிக்கணனியும் மோட்டார் சைக்கிளும் தருவதற்காக குறித்த ஒரு தொகைப் பணத்தை வங்கியில் வைப்புச் செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டதையடுத்து அதனை நம்பிய இளைஞர்கள் சிலர் குறித்த வங்கிக் கணக்கில்பணத்தைவைப்புச்செய்துள்ளனர்.

பின்னர் வங்கியில் வேலையில் சேர்வதற்காக குறித்த இளைஞர்கள்கோரியபோது வேறுவிபரங்களை கூறி மேலதிகமாக பணத்தை மீண்டும் வைப்பிலிடுமாறு கூறியுள்ளனர்.

இதில் சந்தேகமடைந்த இளைஞர், யுவதிகள் விழிப்படைந்து யாழ்ப்பாணத்தில் உள்ள வங்கிக்கு சென்று சம்பவத்தை கூறியுள்ளனர்.

இவ்வாறான செயற்பாடுகள் எவையும் தமது வங்கியால் மேற்கொள்ளப்படுவதில்லை என குறித்த வங்கி முகாமையாளர் தெரிவித்ததை அடுத்து ஏமாற்றமடைந்த இளைஞர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த மோசடி செயற்பாட்டில் இதுவரை யாழ்.மாவட்டத்தில் 20 இற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் பாதிப்படைந்துள்ளனர்.

இந்த மோசடிச் சம்பவம் தொடர்பாக குறித்த தனியார் வங்கியின் முகாமையாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

தமது வங்கியூடாக முகவர்களை வைத்து எந்தவிதமான ஆட்சேர்ப்புக்களும் நடைபெறுவதில்லை என்றும் இவ்வாறு வேலை பெற்று தருவதாக யார் கூறினாலும் அதனை நம்ப வேண்டாம் என்றும் அவ்வாறு வருபவர்கள்தொடர்பாகஎமக்குஅறியத் தரவேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும் கடந்த சில மாதங்களாக இவ்வாறு பணத்தை செலுத்திவிட்டு ஏமாற்றம் அடைந்த பின்னர் எம்மிடம் பலர் தொடர்பு கொண்டுள்ளனர். அவர்களுக்கும் நாம் விளக்கங்களை கொடுத்துள்ளோம் என மேலும் தெரிவித்தார். (இ-9)

## மாணவர் விபரம் வெளியிடப்பட்டது

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் அண்மையில் நடத்தப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவுப்பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களில் முதல்மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

பேச்சுப்போட்டி

கீழ்ப்பிரிவு

உ.சுபிதன்(யாழ்.இந்துக் கல்லூரி), சி.சுலக்சினி (யாழ்.மானிப்பாய் மகளிர் கல்லூரி), ச.தர்சனா (யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை)

மத்தியபிரிவு

து.ரூபவதனா (யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை), அ.நவோமியா (யாழ்.சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), த.கலியுகன் (யாழ். உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி)

மேற்பிரிவு

இ.கஜனி (யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), து.சுதர்சன் (யாழ்.சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), வீ.கஜந்தினி (யாழ்.வட்டு. மத்திய கல்லூரி)

கட்டுரைப்போட்டி

ஜீ.கீர்த்திகா (யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), இ.சிவரஞ்சினி (யாழ்.மானிப்பாய் மகளிர் கல்லூரி),வீ.கஜந்தினி (யாழ். வட்டு. மத்திய கல்லூரி). (இ-5)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்.பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு திக்கமுனை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் க.நித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீராமச்சந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் கிளிநொச்சி கிளை முகாமையாளர் என்.குகதாசன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. அதிபர் திருமதி.வி.சண்முகரத்தினம் தலமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்கஅதிபர்நா.வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யாழ்.அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் எஸ்.திரிகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் என்.தெய்வேந்திரராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக அவுஸ்திரேலியா சிட்னியில் பணிபுரியும் வைத்திய நிபுணரும் பழைய மாணவருமான டாக்டர்.ஆ.புண்ணிய மூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார்.

மாணவர்களுக்குரிய பரிசில்களை திருமதி பாமா தெய்வேந்திர ராஜா வழங்கி கௌரவிக்கவுள்ளார். (இ-5)

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

யாழ்.வட்டு மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. அதிபர் திருமதி.பு.பஞ்சாட்சரம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்வி அலுவலக கல்வி அபிவிருத்தி, பிரதிக் கல்வி பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக சங்கானை கோட்டக் கல்வி அதிகாரி நோபேட் உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளார். கௌரவ விருந்தினர்களாக வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியசாலை வைத்திய கலாநிதி திருமதி.ஆர்.காந்தநேசன், இலங்கை வங்கி வட்டுக்கோட்டைக் கிளையின் முகாமையாளர் வே.புவனேந்திரராசா, வட்டுக்கோட்டை தபால் அதிபர் சிகண்ணதாசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## தொற்றா நோய்கள் குறித்த விழிப்புணர்வு நடைபயணம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுகாதார அமைச்சும் யாழ்.மருத்துவ பீடத்தின் சமுதாய மற்றும் குடும்பநல மருத்துவத்துறையும் யாழ்.பல்கலைக்கழக 35 ஆம் அணி மருத்துவ மாணவர்களுடன் இணைந்து நடத்தும் தொற்றா நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு ஆரோக்கிய நடைபயணம் ஒன்று எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

தொற்றா நோய்களில் இருந்து விடுபடுவோம் என்ற தொனிப்பொருளில் அமைந்த இவ் விழிப்புணர்வு நடைபயணமானது அன்றைய தினம் காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் பண்ணை வீதியில் அமைந்துள்ள வட மாகாண சுகாதார அமைச்சு அலுவலகத்திலிருந்து ஆரம்பமாகவுள்ள இந் நடைபயணமானது கே.கே.எஸ்.வீதி கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.மருத்துவ பீடத்துடன் நிறை வடையவுள்ளது.

பல்வேறுபட்ட சமூகத்தினரும் பங்குபற்றவுள்ள இவ் ஆரோக்கிய நடை பயணத்தில் பொது மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர். (இ-5)

## ஆராதனை விழா

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் சற்குரு ஸ்ரீ தியாகராஜா சுவாமிகளின் 169 ஆவது ஆராதனை விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை காரைநகர் கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் நடைபெறவுள்ளது. (இ-5)




## சைவசித்தாந்த நூல்-இறுவெட்டு வெளியீடும் ஆடல் அளிக்கையும்

யாழ்.திருமறைக்கலாமன்றம் நடத்தும் மெய்யியல் துளிகள் சைவசித்தாந்த நூல்-இறுவெட்டு வெளியீடும் ஆடல் அளிக்கையும் எதிர்வரும்6 ஆம்திகதி இன்று மாலை 4.30 மணிக்கு இல. 286 பிரதான வீதியில் அமைந்துள்ள யாழ்.திருமறைக் கலாமன்றம் கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சைவசித்தாந்த ஆங்கிலக் கட்டுரைகளின் தொகுப்பு என்ற நூல் வெளியீடும், உமாபதி சிவாச்சாரியார் அருளிய வினா வெண்பா என்ற இறுவெட்டு வெளியீடும், திருமதி அகல்யா இராஜபாரதி நெறியாள்கையில் திருமறைக் கலாமன்றக் கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவர்கள் வழங்கும் பொழிவும் தெளிவும் என்ற ஆடல் அளிக்கை என்பன இடம்பெறவுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் வரவேற்புரையினை திருமதி வைதேகி செல்மர் எமில் நிகழ்த்தவுள்ளார்.


சிறப்புரையினை வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் நிகழ்த்தவுள்ளார். தொடர்ந்து நூல் அறிமுகவுரையினை யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் பேராசிரியர் ஏ.என்.கிருஸ்ணவேணி நிகழ்த்தவுள்ளதுடன் இறுவெட்டு அறிமுகவுரையினை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் தி.செல்வமனோகரன் நிகழ்த்தவுள்ளார். (இ-5)





கோண்டாவில் மேற்கு மக்கள் முன்னேற்ற கழகம் சனசமூக நிலையத்தின் 43 ஆவது ஆண்டு விழாவும் சட்டத்தரணி ஞானலோஜினி சிவஞானத்தின் பாராட்டு விழாவும் அண்மையில் நிலையத்தின் தலைவரான முன்னாள் நல்லூர் பிரதேசசபை உறுப்பினர் தா.தியாகமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற போது...

# தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்ட முன்வரைபு



தமிழ் மக்கள் பேரவையின் நிபுணர் குழுவால் தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வுத் திட்ட முன்வரைபு 31.01.2016 அன்று பிற்பகல் 3 மணியளவில் யாழ்.வீரசிங்கம் மண்ட பத்தில் வெளியிடப்பட்டது.

(தொடர்ச்சி)

## 16. அரசிறை சமஷ்டி

16.1 மாநிலங்கள் தமது அதிகாரங்களை சுயாதீனமாக பிரயோகிக்க கூடியதாக இருப்பதை அரசிறை ஏற்பாடுகள் உறுதிப்படுத்த வேண்டும்.

16.2 அரசிறை சமநிலைப்படுத்துகை மற்றும் சமாந்திர சமத்துவம் ஆகியவற்றை அமுல்படுத்துவதற்கான வழிமுறைகள் முன்னெடுக்கப்படும்போது வடக்குக் கிழக்கில் போரினால் ஏற்பட்ட தாக்கம் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

16.3 அரசிறை உறவுகள் தொடர்பான விடயங்கள் தொடர்பில் மத்திய அரசாங்கத்திற்கு பணிக்கும் தன்மை வாய்ந்த சிபாரிசுகளை மேற்கொள்ளும் அதிகாரங்களைக் கொண்ட மத்திய நிதி ஆணைக்குழு உருவாக்கப்படல்வேண்டும்.

16.4 வடக்குக் கிழக்கு மாநிலமானது சர்வதேசத் திடமிருந்து நேரடியாக கடன் மற்றும் உதவி பெறுவதற்கான அதிகாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் வடக்கு கிழக்கின் கடன் சுமையானது மத்திய அரசாங்கதின் பொறுப்புடைமையாக இல்லாத வேளையில் மத்திய அரசாங்கத்தில் தலையீடு இன்றி சர்வதேச உதவிகளை நேரடியாகப் பெறுவதற்கான உரிமையையும் கொண்டிருத்தல வேண்டும். கடன் பெறுதலானது மத்திக்கு தாக்கம் ஒன்றை ஏற்படுத்தும் தருணத்தில் மாநிலமானது மத்திய அரசாங்கத்துடன் ஆலோசனை மேற்கொள்ள வேண்டும்.

மத்தி - மாநிலத் திற்கிடையிலான பிணக்குகளைத் தீர்த்தல்

## 17. அரசியலமைப்பு நீதிமன்றம்

17.1 அரசியலமைப்பு தொர்டர்பான சகல விடயங்கள் சம்பந்தமாக தீர்ப்பு வழங்குவதற்கான முழுமையான நியாயாதிக்கத்தை கொணடதாக அரசியலமைப்பு நீதிமன்றமொன்றானது இருக்க வேண்டும் என்பதுடன அடிப்படை உரிமைகள் மற்றும்எழுத்தாணை நியாயாதிக்கம்தொடர்பான இறுதி மேன் முறையீட்டு நீதிமன்றமாக வும் அது அமைந்திருக்க வேண்டும்.

17.2 மத்திய பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டவாக்க மன்றங்களினால் ஆக்கப்படும் சட்டவாக்கங்களை நீதிமுறை மீளாய்வு செய்கின்ற நீதிமன்றமாகவும் அரசியலமைப்பு நீதிமன்றம் அமைந்திருக்க வேண்டும்.

17.3 அரசியலமைப்பு நீதிமன்றத்துக்கு மேற்கொள்ளப்படும்நியமனங்களானவை இலங்கையின் பன்மைத்துவ தேசியத் தன்மையை பிரதிபலிப்பதாக அமைந்திருத்தல் வேண்டும்.

17.4 பிரதமர் மற்றும் மாநிலங்களின் முதலமைச்சர்களைக் கொண்ட அமையமானது (Colloquium) புலமைவாய்ந்த சட்டவாளர்களிலிருந்து 9 உறுப்பினர்களை அரசியலமைப்பு நீதிமன்றத்துக்கு நியமனஞ்செய்ய வேண்டும். முதலமைச்சர்களும் பிரதமரும் முறையே மாநில நல்லாட்சி பேரவையினதும் அரசியலமைப்புச் சபையினதும் ஆலாசனைகளின் பேரில் செயற்பட வேண்டும்.

17.5 வடக்கு-கிழக்கு மாநில முதலமைச்சரானவர் சமஷ்டி ஏற்பாடுகளின் சமச்சீரற்ற தன்மையின் அடிப்படையில் அரசியலமைப்பு நீதிமன்றத்திற்கு 3 உறுப்பினர்களை நியமித்தல் உரித்துடையவராதல் வேண்டும். வடக்கு-கிழக்கு மாநிலம் தொடர்பான வழக்கொன்றின் தீர்ப்பில் வடக்கு கிழக்கு மாநில முதலமைச்சரால் பிரேரிக்கப்பட்ட 3 நீதிபதிகளில் குறைந்தது 2 பேராவது ஒத்துப்போயிருத்தல்வேண்டும்.

17.6 பாராளுமன்றம் அல்லது மாநில சட்டசபையினால் சட்டம் ஒன்று ஆக்கப்படும் போது அதன் அரசியலமைப்புக்கமைவாந்தன்மை பற்றி எவரேனும் ஒரு பிரஜை அரசியலமைப்பு நீதிமன்றில் வழக்கிடலாம்.

## 18. நீதித்துறை

18.1 ஒவ்வொரு மாநில அரசுக்கும் ஒரு மேன்முறையீட்டு நீதிமன்றம் இருக்க வேண்டும். முதனிலை நீதிமன்றங்கள், மேல் நீதிமன்றங்கள், நியாய மன்றங்கள் மற்றும் நீதி நிறுவனங்கள் கையாண்ட வழக்குகள், வழக குரைப்புகள் மற்றும் விடயங்கள் தொடர்பில் மேன்முறையீடு, மீளாய்வு மற்றும் முன்னிலை மீட்பு செய்வதற்கான நீதிமன்றாகவும் முதனிலை நீதிமன்றங்கள், மேல் நீதிமன்றங்கள், நியாய மன்றங்கள் மற்றும் நீதி நிறுவனங்கள் விடுகின்ற சட்ட மற்றும் நிகழ்வுப் பிழைகளை சீர் செய்கின்ற மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தை கொண்ட நீதிமன்றாகவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் செயற்படும். மேன்முறையீட்டு நீதிமன்றம் அடிப்படை மனித உரிமைகள் மற்றும் எழுத்தாணை நியாயாதிக்கம் தொடர்பில் மாநிலத்துக்குள் முதனிலை நீதிமன்றாகவும் செயற்படும்.

18.2 பாராளுமன்றமும் மாநில சட்டவாக்க சபையும் சட்டத்தால் அளிக்கப்படுகின்ற தத்துவங்கள் தொடர்பில் முதனிலை மற்றும் மேன்முறையீட்டு அதிகாரங்களை பிரயோகிக்கின்ற நீதிமன்றமாக மேன்முறையீட்டு நீதிமன்றம் விளங்கும்.

18.3 மத்திக்கான நீதித்துறை உயர் நீதிமன்றத்தை மாத்திரம் கொண்டதாகவும் அது மேன்முறையீட்டுக்கான இறுதி நீதிமன்றமாகவும் விளங்கும்.

18.4 மாநிலத்துக்கான மாநில முதலமைச்சருடன் கலந்துரையாடி நல்லாட்சிக் கான மாநில அவையினால் நியமிக கப்படும் மாநில நீதிச் சேவை ஆணைக் குழு தன்ன கத்தே மேன்முறையீட்டு நீதி மனறத் தலைவரோடு மேன்முறையீட்டு நீதிமன்றின் அடுத்த இரண்டு சிரேஷ்ட நீதிபதிகளைக் கொண்டிருக்கும்.

18.5 மாநிலத்திற்கான ஏனைய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளையும் அதன் கீழ்நிலை நீதிமன்ற நீதிபதிகளையும் நியமிக்கின்ற பொறுப்பினை மாநில நீதிச்சேவை ஆணைக்குழுவானது கொண்டிருக்கும். நீதிபதிகளுடைய இடமாற்றம் தொடர்பில் மாநில நீதிச் சேவை ஆணைக்குழுவானது மத்திய நீதிச்சேவை ஆணைக்குழுவோடு கலந்துரையாடல் செய்யும்.

## 19. நல்லாட்சிக்கான மாநில சபை

19.1 முக்கியமான அரசாங்க பதவிகள், அரசாங்க அமைப்புக்களிற்கான நியமனங்கள் சுயாதீனமாக இருப்பதை உறுதிப்படுத்த நல்லாட்சிக்கான மாநில சபை ஒனறு இருத்தல் வேண்டும்.

19.2 அமைவு: முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், மாநில சபையின் முதல்வர், முதலமைச்சராலும், எதிர்க் கட்சித் தலைவராலும் கூட்டாக நியமிக்கப்படும் திறமை வாய்ந்த துறை சார் நிபுணர்கள் எட்டுப்பேரும்கொணடதாக அமையும். மேற்கூறிய எட்டு சிவில் அமைப்பைச் சார்ந்தவர்களில் ஆகக் குறைந்தது மூன்றுபெண்களைக்கொணடதாக இருத்தல் வேண்டும்.

19.3 சபையின் பொறுப்பானது: மாநில நீதிச் சேவை ஆணைக்குழு, மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர், பொதுச்சேவைகள் ஆணைக் குழு, பொலிஸ் சேவைகள் ஆணைக்குழு, மாநில மன்றாடியார், மாநில பொலிஸ் ஆணையாளர், மாநில மனித உரிமைகள் ஆணைக்குழு போன்றவற்றிற்கு உறுப்பினர்களை நியமித்தல்.

## 20. மாநில சட்டமா அதிபதி

20.1 நல்லாட்சிக்கான மாநில சபையினால் பரிந்துரைக்கப்படும் ஒருவர் முதலமைச்சரினால் மாநில சட்டமா அதிபதியாக நியமிக்கப் படுவார். அவர் மாநில சட்ட சபையினால் நிறைவேற்றப்படும் சட்டங்கள் அரசியலமைப்பிற்கு அமைவான தன்மை பற்றிய ஆலோசனைகளை முதலமைச்சருக்கு வழங்குவார்.

20.2 பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படும் சட்டங்கள் எதுவும் அரசியலமைப்புக்கு முரணானதாகக் கருதுமிடத்து மாநில சட்டமா அதிபதி முதலமைச்சருடனான கலந்தாலோசனையின் பின்னர் அரசியலமைப்பு நீதிமன்றத்தில் வழக்கினைத் தாக்கல் செய்யலாம்.

## 21. அவசர கால அதிகாரங்கள்.

21.1 மாநில அரசாங்கம் ஒன்று சமஷ்டியில் இருந்து பிரிவதற்கான மாநில நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது என்றும் அவ்வாறான பிரிவு உடனடியானதொன்று என மத்தியின் தலைவர் திருப்திப்படுமிடத்து, அவர் அவசரகால நிலையினைப் பிரகடனப்படுத்தலாம். அவ்வாறு பிரகடனப்படுத்துமிடத்து ஆளுநர் நிறைவேற்று அதிகாரங்களையும் மற்றும் முதலமைச்சரினதும் மாநில அமைச்சரவையினதும் அதிகாரங்களையும்அந்நிலைமைகளுக்கு ஏற்றவாறு, கையகப்படுத்தலாம்.

21.2 அவசரகால நிலைப் பிரகடனமெதுவும் அரசியலமைப்பு நீதிமன்றத்தினால் தன்னியக்கமாகவே பிரகடன தினத்தில் இருந்து ஒரு மாத காலத்தினுள் மீளாய்விற்கு உட்படுத்தப்படல்வேணடும். அரசியலமைப்பு நீதிமன்றம்அவசரகால நிலைப் பிரகடனம் சரியானது எனத் தீர்மானிக்குமிடத்து மத்திய அரசின் தலைவர் மாநில சட்ட சபையைக் கலைத்து அவசர கால நிலைப் பிரகடனத் தினத்தில் இருந்து ஆறு மாத காலப் பகுதியினுள் தேர்தலை நடாதுதல் வேண்டும். அவசர கால நிலைப் பிரகடனம் நியாயப்படுத்த முடியாது என அரசியலமைப்பு நீதிமன்றம் தீர்மானிக் குமாயின் அவசர கால நிலை உடனடியாக அதன் சட்ட அந்தஸ்தையும் வலுவையும் இழந்து விடும்.

21.3 மேலே கூறியவாறு அவசரகால நிலை வலு விழந்ததும், முதலமைச்சரும் மாநில அமைச்சரவையும் தொடர்ந்து பதவியில் இருப்பதோடு அவர்கள் இடைக்காலப் பகுதியில் நடைபெற்ற எந்த செயல், செயற்பாடுகளுக்கும் கட்டுப் படமாட்டார்கள்

## 22. மத்தி-மாநிலங்கள், மாநிலங்களுக்கிடையேயான ஒத்துழைப்பு

22.1 மாநிலங்களுக்கு இடையேயும் மாநிலங்களுக்கும் மத்திக்கும் இடையேயும் ஏற்படும் பிணக்குகளை கலந்தாலோசித்து சுமுகமான தீர்வு காண் பதற்கு விசேட சபைகளும் ஏற்பாடுகளும்செய்யப்படல்வேணடும்.

22.2 பிணக்குகளைத் தர்ப்பதற்கான வெளி ஒனறை உருவாக்கும் நோக்கில் மத்திய அரசினால் முதலமைச்சரகளின் நிரந்தர மாநாடு ஒன்று கூட்டப்ப டல் வேண்டும்.

22.3 கல்வி, போக்குவரத்து போன்ற விடயங்களிற்கு தேவை ஏற்படும் இடத்து விசேட சபைகள் உருவாக்கப்படலாம்.

## 23. அரசியலமைப்புத் திருத்தங்கள்

23.1 மாநிலத்தின் புவிசார் ஆட்புலம், மாநிலத் தின் அதிகாரம் மற்றும் பிராந்தியம் தொடர்பான அனைத்து விடயங்கள் தொடர்பில் பாராளுமன்றம் அரசியல் அமைப்பல் மாற்றம் எதனையும் முன்மொழியுமிடத்து அத்திருத்தங்கள் பாராளுமன்றத்தில் இரண்டு சபைகளிலும் 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும்என்பதுடன் அனைத்துப் மாநிலங்களினதும் சட்டவாக்க சபைகளிலும் 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படவும் வேண்டும். மேலே விபரிக்கப்பட்டவாறு மத்தியில் ஏதாவது அரசியலமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்டு அத்திருத்தம் ஏதாவது ஒரு மாநிலத்தில் அல்லது மாநிலங்களில் நிறைவேற்றப்படாது விடின் அம் மாநிலத்திற்கு அல்லது மாநிலங்களுக்கு ஏற்புடையதாகாது.

23.2 ஏனைய அரசியலமைப்புத் திருத்தங்கள் பாராளுமன்றத்தின் இரண்டு அவைகளிலும் 2/3 பெரும்பான்மையுடன்நிறைவேற்றப்படின் ஏற்றுக் கொளளப்பட வேண்டும்.

## 24. வடகிழக்கு மாநில ஆட்சி நடைமுறைக்கான சில முன் மொழிவுகள்.

மேலே குறிப்பிடப்பட்டது போல் தங்கள் மாநிலங்களில் ஆட்சியினைக் கொண்டு நடாத்துவதற்கு அந்தந்த மாநிலங்கள் ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

1. சட்டவாக்க சபையிலும், மாநில அமைச்சரவையிலும் ஆகக் குறைந்தது 1/3 பங்குஆசனம்பெண்களுக்கு ஒதுக்கப்படும்.

2. முதலமைச்சர் தவிர்ந்த ஆகக் கூடுதலாக 14 அமைச்சர்களைக் கொணட மாநில அமைச்சரவை. உப அமைச்சர் அல்லது அது போன்ற அமைச்சர்கள் இடம் பெற மாட்டார்.

3. ஐக்கிய நாடுகள் சபையால் தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களுக்கு என வகுக்கப்பட்ட நியமங்களுக்கு அமைவாக உருவாக்கப்பட்ட மாநில மனித உரிமைகள் ஆணைக்குழுவால் கண்காணிக்கப்படுவதுமாகியதும் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் வலுவாக்கக் கூடியதுமான பொருளாதார, சமூக, கலாசார உரிமைகளை உள்ளடக்கிய மாநில மனித உரிமைகள் பட்டயம் ஒன்று ஏற்படுத்தப்படும்.

4. மக்களின் ஆலோசனைகளுடன் சாதி பாகுபாட்டை இல்லாதொழிப் பதை வலியுறுத்தும் நடவடிக்கைகள் மாநிலத்தின் வழிகாட்டும் கோட்பாடுகள் ஆவணத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

5. ஊழலுக்கெதிரான இந்திய செயற்பாட்டாளர்களால் முன் வைக்கப்பட்ட இந்திய ஜன் லோக்பல் சட்டமூலத்தை மாதிரியாகக் கொண்ட சுயாதீன பிரஜைகள் குறைகேள் அதிகாரி நியமிக்கப்படுவார்.

6. நிலையான அபிவிருத்தியையும் பசுமை வளர்ச்சியையும் உறுதிப்படுத்தக்கூடிய அதிகாரங்களை உடைய சுயாதீன பிராந்திய சுற்றுப் புறச்சூழல் அதிகாரசபை ஏற்படுத்தப்படும்.

(முற்றும்)

# மன்னார் பெரிய கடைப்பகுதியில் மதுபான நிலையம் இரவு நேரத்தில் பெண்கள் செல்ல முடியாத நிலை

## மின்விளக்குகள் இன்றி அசௌகரியம்



மன்னார்-பெரியகடை பகுதியில் தெரு மின் விளக்குகள் இன்மையினால் தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். சுமார் 200 குடும்பங்கள் வசிக்கும் இப்பகுதியில் மது விற்பனை நிலையம் ஒன்று காணப்படுவதுடன், இரவு நேரங்களில் மதுப்பிரியர்கள் மதுவைவேண்டிக் கொண்டு சென்று வீதியோரங்களில் வைத்து அருந்துகின்றனர்.

இதனால் அப்பகுதியில் பெண்கள் இரவு நேரங்களில் அவசர தேவைகளுக்காக வீட்டை விட்டு வெளியில் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. மது விற்பனை நிலையம் அமைந்துள்ள பிரதான வீதியில் மட்டும் தெரு மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதாகவும், ஏனைய வீதிகளுக்கு மின்விளக்குகள் பொருத்தப்படவில்லை எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை பெரிய கடை பகுதியில் இரவு நேரத்தில் சந்தேகத்திற்கிடமானவர்களின் நடமாட்டங்கள் அதிகரித்துள்ளதாகவும் திருட்டுச் சம்பவங்களும் இடம்பெறுவதாகவும் அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்த கிராமத்திற்கு தெரு மின் வளக்குகளை பொருத்துமாறு பெரிய கடை கிராம அலுவலர் ஊடாக பல தடவைகள் மன்னார் நகர சபையின் செயலாளரின் கவனத்திற்கு கொண்டு சென்ற போதும் இது வரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என விசனம் வெளியிட்டுள்ள மக்கள்,

குறித்த பகுதிக்கு விரைவில் மின் விளக்குகளை பொருத்தி அங்கு இடம்பெறும் குற்றச்செயலகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.(2-281)

# மணற்குடியிருப்பு மதுபான விற்பனை தற்காலிகமாக இடைநிறுத்தம்

## முல்லை.அரசாங்க அதிபர் கடிதம்

(சோலைநகர்)

முல்லைத்தீவு மணற்குடியிருப்புப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட மதுபானசாலை உடனடியாக அகற்றப்படவேண்டும் என அரசாங்க அதிபருக்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு அமைய முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் மேற்படி மதுபான சாலையின் விற்பனையை 03.02.2016 முதல் தற்காலிகமாக இடைநிறுத்துமாறு அறிவித்துள்ளார்.

மேற்படி இடைநிறுத்த அறிவித்தல் கடிதம் மதுபான நிலைய உரிமையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் இதன் பிரதிகள் வடக்கு மாகாண உதவி மது வரி ஆணையாளர், மதுவரி அத்தியட்சகர்,நாடாளுமன்ற உறுப்பினர், வடக்கு மாகாண சபை உறுப்பினர், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம், பங்குத்தந்தை ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கை கிடைக்கும்வரை மதுபான விற்பனையைத் தற்காலிகமாக இடைநிறுத்துமாறு அரசஅதிபர் அறிவித்துள்ளார்.

மேற்படி கடிதத்தின் பிரகாரம் நேற்று முன்தினம் மதுபான சாலை மூடப்பட்டிருந்ததாகத் தெரியவருகிறது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், பொது அமைப்புக்களால் குறித்த மதுபான சாலை அகற்றப்பட வேண்டுமென விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக தற்போது இது சாத்தியமாகியுள்ளது என்று தெரிவித்துள்ளார். (3-2-301-281)




அனைத்து இன,மத பிரதிநிதிகளை உள்ளடக்கி

# நல்லிணக்க சமாதானக்குழு முல்லைத்தீவில் அங்குரார்ப்பணம்

(வற்றாப்பளை)

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முள்ளியவளை வடக்கு கிராமத்தில் கரித்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் சர்வமத சகவாழ்வு எனும் கருத்திட்டத்தின் கீழ் மதங்கள் மற்றும் இனங்களை ஒன்றிணைத்து நல்லிணக்க சமாதானக்குழு எனும் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் முள்ளியவளை வடக்கு பொது நோக்கு மண்டபத்தில் கரித்தாஸ் நிறுவன திட்ட இணைப்பாளர் க.கரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்விலேயே இவ்வமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நாடுமுழுவதிலுமுள்ள 13 மறை மாவட்டங்களிலும் 83 கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சர்வமத சகவாழ்வு எனும் செயற்றிட்டத்திற்கு அமைவாகவே இக்கிராமத்திலும் இவ்வமைப்பு உருவாக்கப்பட்டது.

இவ்வமைப்பின் தலைவராக கா. சிவகுமார்,செயலாளராக சு.சுபா, பொருளாளராக அ.யூட்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இக்கூட்டத்திற்கு முள்ளியவளை வடக்கு கிராம அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (2-3-310)

# கண்ணீர்விட்டு துயருறும் மக்களுக்கு அரசாங்கம் பதில் சொல்ல வேண்டும்

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

நல்லாட்சி அரசாங்கத்தால் மக்களின் கண்ணீருக்கு பதிலளிக்க முடியவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று முன் தினம் நடைபெற்ற காணாமல் போனவர்களின் உறவினர்களின் பகிஷ்கரிப்பு அமைதிப் போராட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையினுடைய சுதந்திர தினத்தன்று தங்களது சுதந்திரங்களையும் தங்களது பிள்ளைகளையும் இழந்த தாய்மார்கள் கணவன்மாரை ஒப்படைத்த மனைவிமார்கள் தங்களது நிலையை ஒரு அடையாளமாக அரசாங்கத்திற்கு காட்டுவதற்கு இறங்கியுள்ளார்கள்.

கடந்த ஒரு வருட காலமாக இம் மக்களின் கண்ணீருக்கும் துயரத்திற்கும் இந் நல்லாட்சி அரசாங்கத்தால் பதிலளிக்க முடியவில்லை.

கடந்த 7 வருடங்களாக தமது பிள்ளைகளை கண்டுபிடித்துத்தரக் கோரி தமிழ் மக்கள் நடத்துகின்ற போராட்டங்களுக்கு அரசு செவி சாய்ப்பதாய் இல்லை.


இன்றைய சுதந்திர தினத்தை ஒரு கறுப்பு நாளாக அல்லது தமக்கு சுதந்திரமற்ற நாளாக கொண்டாடுவதில் எவ்வித பிழையும் இல்லை என எமக்கு தோன்றுகிறது.

இலங்கை என்கிற நாடு கண்ணீர் விட்டு அழுத மக்களுக்கு உறவுகளை தேடிக் கொண்டிருக்கின்ற மக்களுக்கு பதில் சொல்ல வேண்டும் என அவர் தெரிவித்தார். (2-281)

முல்லைத்தீவு,முள்ளியவளை பிரதேசங்களில்

# மரமடுவங்களை நிறுவுவதன் ஊடாக விறகு,மரத்தேவைகளை பூர்த்தி செய்யுங்கள்

## பிரதேச மக்கள் கோரிக்கை



(வற்றாப்பளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை,முல்லைத்தீவு ஆகிய நகரப்பகுதிகளில் மரமடுவங்களை நிறுவி மக்களின் அன்றாடவிறகுத் தேவைகள்,ஏனைய மரத் தேவைகளை நிவர்த்தி செய்ய வனவள பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள்நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மேற்படி பிரதேசங்களில் பெரும்பாலும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர்.

இம்மக்கள் தமது சமையல் எரிபொருள் தேவைக்காக விறகுகளை பயன்படுத்தி வருகின்றனர்.

அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய இடங்கள் இல்லாத காரணத்தால் காட்டுப்பகுதிக்குள் செல்கின்றனர்.

இவ்வாறு விறகு தேவைக்காக காடுகளினுள் செல்லும் மக்களை வனவள அதிகாரிகள்,பொலிஸார் நாளாந்தம் கைது செய்யும் நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன.

இதன்காரணமாக மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

அத்துடன் இதை சாதகமாகப் பயன்படுத்தும் சட்டவிரோத செயல்களில் ஈடுபடும் கசிப்பு உற்பத்தியாளர்கள்,மணல்,மரம் என்பனவற்றைக் கடத்துவோர் பொது மக்களின் போர்வையில் காடுகளினுள் உட்பிரவேசித்து தமது கைங்கரியங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் அப்பாவிப் பொதுமக்கள் பல்வேறு சிக்கல்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

அத்துடன் இப்பிரதேசத்தில் வேலை வாய்ப்பற்ற கணிசமானோர் விறகுகளை வெட்டி அவற்றை விற் பனை செய்வதன் ஊடாக தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கருத்தில் கொண்டு குறித்த பிரதேசங்களில் மர மடுவங்களை நிறுவுவதுடன்விறகு வியாபாரிகளை இனம்கண்டு அவர்கள் விறகு வியாபாரத்தை மேற்கொள்ளக்கூடிய வகையில் அனுமதிகளை வழங்குவதன் ஊடாக இயற்கை வளமான காட்டு வளத்தைப் பாதுகாப்பதன் மூலம் சட்ட விரோத நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியுமென பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (2-3-310)

# மன்னார் மாவட்டத்திற்கு 4கோடி ரூபா நிதியொதுக்கீடு

## கட்டடங்கள் அமைப்பதற்கு

(மல்லாவி)

வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் நெல்சிப் திட்டத்தின் ஊடாக மன்னார் மாவட்ட நகர சபைக்கு புதிய கட்டடம் அமைப்பதற்காகவும் மாந்தை மேற்கு பிரதேசசபையின் பிரதான அலுவலக கட்டடத்தை விஸ்தரிப்புசெய்வதற்காகவும் 4கோடி ரூபா நிதி யொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

வடக்கு மாகாண சபையினால் நடப்பாண்டில் நெல்சிப் திட்டத்தின் ஊடாக மன்னார் மாவட்ட நகர சபைக்கு புதிய அலுவலக கட்டடம் அமைப்பதற்காக 2கோடி ரூபாவும் மாந்தை மேற்கு பிரதேசசபையின் பிரதான அலுவலக கட்டடத்தை விஸ்தரிப்புச் செய்வதற்காக 2கோடி ரூபாவும் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(3-2-15)



முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட காரியாலயத்தில் நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் இலங்கையின் 68ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நடைபெற்றபோது...
(படம்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# 3 இலட்சம் ரூபா பெறுமதியான 21 முதிரை மரக்குற்றிகள் பொலிஸாரினால் கைப்பற்று

## வவுனியாவில் சம்பவம்

(குருமன்காடு)

வவுனியா, பூவரசங்குளம் பகுதியில் பொலிஸாரினால் சாளம்பைக்குளம் பகுதியில் வைத்து மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான 21 முதுரை மரக் குற்றிகள் நேற்றுக் காலை கைப்பற்றப்பட்டுள்ளன.

இது குறித்து பூவரசங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கருத்து தெரிவிக்கையில்,

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து சாளம்பைக்குளம் பகுதியில் டிப்பர் வாகனத்தில் 10 அடி நீளமான 21 முதிரை மரக்குற்றிகள் மணல் மற்றும் சிறு கற்களால் மூடப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டது. அத்துடன் மரக்குற்றிக ள் மற்றும் டிப்பர் வாகனம் எனபன கைப்பற்றப்பட்டதுடன் வாகன சாரதியையும் கைது செய்துதடுத்துவைத்துள்ளோம் என அவர் தெரிவித்தார்.



இதேவேளை, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி வசந்த விக்ரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய பூவர சங்குளம் பொலிஸ் நிலை பொறுப்பதிகாரி ஆர்.ஆர். ராஜகுரு தலைமையில் பொலிஸ சார்ஜன்ட், பிரேமதிலக்க பொலிஸ் கான்ஸ்டபிள் சரிக் குழுவினரால்இந்தவிசேடநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 7 கிராம சேவையாளர் வெற்றிடங்கள்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் இடப் பெயர்வின் பின்னர் மக்கள் மீள் குடியேற்றத்தின்போது20 கிராம சேவையாளர் பிரிவுகளில் 3 ஆயிரத்து 733 குடும்பங்கள்ச் சேர்ந்த 11 ஆயிரத்து 739 அங்கத்தவர்கள் வாழ்ந்து வரும் நிலையில் இவர்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு 7 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு நிரந்தரமாக கிராம சேவையாளர்கள் நியமிக்கப்படாமையால் இக்கிராம மக்களுக்கான சேவைகளை வழங்குவதில் சிரமங்களை எதிர்கொள்வதாக துணுக்காய் பிரதேச செயலர் எஸ். குணபாலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் 20 கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளடங்கியுள்ளன.

இதற்கமைய தென்னியன் குளம், உயிலங்குளம், அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டியகுளம், ஐயங்கன் குளம், பழைய முறிகண்டி, யோகபுரம் மத்தி ஆகிய 7 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும் நிரந்தரமாக கிராம சேவையாளர் நியமிக்கப்படவில்லை.

இக்கிராமங்களின் கடமைகளை அயற் கிராமங்களில் கடமையாற்றும் கிராம சேவையாளர்கள் தமது கிராமங்களின் வேலைப்பளுக்களுக்கு மத்தியிலும்மேற்படிகிராம மக்களின் நலன்கருதி பதில் கடமையாற்றிவருவதாக அவர் தெரிவித்துள்ளர். (2-3-15)




# வன்னி மாவட்ட தொண்டராசிரியர் ஒன்றுகூடல் நிகழ்வு நாளை

(தண்ணீரூற்று)

வன்னி மாவட்ட தொண்டராசிரியர்களின் ஒன்று கூடல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு முல்லைத்தீவில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி நினைவாலயத்தில் முல்லைத்தீவு மாவட்ட தொண்டராசிரியர் சங்கத் தலைவர் எஸ்.தர்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது நிரந்தர நியமனம் பற்றி அவசர கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதால் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அனைத்து தொண்டராசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை வன்னிமாவட்டத் தொண்டராசிரியர் சங்கத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த 3 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இந்த ஒன்றுகூடல் நிகழ்வில் வன்னி மாவட்டத்திற்குள் உள்ளடங்கும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார்மற்றும் வவுனியா மாவடடங்களின் தொண்டராசிரியர் சங்கங்களின் கூட்டங்களை அந்தந்த மாவட்டங்களில் நடத்துவதற்கான திகதிகள் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(2-3-292)

# குழுக்கூட்டம் ஒத்திவைப்பு

(தண்ணீரூற்று)

முல்லைத்தீவு முள்ளியவளை குமாரபுரத்தில் நேற்று நடைபெறவிருந்த சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டம் எதிர் வரும் மார்ச் மாதமளவில் நடைபெறும் என சிவில் பாதுகாப்புச் செயலாளர் எஸ்.பவதர்சன் அறிவித்துள்ளார். இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2-3-292)

# சமஷ்டி அலகைக் கோருவதற்கு தமிழர்களுக்கு பூரண உரிமையுண்டு

## வன்னி மாவட்ட எம்.பி.சாந்தி தெரிவிப்பு

(வற்றாப்பளை)

வடகிழக்கு இணைந்த சமஷ்டி அலகைக் கோருவதற்கு தமிழ்மக்கள் பூரண உரிமையுடையவர்கள் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 12,13 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் மக்களின் கருத்துக்களைப் பெறுவதற்கு குழுவொன்று செல்லவுள்ள நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசாவினால் பொது மக்களை விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக துணுக்காய் பிரதேச செயலக அரச அலுவலர்களுடனான கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இந்நிழ்வின்போது உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் தமிழ் மக்கள் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் பூர்வீகமாக தொன்றுதொட்டு வாழ்ந்து வருகின்றனர்.

எனவே அவர்கள் ஐக்கிய இலங்கைக்குள் வடகிழக்கு இணைந்த சமஷ்டி அலகினை கோருவதற்கு பூரண உரிமையுடையவர்களாவார்கள்.

மேலும் பொதுமக்கள் அனைவரும் ஏதிர்வரும் 12, 13 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கச்சேரிக்குச் சென்று புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் கருத்துக்களை வெளியிட வேண்டும் எனவும் அவர்தெரிவித்தார்.(3-301-281)

# விளையாட்டுத்துறைப் பிரதி அமைச்சர் நேற்று வவுனியாவில் கலந்துரையாடல்



வவுனியா மாவட்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் விளையாட்டு கழகங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் ஹாதீப் முகமட் ஹரிஸ் வவுனியாவுக்கு நேரில் சென்று கலந்துரையாடலைமேற்கொண்டார்.

வன்னி மாவட்டப் பாராளுமனற உறுப்பினர் கே.கே. மஸ்தானின் அழைப்பின் பேரில வவுனியாவுக்கு சென்ற பிரதி அமைச்சர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று கலந்துரையாடலை மேற்கொண்டார்.

இதன்போது, வவுனியா மாவட்ட பாடசாலைகளில் உள்ள மைதானப் பிரச்சினைகள், உதைபந்தாட்ட வீரர்கள், கிரிக்கெட் வீரர்கள் ஆகியோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள், வெளிநாட்டு விளையாட்டு நிகழ்வுகளுக்கு செல்லும் மாவட்ட மட்ட வீரர்களுக்கான உதவிகளை வழங்குதல், மாவட்ட விளையாட்டுத் துறையை மேம்படுத்தும் செயற்றிட்டத்தை முன்னெடுத்தல் என பல விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது.

இக் கலந்துரையாடலில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கே.கே.மஸ்தான், செல்வம் அடைக்கலநாதன், வடக்கு மாகாண கல்வி, விளையாட்டுத்துறை அமைச்சர் குருகுலராஜா, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ். திஸாநாயக்க, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான வினோனோதரராதலிங்கம், முத்தலிப் பாபா, பிரதேச செயலாளர் கா. உதயராசா, விளையாட்டு உத்தியோகத்தர்கள், விளை யாட்டுக்கழகங்களின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.(2-250)

# மக்கள் கருத்தறியும் செயலமர்வு வவு.செயலகத்தில் நேற்றும் இன்றும்



அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பில் மக்கள் கருத்தறியும் நிகழ்வு வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது.

புதிய அரசாங்கம் தற் போது புதிய அரசியலமைப்பு ஒன்றினை கொண்டு வர நடவடிக்கை எடுத்துள்ளது. இது தொடர்பில் மக்கள் கருத்துக்களை அறியும் வகையில் ஒரு குழு நியமிக்கப்பட்டு மாவட்ட மட்டத்தில் கருத்துக்கள் பெறப்பட்டு வருகின்றது. அதன் ஒரு கட்டமாக வவுனியா மாவட்ட செயலகத்திற்கு அக்குழுவைச் சேர்ந்த சீ. இளங்கோவன், எஸ் தவராசா, எஸ்.விஜசங்கர், ஜே.குரஸ், என்.செல்வகுமாரன், நதீஸ்கர் ஆகியோர் சென்று மக்களின் கருத்துக்களை பெற்றுக் கொண்டனர். இதேவேளை, மக்கள் கருத்தறியும் நிகழ்வு இன்று சனிக்கிழமையும்வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# கூட்டுறவு ஆணையாளர் அலுவலகம் முன் கிளிநொச்சியில் நேற்று ஆர்ப்பாட்டம்

## இன்று வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சருடன் சந்திப்பு



கிளிநொச்சி கூட்டுறவு ஆணையாளர் அலுவலகத்திற்கு முன்பாக நேற்று முற்பகல் 11.30மணியளவில் பனம்பொருள் உற்பத்தி தொழிலாளர்களினால ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப் பட்டுள்ளது.

ஊழல் மோசடியினை விசாரணை செய்ய கோரியும், அதுவரை பொதுச் சபைக்கூட்டத்தைக் கூட்டக் கூடாது என வலியுறுத்தியே குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. குறித்த பகுதிக்கு நேற்று வருகை தந்த வவுனியா கூட்டுறவு உதவி ஆணையாளர் கு.ரவீந்திரநாதன் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.



இவ் விடயம் தொடர்பில் இன்று வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சின் அலுவலகத்தில் அமைச்சர் ஐங்கரநேசனுடன் தொழிலாளர்கள் பேசி முடிவு எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் உடனடித் தீர்வு வேண்டும் என கோரி அலுவலகத்தில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2-3-15)

# உயிராபத்தை ஏற்படுத்தும் உயர் குருதி அழுத்தம்

## கர்ப்பிணிகள் உரிய ஆலோசனைகளை பெறுவது அவசியம்

கர்ப்ப காலத்தில் ஏற்படும் உயர் குருதி அழுத்தத்தை முறைப்படி கவனிக்காது விட்டால் தாய் சேய்க்கு உயிராபத்தை ஏற்படுத்தும். எனவே உரிய முறையில் வைத்திய ஆலோசனைகளை பெறுவது அவசியம் என யாழ்.போதனா வைத்தியசாலை பெண் நோயியல் மகப்பேற்றியல் வைத்திய நிபுணர் கந்தையா குருபரன் தெரிவித்துள்ளார்.


அவருடன் மேற்கொண்ட நேர்காணலின் போது, கர்ப்ப காலத்தில் ஏற்படும் உயர் குருதி அழுத்தம் (Pregnancy induced hypertension (PIH) கர்ப்ப காலத்தில் ஏற்படக்கூடிய ஒரு பொதுவான பிரச்சினை ஆகும். முறைப்படி கவனிக்கவில்லையெனில் தாயையும் கருவிலிருக்கும் குழந்தையையும் மிகவும் பாதிக்கும். இரு உயிர்களுக்கும் ஆபத்தையும் ஏற்படுத்தக் கூடிய ஒரு நோய் ஆகும்.

யாழ்.மாவட்டத்தில் 10 இல் ஒருவருக்கு இந்த நோய் ஏற்படுவதற்கு சந்தர்ப்பம் உள்ள போதிலும் யாரை இந்த நோய் பாதிக்கும் என கண்டுபிடிக்க முடியாது.எனவே கர்ப்பம் தரித்துள்ள அனைத்து தாய்மாரும் உரிய ஆலோசனைகளை பெற்று அதன்படி நடப்பது மிகவும் அவசியமாகும்.

உலகளாவிய ரீதியில் இப்போதும் தாய் மரணங்களை ஏற்படுத்தும் மிக கொடிய நோயாக கர்ப்ப கால உயர் குருதி அழுத்தமே உள்ளது. இலங்கையின் மருத்துவ வரலாற்றில் பல தாய் சேய் இறப்புகளுக்கு கவனிக்கப்படாத உயர குருதி அழுத்தமே காரணமாக இருந்தது. ஆனால் இன்றைய மருத்துவ வளர்ச்சிகளால் இவ்வகை உயிரிழப்புகள் தற்போது கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

கர்ப்ப காலத்தில் ஏற்படும் உயர் குருதி அழுத்தம் பொதுவாக இருபது கிழமைகளின் (20 Weeks) பின்னரே அவதானிக்கப்படும்.அதற்கு முன்னரே இருந்தால் , அது நீண்ட கால உயர் குருதி அழுத்தமாக (chronic hypertension) இருக்கலாம்.

தாயின் உடல் நலம் நன்றாக இருந்தாலே கருவில் வளரும் குழந்தையின் வளர்ச்சியும் நன்றாக வரும். எனவே தாயின் உடல் நலத்துக்கு முக்கியத்துவம்கொடுக்க வேண்டும்.



**கர்ப்ப காலத்தில் உயர் குருதி அழுத்தம் எந்த வகை யினரை பாதிக்கும்? (Risk group)**

இளவயதில் கர்ப்பம் தரிப்பவர்கள் (teenage pregnancy), முதலாவது கர்ப்பம் (primi), முந்திய கர்ப்பங்களில் உயர் குருதி அழுத்தம் இருந்தவர்கள், நீரிழிவு நோய் உள்ளவர்கள் பெற்றோர் , சகோதரர்க்கு உயர் குருதி அழுத்தம் உள்ளவர்கள், இரட்டை கர்ப்பம் உள்ளவர்கள், முந்திய கர்ப்பத்துக்கும் தற்போதைய கர்ப்பத்திற்கும் இடையில் கூடிய கால இடைவெளி (10 வருடங்கள்) உள்ளவர்கள் போன்றோரை பாதிக்கும்.

**இந்த நோயின் ஆரம்ப அறிகுறிகள் என்ன?**

கால், முகம் வீங்கலாம், தலையிடி, கண் பார்வையில் சடுதியான மாற்றங்கள், சிறுநீர் வெளியேறும் அளவு குறையலாம் , சிறுநீர் பரிசோதனையில் புரதம் இருக்கலாம் (Albumin), பிள்ளையில் உரிய வளர்ச்சி இல்லாமை /வளர்ச்சி குறைவு, மேல் வயிற்றில் நோ (epigastric pain), பிள்ளையின் துடிப்பு குறையலாம், உயர் குருதி அழுத்தம் போன்ற அறிகுறிகள் தென்படும்.


இந்த நோய் **கடுமையான** தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பின் இதன் அறிகுறிகளாக கடுமையான தலையிடி, கண் பார்வையில் ஏற்படும் சடுதியான மாற்றங்கள், மேல் வயிற்று நோ, மூச்சு விட கடினமாக இருக்கலாம், சடுதியான கால் வீக்கம், வலிப்பு சிலவேளைகளில் கர்ப்பிணிகளில் ஒரே ஒரு அறிகுறியாக உயர் குருதி அழுத்தம் மட்டும் இருக்கலாம். மேற்கூறிய அறிகுறிகள் ஒன்று இருந்தாலும் உடனடியாக வைத்திய ஆலோசனையை பெற வேண்டும்.

**இந்த நோய் எவ்வகையில் தாயையும் குழந்தையையும் பாதிக்கும?**

கர்ப்ப காலத்தில் உயர் குருதி அழுத்தம் இருந்தால் பல விளைவுகளை தாயிலும் கருவில் உள்ள குழந்தையிலும் ஏற்படுத்தும். குறை மாத பிரசவம் ஏற்படலாம் (Preterm birth). நிறை குறைந்த குழந்தை பிறக்கலாம் (Low birth weight baby). தாய்க்கு கடுமையான வயிற்று நோ மற்றும் திடீர் இரத்தப் போக்கு ஏற்படலாம். சில வேளைகளில் வயிற்றிலேயே குழந்தை உயிரிழக்கலாம். நோயின் கடுமையான நிலையில் வலிப்பும் ஏற்படலாம் (eclamptic fits), உடனடியான மருத்துவக் கவனிப்பு இல்லாவிடில் தாய் சேய் இறப்பு ஏற்படலாம்.

**கர்ப்பவதிகள் என்ன செய்ய வேண்டும்?**

ஆரம்பத்திலேயே நோயின அறிகுறிகளை அறிவதால் பல் வேறு விளைவுகளையும் தவிர்க்கலாம் . அபாய அறிகு றிகள்



இருப்பின் உடனடியாக வைத்திய அறிவுரையை நாட வேணடும்.ஒழுங்காக கிளி னிக்குகளில் சொல்லப்படும் பரிசோதனைகளை செய்தல் , அபாய நிலை உள்ளவர்கள் ஒழுங்கான முறையில் கிழ மைக்கு கிழமை குருதி அழுத் தத்தை பரிசோதனை செய்ய வேண்டும். (Regular Blood pressure checkup), குருதி அழுத்தத்தை கட்டுப்படுத்த தரப்படும் மருந்துகளை (Anti hypertensives) ஒழுங்காக மருத்துவ ஆலோசனைப்படி உட்கொளளுதல். தவறாது கிளினிக்குகளுக்கு செல்லுதல் சிறந்த பெறு பேறுகளை தரும். கால தாமதங்கள் விரும்பத்த காத விளைவுகளை உருவாக்கும்.

**கர்ப்பவதிகள் மேலதிகமாக தெரிந்திருக்க வேண்டிய தகவல்கள் என்ன?**

பெரிய ஆஸ்பதிரிகளி லேயே பராமரிக்கவும் பிரசவம் நடக்க வேண்டிய தேவையும் உள்ளது. சிலவேளைகளில்குழந்தை உரிய காலத்திற்கு முந்தி பிறக்க வேண்டியும் ஏற்படும். சத்திர சிகிச்சை மூலம் அல்லது சாதாரண பிரசவம் மூலமும் குழந்தை பிறக்கலாம். குறை மாத பிரசவம் எனில் குழந்தை விசேட கவனிப்பில் ( PBU/ SCBU) இருக்க வேண்டி வரும்.

மருத்துவ தாதிமார்கள்/வைத்தியர்கள் என்ன அறிவுரைகள் - எல்லா தாய் சேய் நிலையங்களிலும் (MOH clinics) இது தொடர்பான மேலதிக விளக்கங்களை எப்போதும் பெற்றுக்கொள்ளலாம் . சில வேளைகளில் அஸ்பிரின் என்ற மருந்தை எடுக்கும்படி உங்களின் வைத்தியர் அறிவுறுத்தலாம்.எனவே இது கர்ப்பமான பெண்களும் தாயாகப் போகும் எல்லாப் பெண்களும் அறிந்திருக்க வேண்டிய மிக முக்கிய ஒரு விடயம் ஆகும் என அவர் தெரிவித்தார்.




**நேர்காணல்**
**பொ.சோபிகா**

## உண்மையை வெளியிட்ட மகிந்த

கண்டி கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ தவறுதலாக உண்மையை கூறியுள்ளார்.

அங்கு கருத்து வெளியிட்ட அவர்,


"யார் குற்றம் செய்திருந்தாலும் வழக்கு தாக்கல் செய்யுங்கள். தந்தைமார் செய்த தவறுகளுக்காக மகன்மாரை தண்டிக்கும் பழக்கம் நாட்டில் இல்லை. யோஷித உட்பட 5 பேர் பணசலவை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத்திற்கு நிதி வருவதை தடுக்கவே நாங்கள் அந்த சட்டத்தை அமுலுக்கு கொண்டு வந்தோம். குப்பையான கோப்புகளை தேடிக்கொண்டிருக்காமல், ஆட்களைகொண்டுவேலையை ஆரம்பியுங்கள் என்று இந்த அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கிறேன்" என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதற்கு முன்னரும் பல முறை தான் தவறிழைத்ததாகவும் தனது பதவிக்காலத்தில் மோசடியாளர்களை நெருக்கமாக்கி கொண்டதால், தவறு நேர்ந்ததாகவும், ஆனால் தான் தவறு செய்யவில்லை எனவும் பலதடவைகள் கூறியிருந்தார்.

மேலும் கடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது, பல அமைச்சர்களின் கோப்புகள் தன்வசம் இருப்பதாகவும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், தந்தை செய்த தவறுகளுக்கு மகன்மாரை தண்டிக்கும் பழக்கம் நாட்டில் இல்லை என்று அண்மையில் கூறியிருப்பதன் மூலம் தான் தவறு செய்திருப்பதை முன்னாள் ஜனாதிபதி ஒப்புக்கொண்டுள்ளதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ)




# கலப்பு நீதிமன்றக் கட்டமைப்பை ஐ.நா.ஆணையர் வலியுறுத்துவார்

## சிங்கள ஊடகம் எதிர்பார்ப்பு

(கொழும்பு)

**ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நாயகத்தின் இலங்கை விஜயத்தின் போது ஜனாதிபதியிடம் கலப்பு நீதிமன்றக் கட்டமைப்பை வலியுறுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுவதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம சயிட் அல் ஹுசைன் மூன்று நாள்விஜய மொன்றை மேற் கொண்டு இன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இதன்போது, இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் வெளிநாட்டு நிபுணர்களைக் கொண்ட கலப்பு நீதிமன்றப் பொறிமுறையை அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வலியுறுத்தவுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும், ஜனாதிபதி மைத்திரிபால அதனை நேரடியாக மறுத்துரைத்து, உள்நாட்டு விசாரணைக் கட்டமைப்பை வலியுறுத்துவார் என்றும் குறித்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர்க்குற்றங்கள் தொடர்பான கலப்பு நீதிமன்ற பொறிமுறையை உருவாக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் என்பனவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையத்திடம் வலியுறுத்தியுள்ளனர்.

இன்று இலங்கை வரும் ஐ.நா.ஆணையாளர் எதிர்வரும் 9 ஆம் திகதி இலங்கையில் இருந்து புறப்பட்டுச் செல்லும் முன் இலங்கை விஜயம் மற்றும் நடை பெற்ற நிகழ்வுகள் தொடர்பான செய்தியாளர் சந்திப்பொன்றையும் அவர் நடத்தவுள்ளார்.(இ)

## மீனவர்களின் நன்மை கருதி உயிர்காப்புப் படகுச் சேவை

### அமைச்சர் அமரவீர தெரிவிப்பு

அசாதாரண காலநிலைமையின் போது பாதிப்புக்குள்ளாகும் மீனவர்களை பாதுகாக்கும் பொருட்டு உயிர்காப்புப் படகு சேவையை ஆரம்பிப்பதற்கு கடற்றொழில் வள அமைச்சு தீர்மானித்திருப்பதாக கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



அதற்கமைய 25 கோடி ரூபாய் பெறுமதியான டைனி என்ற படகும் மேலும் இதே போன்ற ஏனைய படகு சேவைகளும் மீனவர்களின் நன்மைக்காக பயன்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த உயிர் காப்பு படகு சேவையானது மீனவர்களின் நீண்டகால கோரிக்கை என்று தெரிவித்துள்ள அமைச்சர், இதற்கமைய இந்த படகுகள் நிறுவனத்தின் தலைவர் ஆரியசீல விக்கிரமநாயக்கவுடன் ஒத்துழைப்புடன் இந்த படகு சேவையை ஆரம்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், டைனி என்ற இந்த சிறு உயிர்காப்பு படகானது 47 அடி நீளம் கொண்டதுடன் 26 தொன் நிறையைத் தாங்கும் சக்தி கொண்டது எனவும் தெரிவித்துள்ளதோடு, உயிர் பாதுகாப்பு அங்கிகள் உட்பட அலுவலக வைத்தியர் மற்றும் தாதியர் உள்ளிட்ட 6 பேர் இந்தப்படகில் இருப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (இ)

## விவாதப்போட்டி முடிவுகள் வெளியீடு



சட்டத்துறையின் 10ஆம் ஆண்டு நிறைவையொட்டி யாழ்ப்பாணப் பல்லைக்கழக சட்ட மாணவர் சங்கத்தால் அண்மையில் நடத்தப்பட்ட வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான விவாதப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய பாடசாலைகளது பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த வகையில் 1ஆம் இடத்தை யாழ். இந்துக் கல்லூரியும் 2ஆம் இடத்தை முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியும் 3 ஆம் இடத்தை யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மற்றும் வேம்படி மகளிர் கல்லூரியும் பெற்றுக் கொண்டுள்ளன. (இ-5)

## பழைய மாணவர் சந்திப்பின்போது குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொலை

நாத்தாண்டி மாவில பகுதியில் நடைபெற்ற விருந்துபசாரத்தின்போது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நாத்தாண்டி மாவில பகுதியிலுள்ள விழா மண்டபம் ஒன்றில், பிரபல பாடசாலையொன்றின் பழைய மாணவர் சந்திப்பு இடம் பெற்றுக் கொண்டிருக்கையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

வாக்குவாதம் முற்றியதில் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் 2 பிள்ளைகளின் தந்தையான 39 வயது டைய சுசந்த குருகுலசூரிய என்பவரே உயிரிழந்துள்ளார்.(இ)

## தன்னியக்க பணப்பரிமாற்றுமூலம் பணம் பெறுவோரின் கவனத்திற்கு


வாடிக்கையாளர்கள்தன்னியக்கப் பரிமாற்று இயந்திரத்திலிருந்து பணத்தைப் பெறும் பொழுது மிகவும் நுட்பமான கருவியொன்றை இயந்திரத்தில் வைத்து பணப்பரிமாற்று அட்டையின் இரகசியக் குறியீட்டு இலக்கங்களைப் பதிவு செய்து பணத்திருட்டில் ஈடுபட்ட பல்கேரிய நாட்டைச் சேர்ந்த 3 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 6.5 மில்லியன் ரூபா பெறுமதியான யூரோ நாணயத்தாள் 2.1 மில்லியன்பெறுமதியான இலங்கை ரூபா என்பன அவர்கள் தங்கியிருந்த ஆடம்பர விடுதியில் கைப்பற்றப்பட்டுள்ளன.

நாடுமுழுவதிலுமுள்ள அரச வங்கிகள் மற்றும் கொமர்ஷல் வங்கிகள் என்பனவற்றின் தன்னியக்கப் பணப்பரிமாற்று இயந்திரத்திலிருந்து இவ்வாறு பணம் களவாடப்பட்டுள்ளது. இவர்களிடமிருந்து 92 போலி தன்னியக்கப் பணப் பரிமாற்று அட்டைகளும் மீட் கப்பட்டுள்ளன. காலிநகரில் உள்ள அரச வங்கி ஒன்றில் பணம் களவாடப்படும் பொழுதே பொலிஸார் 3 சந்தேகநபர்களையும் கைது செய்துள்ளனர். வாடிக்கையாளர் பணத்தை மீளப் பெறும் பொழுது இரகசிய குறியீட்டு இலக்கம் (Pin Number) மேற்படி கருவியில் பதிவாகின்றது. பின்னர் அதன்மூலம் பணம் களவாடப்படுகிறது.

சம்பவம் தொடர்பாக மேலும் 4 பேரை பொலிஸார் தேடி வருகின்றனர். ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ள 3 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு காலி மாவட்ட நீதிபதி நிலுப்புலி லங்கா புர உத்தரவிட்டுள்ளார். (3)

# பாலைவனத்தில் அகதிகள்; திணறும் ஜோர்தான் அரசு





ஜோர்தான் நாட்டில் தஞ்சம் புகுந்துள்ள அகதிகளால் தமது நாடு வளர்ச்சியில் பின்தங்குவதாக அந்த நாட்டு அரசர் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மன்றத்தினால் பதிவு செய்யப்பட்டுள்ள 4.6 மில்லியன் சிரிய அகதிகளில் ஜோர்தான் அரசு மட்டும் 6 இலட்சம் பேருக்கு தஞ்சம் அளித்துள்ளது.

தஞ்சமடைந்துள்ள இந்த அகதிகளை ஜோர்தான் அரசு அங்குள்ள பாலைவனத்தில் அமைந்துள்ள Al Zaatari முகாமில் தங்க வைத்துள்ளது.

60 ஆயிரம் பேர் மட்டுமே தங்குவதற்கு உகந்த அந்த முகாமில் தற்போது 80 ஆயிரம் பேர் குடியிருப்பதாக கூறப்படுகிறது.

ஜோர்தான் அரசின் பொது பட்ஜெட்டில் நான்கில் ஒரு பகுதி அகதிகளுக்காக அந்த நாடு ஒதுக்கியுள்ளதாக தெரிவித்துள்ளது.

அகதிகளின் வருகையால் தமது நாட்டில் கல்வி மற்றும் சுகாதாரத்திற்கு போதிய கவனம் செலுத்த முடியாமல் போவதாக தெரிவித்துள்ள அரசர் அப்துல்லா,

இது அகதிகளுக்கு எதிரான கிளர்ச்சியை ஜோர்தான் மக்களிடையே உருவாக்கும் என தமது அச்சத்தையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

மேற்கத்தேய நாடுகள் அகதிகள் விவகாரத்தில் உடனடியாக தீர்வுக்கு வர வேண்டும் என கேட்டுக் கொண்ட அவர்,

பல தருணங்களில் மேற்கத்தேய நாடுகளுக்கு துணை நின்ற தங்களுக்கு உதவிக்கரம் நீட்ட வேண்டிய தருணம் இதுவென அவர் தெரிவித்துள்ளார்.

Al Zaatari முகாமில் மட்டும் தினசரி 15.5 தொன் ரொட்டிகள் விநியோகிக்கப்படுவதாகவும், 3 ஆழ்துளைக் கிணறுகள் வாயிலாக தினசரி 3.4 மில்லியன் லீற்றர் தண்ணீர் வழங்கப்படுவதாகவும் அரசர் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

இதனிடையே சிரிய அகதிகள் விவகாரம் குறித்து விவாதிக்க உலகத்தலைவர் லண்டனில் ஒன்று கூட உள்ளனர்.

மனிதாபிமான அடிப்படையில் அகதிகளுக்கு உதவும் வகையில் 6 பில்லியன் பவுண்டு நிதி திரட்டவும் திட்டமிட்டுள்ளனர். (இ)

# தாக்குதலிலிருந்து தப்பித்தார் பிரித்தானிய இளவரசன் ஹரி



பிரித்தானிய இளவரசர் ஹரி, தலிபான் தீவிரவாதிகள் நடத்திய ரொக்கெட் தாக்குதலில் இருந்து உயிர் தப்பியுள்ளார் என்று அவருடைய முன்னாள் நண்பர் வெளியிட்டுள்ள புத்தகத்தின் மூலம் தெரிய வந்துள்ளது.

பிரித்தானிய இராணுவத்தில் கடந்த 10 ஆண்டுகளாக பணியாற்றி வந்த இளவரசர் ஹரி, 2008 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில், பிரித்தானிய படைவீரர்களுடன் சேர்ந்து தீவிரவாத தாக்குதலுக்கு எதிரான போரில் ஈடுபட்டார்.

அப்போது, Helmand மாகாணத்தில் ஒரு நாள் மாலைநேரத்தில் இவரது நண்பர் Sgt Tom Pal என்பவருடன் உரையாடிக் கொண்டிருந்தபோது, தலிபான்களின் ரொக்கெட் ஒன்று ஹரி மீது மோதும் விதமாக வந்துள்ளது.

ஆனால், உடல்கவசம் மற்றும் தலையில் பாதுகாப்பு கவசம் அணிந்திருந்ததால் சிறு காயங்களுடன் தப்பியுள்ளார்.

மேற்கூறப்பட்ட தகவல்கள் அனைத்தும், Coldstream Guards என்ற புத்தகத்தில் வெளியாகியுள்ளன, அந்த புத்தகத்தில் ஹரியின் இராணுவ வாழ்க்கை மற்றும் ஆப்கானிஸ்தானில் போரில் ஈடுபட்டது உள்ளிட்ட தகவல்கள் அடங்கியுள்ளன.

ஹரி குறித்து அவரது நண்பர் மேலும் கூறியதாவது, இளவரசர் ஹரி இராணுவத்தில் இருந்து ஓய்வு பெறுகிறார் என்ற முடிவு கடினமானதாக இருந்தது, ஆனால் தனது வாழ்க்கையில் ஒரு பணியை முடித்துவிட்டு புது அத்தியாயத்தை தொடங்குவதற்கான நேரம் என்பதால் அவர் ஓய்வு பெற்றார் என்று கூறியுள்ளார்.

2005 ஆம் ஆண்டில் அதிகாரிப் பயிற்சி வீரராகச் சேர்ந்த ஹரி, 2006 ஆம் ஆண்டு இராணுவ அதிகாரியாகப் பொறுப்பேற்றார். 2007 ஆம் ஆண்டு முதல் முறையாக ஆப்கானிஸ்தானில் பிரிட்டிஷ் படையினருடன் சேர்ந்து பயங்கரவாதிகளுடன் போரிட்டார்.


இராணுவத்தின் விமானப் பிரிவில் சேருவதற்காக 2009 இல் பயிற்சி மேற்கொண்டார். 2012 ஆம் ஆண்டில் போர்க்கள ஹெலிகொப்டர் விமானியாகச் செயற்படத் தொடங்கினார். அதேயாண்டு ஆப்கானிஸ்தானுக்கு மீண்டும் அனுப்பப்பட்டார்.

அதன்பின்னர், அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ள பிரிட்டன் இராணுவத்தினருடன் இணைந்து பணியாற்றிய அவர், கடந்த 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில்

# இயங்காமல் இருக்கும் சிறுவர்,பெண்கள் பிரிவு

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்ட சிறுவர், பெண்கள் பிரிவு இயங்காமல் இருப்பதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இதனால் சிறுவர், பெண்களுக்கு எதிரான சம்பவங்கள் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்திலேயே வைத்து விசாரணைக்குட்படுத்தப்படுகின்றது. நேற்றையதினம் கூட இவ்வாறு பாலியல் துஷ்பிரயோக சம்பவம் ஒன்று பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளது.





சிறுவர், பெண்கள் மகளிர் விவகார அமைச்சர் சந்திராணி பண்டாரநாயக்க மற்றும் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோரினால் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துக்கென தனியான சிறுவர், பெண்கள் பிரிவு அமைக்கப்பட்டு கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்டது.

எனினும் அமைச்சர்களால் திறந்து வைக்கப்பட்ட சிறுவர், பெண்கள் மகளிர் பிரிவு பாவனையின்றி மூடப்பட்ட நிலையிலேயே உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பெண்கள் தொடர்பான பாலியல் குற்றங்கள் மற்றும் குடும்பப் பிணக்குகள் சம்பந்தமான விசாரணைகள் சாதாரண பொலிஸ் நிலையத்தில் நடைபெறுவதனால் பெண்கள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர யுத்தத்திற்கு முன்னர் இருந்த ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையம் அமைந்திருந்த காணியில் தற்போது பொலிஸாரின் தங்குமிடம் அமைக்கப்பட்டு, தனியார் காணியொன்றிலேயே தற்போது பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டு நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணியில் உள்ள ஆலமரத்தின் கீழ் புத்தர் சிலை ஒன்றும் நிறுவப்பட்டு, பௌத்த கோவில் போன்ற தோற்றப்பாடு அங்கு ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். ஆகையால் இவை தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-4)





பிரேசிலை உலக அளவில் ஒளிரச்செய்யும் கார்னிவல் திருவிழா நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நேற்று ஆரம்பமான இந்த விழா தொடர்ந்து ஆறு நாட்கள் நடைபெறவுள்ளது.

# தமிழகத்தில் 56,000 பேர் புற்றுநோயால் பாதிப்பு

(டில்லி)

**தமிழகத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டில் 56 ஆயிரம் பேர் புற்று நோயால பாதிக்கப்பட்டுள்ளனர் என அடையாறு புற்றுநோய் வைத் தியசாலை தலைவர் தெரிவித்துள்ளார்.**

உலகம் முழுவதும், 'உலக புற்றுநோய் தினம்' கடைப்பிடிக்கப் படுகிறது.

இந்நிலையில் சென்னை அடையாறில் உள்ள புற்றுநோய் வைத்தியசாலை தலைவர் டாக்டர் வி.சாந்தா நிருபர்களை சந்தித்து பேசியுள்ளார்.

அவர் நிருபர்களிடம் பேசுகையில், உலக புற்றுநோய் தினத்தின் இந்த ஆண்டின் மையக்கருத்து 'நம்மால் முடியும், என்னால் முடியும்' என்பதாகும்.

புகையிலை, மது, தீய கொழுப்பு சத்துள்ள உணவு, பதப்படுத்தப்பட்ட உணவு, உடல்பருமன், உடல்உழைப்பின்மை, மாசு கலந்த காற்று, சுத்தமின்மை போன்றவைகள் தான் புற்றுநோய்க்கு காரணம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## இஸ்லாமியர்களின் இறைச்சிக்கூடத்தை தாக்கி துவம்சம் செய்த மர்மநபர்கள்

### பிரான்ஸில் பரபரப்பு

பிரான்ஸ் நாட்டில் இஸ்லாமியர்கள் நடத்தி வந்த இறைச்சிக்கூடத்தை மர்ம நபர்கள் சிலர் துப்பாக்கியால் தாக்கி அழித்துள்ள சம்பவத்திற்கு அந்நாட்டு பிரதமர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் தீவுகளில் ஒன்றான Corsica-வில் உள்ள Popriano என்ற நகரில் தான் இந்த சம்பவம் நடந்துள்ளது. கடந்த செவ்வாய்க் கிழமை இரவு நேரத்தில் அந்நகர பொலிஸாருக்கு பரபரப்பு தகவல் ஒன்று கிடைத்துள்ளது.

நகரின் மையத்தில் அமைந்துள்ள இஸ்லாமியர்களுக்கு சொந்தமான இறைச்சிக்கூடத்தை மர்ம நபர்கள் சிலர் மிகுந்த சேதாரம் ஏற்படுத்தும் வகையில் தாக்கியுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று ஆய்வு செய்தபோது இறைச்சிக்கூடத்தின் முகப்பு பகுதியில் 30 துப்பாக்கி குண்டுகள் துளைத்ததற்கான அடையாளங்கள் இருந்துள்ளன.

இறைச்சிக்கூடத்தின் உரிமையாளர்களிடம் விசாரணை செய்த போது அவர்கள் மீது எந்தவிதமான குற்றங்களும் இல்லை என்பது தெரியவந்தது.

எனினும், இந்த தாக்குதலின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பது தெரியாமல் இருந்தாலும் இந்த சம்பவம் தொடர்பாக சந்தேகத்திற்குரிய 6 பேர் மீது பொலிஸார் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

இஸ்லாமியர்களின் இறைச்சிக் கூடம் மீது துப்பாக்கி தாக்குதல் நடந்துள்ளது சகித்துக்கொள்ள முடியாத காட்டுமிராண்டித்தனம் என பிரான்ஸ் பிரதமரான மேனுவல் வால்ஸ் கண்டனம் தெரி வித்துள்ளார்.

தாக்குதலுக்கு காரணமான நபர்களை விரைவில் கைது செய்து அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் உறுதியளித்துள்ளார். (இ)

## பெண்ணை சுட்டுக்கொன்ற வழக்கு 11பேருக்கு மரணதண்டனை விதிப்பு


### மேற்கு வங்காள நீதிமன்று தீர்ப்பு

மேற்கு வங்காள மாநிலம் கிருஷ்ணாநகர் மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் 55 குடும் பத்தினருக்கு சொந்தமான ஒரு விவசாய நிலத்தை ஆயுதம் தாங்கிய ஒரு கும்பல ஆக்கிரமிக்க முயன்று வந்தது.

கடந்த 2014 ஆம் ஆண்டு நவம்பர் 23 ஆம் திகதி, அந்த கும்பல், நிலத்தை பறிக்க துப்பாக்கிகள் மற்றும் வெடிகுண்டுகளுடன் உழவு இயந்திரத்தில் வந்தது. அதற்கு கிராம மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். உடனே அக்கும்பல் வெடி குண்டுகளை வீசியதுடன் சரமாரியாக துபபாக்கியால் சுட்டது.

அதில், அபர்ணா பேக் என்ற பெண குண்டு பாய்ந்து சம்பவ இடத்திலேயே பலியானார். மேலும் 3 பேர் படுகாயம் அடைந்தனர். இது தொடர்பான வழக்கை விசாரித்த கிருஷ்ணா நகர் கூடுதல் செசன்சு நீதிமன்றல் நேற்று முன்தினம் தீர்ப்பு அளிககப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட 11 பேருக்கும் மரண தண்டனை விதித்து நீதிபதி பார்த்தசாரதி முகர்ஜி உத்தரவிட்டார். (இ)

## ரஷ்யாவில் அபாயகரமான பாலம்



ரஷ்யாவில் உள்ளூர் மக்களால் பயன்படுத்தப்படும் ரயில் தண்டவாளத்தை மிகவும் அபாயகரமான பாலம் என்று வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்யாவின் டிரான்ஸ் பைக்கல் பகுதியில் Kuandinsky என்ற பாலம் அமைந்துள்ளது.

உறைந்துபோன நீர் நிறைந்த விட்டிம் நதியின் மேல் அமைந்துள்ள இந்த பாலம் உண்மையில் ரயில் தண்டவாளமாகும். எனினும் இந்த திட்டம் நிறை வேறாததால் இந்த தணடவாளத்தை அப்படியே விட்டுவிட்டனர்.

இதையடுத்து அருகில் உள்ள குவாண்டா கிராமத்தை சேர்ந்த மக்கள் தங்களின் போக்குவரத்துக்காக பயன்படுத்த தொடங்கிவிட்டனர்.

பாதுகாப்பு சுவர்கள் இல்லாதது, சேதமடைந்துள்ள மரக்கட்டைகள், வேகமான காற்று என பல்வேறு ஆபத்துகள் உள்ளபோதும் உள்ளூர் மக்கள் இதனை தைரியமாக பயன்படுத்துகின்றனர். (இ)

## ஒரே ஒரு பயணிக்காக இயக்கப்பட்ட விமானம்

சீனாவில் ஒரே ஒரு பெண் பயணிக்காக பெரிய பயணிகள் விமானம் இயக்கப்பட்ட சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவில் நாளை மறுதினம் 8 ஆம் திகதி குரங்கு புத்தாண்டு பிறக்கிறது. அதில் பங்கேற்க சீனர்கள் தங்களது சொந்த ஊருக்கு குடும்பத்துடன் பயணம் செய்து வருகின்றனர்.

ஆனால் இந்த ஆண்டு அங்கு பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. இதனால் குயான்ஷூ, வூகன் உள்ளிட்ட மாகாணங்கள் கடும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளன. அப்பகுதியில் போக்குவரத்தும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஷாங் என்ற ஒரே ஒரு பெண்ணிற்காக விமானம் இயக்கப்பட்டது. அவருக்கு விமான பணிப்பெண்கள் மகிழ்ச்சியுடன் சேவை செய்தனர். (இ)

## பனிச்சரிவில் சிக்கிய 10வீரர்கள் பலி; பிரதமர் மோடி டுவிட்டரில் இரங்கல்



காஷ்மீரில் பனிச்சரிவில் சிக்கிய வீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்துவதாக இராணுவம் அறிக்கை வெளியிட்டுள்ளது. ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் லடாக்கில் உள்ள சியாச்சின் சிகரத்தில் ஏற்பட்ட பனிச்சரிவில் இராணுவ வீரர்கள் 10 பேர் நேற்று முன்தினம் சிக்கினர்.

பனிச்சரிவு நிகழ்ந்த சியாச்சின் கடல் மட்டத்தில் இருந்து 15 ஆயிரம் அடி உயரத்திலுள்ளது.

இந்த பனிச்சரிவில் ஒரு அதிகாரி உட்பட 10 இராணுவ வீரர்கள் சிக்கிகொண்டனர். பனியில் சிக்கியுள்ள இராணுவ வீரர்களை மீட்கும் பணியில் இராணுவமும் விமானப் படையும் ஈடுப்பட்டு வருகின்றன. ஆனால் சுமார் ஒரு கிலோ மீற்றர் பரப்பளவில் 600 மீற்றர் உயரத்தில் பரவியுள்ள பனியில் சிக்கியுள்ள வீரர்களை மீட்பதில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இதற்கிடையில் இராணுவம் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அதில் இது மிகவும் துயரமான நிகழ்வு. எல்லையை பாதுகாப்பதில் உள்ள அனைத்து சவால்களையும் எதிர்கொண்டு பணியின் போது செய்ய கூடிய மிகப் பெரிய தியாகத்தை அவர்கள் செய்துள்ளார்கள்.

அவர்களுக்கு இந்திய இராணுவம் வீரவணக்கம் செலுத்துகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தின் இந்த அறிகையால் பனிச்சரிவில் சிக்கிய 10 இராணுவ வீரர்களும் உயிருடன் மீட்கப்படுவதற்கான வாய்ப்பு இல்லை என்று கூறப்படுகிறது.

இதற்கிடையில் பிரதமர் மோடி தனது டிவிட்டரில் தெரிவித்திருப்பதாவது, சியாச்சின் பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரின் முடிவு மிகவும் சோகமானதாகவுள்ளது.

நாட்டுக்காக உயிர் நீத்த வீரர்களை வணங்குகிறேன். தேசமே அவர்கள் குடும்பத்துக்கு இரங்கலைத் தெரிவிக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார். (இ)

## ஐ.எஸ்.தீவிரவாதிகளை ஒழிப்பதற்கு தரைப்படைகளை அனுப்பத் தயார்

### சவுதி அரேபியா அறிவிப்பு

ஈராக் மற்றும் சிரியா நாடுகளின் சில பகுதிகளை கைப்பற்றி அங்கு அட்டூழியம் செய்துவரும் ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒழிக்க அமெரிக்கா தலைமையிலான 65 நாடுகள் அடங்கிய கூட்டுப்படையினர் வான்வழித் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்த இராணுவ நடவடிக்கையால் ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒழிக்கும் முயற்சியில் ஓரளவுக்கு வெற்றி கண்டுள்ளதாக கூறப்படும் நிலையில் மக்களோடு மக்களாய் ஊடுருவி அப்பாவி பொதுமக்களில் பலரை பிணைக்கைதிகளாகவும், இளம்பெண்களை அடிமைகளாகவும் பயன்படுத்திவரும் ஐ.எஸ். தீவிரவாதிகளை முழுமையாக முற்றுகையிட்டு அழிக்க இயலாத சூழல் நிலவி வருகின்றது.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு எதிராக போராடிவரும் கிளர்ச்சியாளர்களுக்கு வெளிப்படையாகவே ஆதரவு தெரிவித்து போராயுதங்களையும் வழங்கிவரும் சவுதி அரேபியா, அண்டைநாடான ஏமனில் ஜனாதிபதி அப்த் ரப்போ மன்சூர் ஹாதியின ஆட்சியை ஆதரித்து வருகின்றது.

அங்கு ஜனாதிபதியின் ஆட்சிக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருபவர்களுக்கு சிரியாவின் எதிரி நாடான ஈரான் வெளிப்படையாக ஆதரவு தெரிவித்து வருகின்றது.

இந்நிலையில், கூட்டுப்படைக்கு தலைமை வகிக்கும் அமெரிக்கா சம்மதித்தால் ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒழிப்பதற்கு தங்கள் நாட்டு தரைப்படைகளை அனுப்பிவைக்க தயாராக இருப்பதாக இந்த கூட்டுப் படையில் அங்கம் வகிக்கும் சவுதி அரேபியா அறிவித்துள்ளது.

ஏமனில் ஹவுத்தி போராளிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்தி வரும் சவுதி நாட்டு விமானப்படைக்கு தலைமை ஏற்றிருக்கும் பிரிகேடியர ஜெனரல் அஹமத் அல் அஸ்ஸிரி இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளார். இந்த அறிவிப்பை அமெரிக்கா ஏற்றுக் கொண்டு சம்மதம் தெரிவித்தால் சிரியாவுக் குள் விரைவில் சவுதி தரைப்படை வீரர்கள் நுழைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

# புகையிலை செய்கை விரைவில் இரத்து

## அமைச்சர் துமிந்த தகவல்



புகையிலை செய்கையை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாய அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வடமத்திய மாகாணம், இபலோகமவில் அண்மையில் இடம்பெற்ற விவசாய அபிவிருத்தி திட்டமொன்றை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் பங்கேற்ற அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வர்த்தக விவசாய செய்கையாக புகையிலையை பயிரிடுவது தவிர்த்து, உணவுப் பொருட்கள் பயிரிடப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடமத்திய மாகாணத்தில் ஏற்பட்டுள்ள சிறுநீரக நோய்களுக்கு இரசாயன உரங்களும், மருந்துகளும் விவசாய நடவடிக்கைகளில் பயன்படுத்துவது முக்கிய காரணிகளாக அமைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, விவசாயிகளை இயற்கை முறையில் பயிர்ச் செய்கையில் ஈடுபட ஊக்குவிக்கப்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-05.02.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.00 | 146.01 |
| பவுண்ட் | பிரிட்டன் | 206.13 | 213.42 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 158.02 | 164.29 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 141.92 | 147.86 |
| டொலர் | கனடா | 102.66 | 106.84 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 101.10 | 105.86 |
| டொலர் | சிங்கப்பூர் | 100.98 | 104.85 |
| ரூபா | இந்தியா | 2.1270 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6749 |
| குவைத் | டினார் | 478.8874 |
| ஓமான் | ரியால் | 373.6490 |
| கட்டார் | ரியால் | 39.5259 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3761 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1869 |

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 60 | 50 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 200 | 300 |
| தக்காளி | 60 | 50 | 70 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 35 | 40 | 40 |
| கோவா | 80 | 80 | 100 | 80 |
| கரட் | 200 | 180 | 250 | 250 |
| பூசணி | 40 | 50 | 50 | 50 |
| புடோல் | 60 | 50 | 60 | 70 |
| வாழைக்காய் | 80 | 45-55 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 | 80 | 70 |
| பாகற்காய் | 80 | 90 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 150 | 70 | 80 | 150 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 80 | 70 |
| பயற்றங்காய் | 200 | 120 | 120 | 120 |
| லீக்ஸ் | 80 | 90 | 100 | 80 |
| பீற்றூட் | 100 | 80 | 100 | 80 |
| கறிமிளகாய் | 300 | 180 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 1000 | 300-400 | 600 | 1000 |
| போஞ்சி | 100 | 80 | 80 | 120 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | — | 100 |
| கீரை - 1 பிடி | 30 | 10 | 40 | 30 |
| தேசிக்காய் | 80 | 40 | 70 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-40 | 50 | 50 |
| இராசவள்ளி | 140 | 100 | 160 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 80 | 70 | 80 |
| முள்ளங்கி | 20 | 40 | 40 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 10 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 20 |
| ஈரப்பலா | 60 | 40 | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## நாடு கடத்தப்பட்ட சந்திரஹாசன் சென்னை திரும்பினார் 98

....அவர்கள் நாடு கடத்தல் உத்தரவு, ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து சந்திரஹாசன் சென்னை திரும்பினார்.

சந்திரஹாசன், அமெரிக்காவுக்குச் செல்ல மறுத்ததால், அவரை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்ப அமெரிக்க அதிகாரிகள் முடிவு செய்தனர். இதன்படி சந்திரஹாசன் பயணம் செய்த விமானம் 28.08.1985 அன்று அதிகாலை 6.30 மணிக்கு டெல்லி வந்து சேர்ந்தது.

அவர் விமானத்திலிருந்து இறக்கப்படவில்லை.

அவரைச் சந்திக்க வேண்டும் என்று பத்திரிகையாளர்கள், அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டனர். ஆனால் அவரைச் சந்திக்கப் பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்படவில்லை.

**மும்பை புறப்பட்டது**

இதன்பிறகு அந்த விமானம் மும்பை புறப்பட்டுச் சென்றது. காலை 10.30 மணிக்கு மும்பை சென்றடைந்தது. பயணிகள் அனைவரும் விமானத்தில் இருந்து இறங்கினார்கள். ஆனால் சந்திரஹாசன் இறங்கவில்லை.

சிறிது நேரம் கழித்து சந்திரஹாசனை அதிகாரிகள் அழைத்து வந்தனர். அவரை அதிகாரிகள் கைது செய்து விமான நிலையத்தின் தனி அறையில் காவலில் வைத்தனர்.

சந்திரஹாசனை இந்தியாவில் தங்கி இருக்க அனுமதிக்க மாட்டோம். அவர் எந்த நாட்டுக்குப் போக விரும்புகிறார் என்பதை அறிவதற்காகக் காத்திருக்கிறோம் என்று மத்திய அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**சந்திரஹாசன் கடிதம்**

இதற்கிடையே நாடு கடத்தல் உத்தரவை வாபஸ் பெற வேண்டும் என்று பிரதமர் ராஜீவ் காந்திக்கு ஏராளமான கோரிக்கைகள் அனுப்பப்பட்டன.

ராஜீவ் காந்திக்குச் சந்திரஹாசனும் கடிதம் எழுதினார். அதில், நான் எப்போதும் இந்தியாவின் நண்பன். இந்திய அரசுக்கு எந்தவித தொல்லையும் கொடுப்பது என் நோக்கம் அல்ல. என் மக்களுக்கு வாழ்வா, சாவா என்ற பிரச்சினையில் நான் ஒரு இலட்சியத்தை எதிர்நோக்கியிருக்கிறேன். இந்த நெருக்கடியான நேரத்தில் நான் இந்தியா திரும்புவது என்னை நம்பி இருக்கும் லட்சக்கணக்கான சகோதர- சகோதரிகளின் கண்களையும் இதயத்தையும் திறக்கும் என்று நம்புகிறேன் என்று எழுதப்பட்டிருந்தது.

மும்பை விமான நிலையத்தில் ரங்கராஜன் குமாரமங்கலம் எம்.பி. அவரைச் சந்தித்து உண்ணாவிரதத்தைக் கைவிட கேட்டுக்கொண்டார். இதற்கு சந்திரஹாசன் மறுத்துவிட்டார்.

**கடத்தல் உத்தரவு ரத்து**

இதுபற்றி ஆலோசனை நடத்திய பிரதமர் ராஜீவ் காந்தி, சந்திரஹாசனை நாடு கடத்தும் உத்தரவை 29.08.1985 அன்று ரத்துச் செய்தார். இதைத் தொடர்ந்து மும்பை விமான நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்த சந்திரஹாசன் பகல் 12.30 மணிக்கு விடுதலை செய்யப்பட்டார்.

**சென்னை வருகை**

பிறகு விமானம் மூலம் அவரைச் சென்னைக்கு அதிகாரிகள் அனுப்பி வைத்தனர். பிற்பகல் 3.30 மணிக்கு அவர் சென்னை வந்து சேர்ந்தார்.

விமான நிலையத்தில் அவருடைய மனைவி நிர்மலா, மகன் இளங்கோவன், மகள்கள் கோகிலம், பூங்கோதை, இலங்கைத் தமிழர் தலைவர்களில் ஒருவரான ஈழவேந்தன் உட்பட பலர் வரவேற்றனர்.

விமான நிலையத்திலிருந்து நுங்கம்பாக்கத்தில் உள்ள அவரது வீட்டுக்குச் சந்திரஹாசன் சென்றார். அங்கு நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது:-

நான் நாடு கடத்தப்பட்டதற்கான காரணம் இதுவரை எனக்குத் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் நான் அமெரிக்காவில் இறங்க மறுத்ததும் அமெரிக்காவில் உள்ள இந்திய அதிகாரிகள் என்னிடம், திம்பு பேச்சுவார்த்தைக்கு நீங்கள் இடையூறாக இருக்கலாம் என்று கருதி நாடு கடத்தப்பட்டிருக்கிறீர்கள் என்று தெரிவித்தார்கள். இலங்கை பேச்சுவார்த்தை முடியும்வரை 2 மாத காலம் நான் அமெரிக்காவில் இருக்க மத்திய அரசு விரும்புகிறது என்றும் சொல்லப்பட்டது.


நான் திம்பு பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவில்லை. அப்படி இருந்தும் இப்படி ஒரு கருத்து உருவாக்கப்பட்டுள்ளது. வவுனியாவிலும் திருகோணமலையிலும் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்தே திம்பு பேச்சுவார்த்தையில் இருந்து விடுதலைப் புலிகள் வெளிநடப்பு செய்தார்கள். விடுதலைப்புலிகளை வெளிநடப்பு செய்யும்படி நான் தூண்டவில்லை.

**உரிமை**

திம்பு பேச்சுவார்த்தை தமிழர்களைப் பற்றியது.

இந்தச் சமயத்தில் இலங்கையில் இருந்து அகதியாக இந்தியா வந்துள்ள நான் இந்தியாவில்தான் இருக்க விரும்புகிறேன்.

இந்தியாவில் இருக்க உரிமை இல்லையென்றாலும் செத்து மடிந்தாலும் பரவாயில்லை; ஈழத்துக்குதான் போவேன். வேறு எந்த நாட்டுக்கும் போகமாட்டேன்.




(தொடரும்)

# தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டமை ஒற்றுமையை சீர்குலைக்கும் முயற்சி

## உதய கம்மன்பில தெரிவிப்பு

(கொழும்பு)



**தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்பட்டமை தேசிய ஒற்றுமையை சீர்குலைக்கும் முயற்சியாகவே கருதப்பட வேண்டுமென பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

68ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வில் தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்பட்டமை குறித்து அவர் இவ்வாறு கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

தாய் நாட்டை பிரித்துக் கொள்வதில் மட்டும் இதுவரையில் பிளவடைந்திருந்த இன சமூகங்கள், தற்போது தேசிய கீதம் தொடர்பிலும் பிளவடைந்துள்ளன.

தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடுவது அரசியல் அமைப்பின் 7 ஆம் சரத்தினை மீறும் செயலாகும்.

எனவே, சுதந்திர தினத்தில் தேசிய கீதத்தை தமிழ் மொழியில் இசைத்ததன் மூலம் ஜனாதிபதி தமக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டு வரக்கூடிய பாரிய குற்றமிழைத்துள்ளார். தேசிய கீதம், தேசிய கொடிஎன்பனதேசிய ஒற்றுமையின் குறியீடுகளாகும்.

இவ்வாறான ஓர் காரியத்தை செய்ய முன்னர் 1721 மொழிகள்காணப்படும்அண்டை நாடான இந்தியாவை முன்னுதாரணமாக கொண்டிருக்க வேண்டும்.

1721 மொழி பேசும் இந்தியாவில் பெங்காலி மொழியில் தேசிய கீதம் பாடப்படுகின்ற நிலையில், குறுகிய அரசியல் நோக்கில் தூரநோக்கின்றி எடுக்கப்பட்ட தீர்மானம் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என உதய கம்மன்பில மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# அமைச்சரவை பேச்சாளர்களுக்கு பிரதமர் அறிவுரை

அமைச்சரவை பேச்சாளர்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவுரை வழங்கியுள்ளார். இதன் போது அரசாங்கத்திற்கு பாதக நிலைமை ஏற்படக் கூடிய வகையில் கருத்து வெளியிடுவதனை தவிர்த்துக் கொள்ளுமாறு பிரதமர் கோரியுள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்புக்களின் போது அரசாங்கத்திற்கு நெருக்கடி ஏற்படக்கூடிய வகையில் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஆளும் கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் ஐக்கிய தேசியக்கட்சிமற்றும்ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் அமைச்சரவை இணைப பேச்சாளரின் கருத்துக்களின் பாரதூரத் தன்மை குறித்து விளக்கியுள்ளனர்.

இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இணைப் பேச்சாளர் கயந்த கருணாதிலக பங்கேற்றிருந்த போதிலும், ராஜித சேனாரட்ன பங்கேற்றிருக்கவில்லை.

கூட்டத்தில் அமைச்சரவை இணைப் பேச்சாளர் பற்றிய விமர்சனங்கள் வெளியிடப்பட்ட போது இவை அனைத்திற்கும் தமக்கும் தொடர்பு கிடையாது என்ற தோரணையில் கயந்த கருணாதிலக அமர்ந்திருந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலத்தில் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்புக்களின் போது அமைச்சர் ராஜித கடுமையான விமர் சனங்களை வெளியிட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

**அதிசொகுசு பிராடோ வாகன இறக்குமதி குறித்த**

# விவாதத்தில் இணைக்குமாறு ஊழியர் சங்கம் கோரிக்கை

அதிசொகுசு பிராடோ வாகன இறக்குமதி தொடர்பாக ரவி கருணாநாயக்க- அநுரகுமார திசாநாயக்க விவாதத்தில் தங்களையும் இணைத்துக் கொள்ளுமாறு சுங்கத் திணைக்கள ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த வருடம் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டிருந்த பெருந்தொகையான அதிசொகுசு பிராடோ வாகனங்கள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவின் பணிப்புரையின் பேரில் குறைந்த வரி அறவீட்டுடன் விடுவிக்கப்பட்டிருந்தது.

இதன் மூலம் பெருந்தொகைப் பணம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருப்பதாகவும், நிதியமைச்சர் இதில் நேரடியாகத் தொடர்புபட்டிருப்பதாகவும் ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திசாநாயக்க குற்றம் சாட்டியிருந்தார்.

இதுதொடர்பாக பகிரங்க விவாதமொன்றுக்கு வருமாறு நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவிடுத்தவேண்டுகோளையும் அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த விவாதத்தில் தங்களையும் இணைத்துக் கொள்ளுமாறு சுங்கத் திணைக்கள ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

வாகன இறக்குமதி தொடர்பான சகல விபரங்களும் தங்களுக்குத் தெரியும் என்பதால் தாங்களும் இந்த விவாதத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (இ)

# மகிந்தவின் குடும்பத்தினரை அரசு பாதுகாக்க வேண்டும்

## அமைச்சர் சொய்சா தெரிவிப்பு


(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரின் குடும்ப உறுப்பினர்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்தின் நீர் முகாமைத்துவ அமைச்சர் விஜித் விஜய முனி சொயஸா தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்கள் மத்தியில் இந்தக்கருத்தை அவர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு விமர்சனங்களை வெளியிட முடியாது என்ற போதிலும் முன்னாள் முதல் குடும்பத்தை பாதுகாப்பது அவசியம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

எவர் மீது குற்றம் சுமத்தப்பட்டாலும் அது நீதிமன்றத்தின் மூலமே தெளிவாக்கப்படும். எனினும் அரசியல்வாதிகள் சட்டத்தை கையிலெடுக்கக்கூடாது.



இதற்கு முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான நடவடிக்கையும் ஒரு உதாரணம் என்று சொய்ஸா தெரிவித்தார். (இ)

# இன்று ஒரு தகவல்

## பயிலவேண்டிய பாடம்

யாருமே நல்லவர்கனல்லர்; யாருமே கெட்டவர் களல்லர். என்ன பிதற்றுகிறீர்கள்?என்று கேட்பீர்கள்.

பிதற்றவில்லை.உண்மை.

மனிதர்களின் மனத்தை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். மேலோட்டமான பகுதியில் மனிதன் நல்லவன். அடுத்த நிலையில் அவன் பொல்லாதவன். அடி மனதில் அவன் நல்லவன். ஆழ்மனதில் அவன் ஒரு கொடுமையான மனத்தினன்.

அவனது இந்த நான்காவது நிலையை அவனோடு பல வருடங்களாகவே வாழ்ந்த அவனது மனைவி கூட அறிந்திருக்கமாட்டாள். அல்லது கணவன் கூட அறிந்திருக்க மாட்டான் இந்த சனியன் ஒழிந்தால் தேவலை என்று கணவன் உள்ளூர எண்ணிக் கொண்டிருப்பான். மனைவியோ தன் கணவன் தன் மீது உயிரையே வைத்து இருக்கிறான் என்று எண்ணிக் கொண்டிருப் பாள்.

ஒருவன் நம்மைப் பொறுத்த அளவில் நல்லவனாக விளங்க அவனது அடிமனதைத் தொடும்படி பழக வேண்டும். அவனது ஆழ்மனத்தைச் சோதனை செய் யும் முயற்சியில் இறங்கக் கூடாது. காரணம் ஆழ் மனத்தில் அவன் கெட்டவன்தான். அதில் உங்களுக்குத் துளியும் ஐயம் வேண்டாம்.

உங்கள் நண்பர் ஒருவரை நீங்கள் மிகவும் நல்லவர் என்று புகழ்கிறீர்கள். ஆனால்,வேறு ஒருவரோ இடை மறித்து,அவரைப் போல் பொல்லாதவரை நான் கண்ட தில்லை என்று முற்றிலும் மறுக்கிறார் என்றால் இவற் றுள் எது உண்மை? இரண்டுமே உண்மைதான். முன்பு சொன்ன மனத்தின் நான்கு நிலைகள் என்ற விதியை இங்கு நினைவுபடுத்திப் பாருங்கள். அந்த மனிதர் இரண்டாவது நிலையையும் நான்காவது நிலையை யுமே சோதித்துப் பார்த்திருக்கிறார்கள். இது அவரவர் களின் அணுகுமுறையைப் பொறுத்த விடயம்.

நீங்கள் அறிந்திராத ஒருவரை நல்லவர் என்றோ கெட்டவர் என்றோ மற்றவர்கள் சொன்னால் நீங்கள் அதை நம்ப வேண்டாம். அப்படி நம்புவது என்பது,ஒரு நீதிபதி வழக்கை விசாரிக்கும் முன்னரே ஒருவனைக் குற்றவாளி என்று முடிவுக்கு வருவதற்கும் மேலான குற்றமாகும். மற்றவர்கள் நம்மைப் பொறுத்த அளவில் நல்லவர்களாக நடந்து கொள்வதுதான்.

நாம் நல்லவர்களாகி விடுவோமானால் அவர்கள் இரசம் பூசப்பட்ட கண்ணாடி போல் ஆகி,நம் நல்ல குணங்களையே பிரதிபலிப்பார்கள்.

புராணத்தில் ஒருகதை சொல்லப்படுவதுண்டு. தரும னின் கண்ணுக்கு பொல்லாதவர்களே தென்படவில்லையாம்.

இந்த உண்மை உணராதவர்கள்தாம்,இந்த உலகம் மிகப் பொல்லாதது என்கிறார்கள்.

உணர்ந்தவர்கள் மகிழ்ச்சியோடு வாழ்க்கை நடத்துகிறார்கள்.

**லேனா தமிழ்வாணன்**

# சோபித தேரரின் சிலை அமைக்கும் பணி நிறுத்தம்

மறைந்த மாதுளுவாவே சோபித தேரரின் சிலை அமைக்கும் பணிகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிககப்பட்டுள்ளது.

இதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இன்று 6ஆம் திகதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமையில் நடைபெறவிருந்தது.

எனினும், சில தரப்பிலிருந்து எழுப்பப்பட்ட எதிர்ப்பைத் தொடர்ந்து அடிக்கல் நாட்டும் வைபவம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்ப்பு வெளியானதை தொடர்ந்து, மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரியவின் உத்தரவிற்க மைய பணிகள் தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளதாக மதுகம பிரதேச சபையின் செயலாளர் அசோக ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மதுகம பிரதேச சபை கேட்போர் கூடத்தில் மாதுளுவாவே சோபித தேரரின் உருவச் சிலை அமைக்கத் திட்டமிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# முன்னாள் துணைப் பொலிஸ் அத்தியட்சகர் சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றம்

எம்பிலிபிட்டி பிரதேசத்தின் முன்னாள் துணைப் பொலிஸ் அத்தியட்சகர் டி.டபிள்யூ.சீ. தர்மரட்னவே சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அண்மையில் எம்பிலிபிட்டி பிரதேசத்தில் இளைஞர் ஒருவரது மரணம் தொடர்பில் துணைப் பொலிஸ் அத்தியட்சகர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில் கைதான துணைப்பொலிஸ் அத்தியட்சகரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந் நிலையிலேயே அவர், சிறைச்சாலை வைத்தி யசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (இ)



# சிறுவர் அரங்கம்

1353

## அண்டங்காக்கா!

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு சிற்றூரில் ஒரு பெரியவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு ஏழு பிள்ளைகள் இருந்தனர். கடைசியாக ஒரு பெண் பிறந்தாள்.

ஏழு மகன்களும், அந்தப் பெண்ணும் மகிழ்ச்சியாக இருந்தனர். ஆனால், கடைசியாகப் பிறந்த பெண் மட்டும் நோஞ்சானாக இருந்தாள். அவள் நீண்ட நாள் வாழ்வது கடினம் என்று தந்தை கருதினார்.

ஒருநாள்- தன் மகன் ஒருவனை விரைந்து சென்று கிணற்று நீரை ஒரு குவளையில், கொண்டுவருமாறு சொன்னார். ஆனால், அந்த ஒருவனைப் பின்பற்றி மற்ற ஆறு பேரும் ஓடினர்.

யார் முதலாகத் தங்கள் தங்கைக்குத் தண்ணீர் கொண்டு வருவது என்பதில் அவர்களுக்குள் போட்டா போட்டி. அவர்கள் வந்த வேகத்தில் தங்கள் குவளைகளைக் கிணற்றுக்குள் போட்டு விட்டனர்.

இப்போது என்ன செய்வது என்று தெரியாமல் அவர்கள் விழித்தனர். தண்ணீர் இல்லாமல் சென்றால் தந்தை அடிப்பார் என்று பயந்தனர்.

தந்தையோ வீட்டில் பதற்றத்தோடு இருந்தார். "ஏன் அவர்கள் இவ்வளவு நேரம் ஆகியும் வரவில்லை" என்று கவலைப் பட்டார்.

'ஏழு பேரும் வழியில் ஏதோ விளையாட்டில்தான் ஈடுபட்டிருக்க வேண்டும். அதில், அவர்கள் தண்ணீர் கொண்டு வருவதைக் கூட மறந்து விட்டனர்" என்று அவர் கருதினார்.



நேரம் ஆக, ஆக அவர்கள் வராமல் போனதால், அவருக்கு மிகுந்த கோபம் வந்தது. அந்த ஏழு பேரையும், "நீங்கள் காகங்களாக மாறுங்கள்" என்று சபித்து விட்டார்.

அவர் அப்படிச் சொன்னாரோ இல்லையோ உடனடியாக, அந்தப பிள்ளைகள் அனைவரும் காகங்களாக மாறி விட்டனர்.

அந்த எழுவரும் அண்டங்காக்கைகளாக வீட்டை சுற்றிச் சுற்றிப் பறந்து வந்தனர். தந்தை அவற்றைப் பார்த்தார். தன் சாபம் பலித்துவிட்டதை நினைத்து வருந்தினார். அவர்களை மீண்டும் மனிதராக அவரால் மாற்ற முடியவில்லை. அதற்காக வருந்தினார்.

ஏழு பிள்ளைகளை அவர் இழந்துவிட்டார். ஆனாலும், நாளுக்கு நாள் அவர் மகள் மட்டும் தேறி, அழகு தேவதையாக மாறி வந்தது, அவருக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

பல நாள்களாக அந்தப் பெண்ணிற்கு அண்ணன்மார்கள் இருந்தது தெரியாது. தாயும், தந்தையும், அவளுக்கு அண்ணன்கள் எழுவர் இருந்தனர் என்பதைச் சொல்லாமல், மறைத்து விட்டனர்.

எதிர்பாராத விதமாக, அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் இவளுக்கு அண்ணன்கள் இருந்த கதையைப் பற்றிச் பேசி கொண்டனர். அவர்கள், "அதோ, அவள் எவ்வளவு அழகாக இருக்கிறாள். ஆனால், பாவம் அவளைக் காப்பாற்ற நினைத்த அந்த ஏழு அண்ணன்களும் இல்லாமல் போய்விட்டனர்" என்றனர்.

இதைக் கேட்ட அவள் மிகவும் வருந்தினாள். தாய் தந்தையிடம் சென்றாள்.

"தனக்கு அண்ணன்கள் எழுவர் இருந்தனரா? அவர்களுக்கு என்ன ஆயிற்று சொல்லுங்கள்?" என்று வினவினாள்.

இதற்கு மேலும், மறைக்க முடியாது என்று கருதிய அவர்கள், உண்மையைச் சொல்லி விட்டனர்.

'நாம் என்ன செய்வது? அது விதி. நீ வந்த நேரம், அந்த ஏழுபேரும் போய்விட்டனர்" என்றனர்.

அவள் அவர்களைப் பற்றி நாள்தோறும் நினைத்து வருந்தினாள். (தொடரும்)

### இரண்டாம் எலிசபெத்



இரண்டாம் எலிசபெத் 1926 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி பிறந்தார். இவர் இலண்டனில் பிறந்து வீட்டிலேயே கல்வி கற்றார.

இவர் ஐக்கிய இராச்சியம் உட்பட 16 இறைமையுள்ள நாடுகளின் அரசியல் சட்டப்படியான அரசியாக உள்ளார். அனைத்து நாடுகளுக்கும் இவர் தனித்தனியே வெவ் வேறு பெயர்களில் ஆட்சிப் பெயர்களைக் கொண்டிருந்தாலும், ஐக்கிய இராச்சியத்திலேயே, லண்டனில் உள்ள பக்கிங்ஹாம் அரண்மனையில் இவர் வாழ்கிறார். 54 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட பொதுநலவாயத்தின் தலைவரும் இவராவார். இங்கிலாந்து திருச்சபையின் மிக உயரிய ஆளுநர் ஆவார். பெப்ரவரி 6, 1952 ஆம் ஆண்டில் இவரது தந்தை ஆறாம் ஜோர்ஜ் இறந்தவுடன் ஐக்கிய இராச்சியம், கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, பாக்கித்தான் மேலாட்சி, இலங்கை ஆகிய ஏழு பொதுநலவாய நாடுகளுக்கு அரசியாக இவர் முடிசூடினார். இவற்றைத் தவிர, ஜெமெய்க்கா, பார்படோஸ், பகாமாஸ், கிரெனாடா, பப்புவா நியூகினி, சொலமன் தீவுகள், துவாலு, சென்லூசியா, சென் வின்செண்ட் மற்றும் கிரெனாடின்ஸ், பெலீஸ், அண்டிகுவா பார்புடா, சென்கிட்ஸ் மற்றும் நெவிஸ் ஆகிய நாடுகளுக்கு அரசியாக உள்ளார். இந்நாடுகளில் இவரது அதிகாரம் மிகவும் பரந்துபட்டவை ஆயினும், பொதுவாக இவர் உள்ளூர் அரசியலில் தலையிடுவதில்லை. 61 ஆண்டு களாக அரசாட்சி புரியும் இவர் பிரித்தானிய அரசர்களிலேயே இரண்டாவது மிக நெடுங்காலம் ஆட்சி புரிந்தவராக விளங்குகிறார் 1947 இல் எலிசபெத் எடின்பரோ கோமகன் பிலிப்பை மணந்தார். இவர்களுக்கு நான்கு பிள்ளைகள். இவரது முடிசூட்டும் விழா 1953 ஆம் ஆண்டு நிகழ்ந்தபோது அதுவே உலகில் முதன்முதலாக தொலைக்காட்சியில் காட்டப்பட்ட பெருமை பெற்றது. அரசியின் பல வரலாற்றுச் சிறப்பு மிக்க வருகைகளிலும் சந்திப்பு களிலும் அயர்லாந்து குடியரசுக்கான அரசுப் பயணமும reciprocal visits to and from the திருத்தந்தையுடனான சந்திப்புக்களும் முதன்மையானவை. தனது ஆளுமைக்குட்பட்ட நாடுகளில் பல அரசியல்சட்ட மாற்றங்களை கண்டுள்ளார். ஐக்கிய இராச்சியத்தில் அதிகாரப் பகிர்வு மற்றும் கனடிய அரசியல் சட்டத்தின் திரும்பப் பெறல் போன்றவை. தனிப்பட்ட வாழ்க்கையில் பிள்ளைகளின் பிறப்பும் திருமணமும், பேரக் குழந்தைகளின் பிறப்பு, வேல்சு இளவரசரின் முடிசூடல் மற்றும் ஆட்சியின் மைல்கற்களாக அமைந்த வெள்ளி (1977), தங்க (2002), வைரவிழா (2012)க் கொண்டாட்டங்கள் முதன்மையான நிகழ்சிகளாகும். அரசியின் ஆட்சியில் முக்கிய நிகழ்வுகளாக வட அயர்லாந்து போராட்டங்கள், பாக்லாந்து போர், ஈராக் போர் மற்றும் ஆப்கானித்தான் போர்கள் விளங்குகின்றன. அவரது தந்தையின் மறைவு, இளவரசர் பிலிப்பின் மாமா மவுண்ட்பேட்டன் பிரபுவின் கொலை, 1992இல் பிள்ளைகளின் மணமுறிவுகள், 1997 இல் அவ்ரது மகனின் முன்னாள் மனைவி டயானாவின் மறைவு, தாய் எலிசபெத்தின் மறைவு மற்றும் தங்கை இளவரசி மார்கரெட்டின் மறைவு ஆகியன அவருக்கு ஏற்பட்ட தனிப்பட்ட வருத்தமாக அமைந்தன. அரச குடும்பம் மற்றும் குடியரசு கொள்கைகளுக்காக ஊடகங்களில் அவ்வப்போது விமர்சிக்கப்பட்டாலும் இவரது ஆட்சிக்கு மக்களின் முழுமையான ஆதரவு உள்ளதுடன் தனிப்பட்ட முறை யிலும் பெரும் புகழ்பெற்றுள்ளார்.

### 02.2016 06 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1658 - சுவீடன் மன்னன் பத்தாம் குஸ்டாவின் படைகள் உறைந்த கடலைத் தாண்டி டென்மார்க்கை அடைந்தனர்.
- 1819 - ஸ்டாம்ஃபோர்ட் ராஃபில்ஸ் என்பவரால் சிங்கப்பூர் அமைக்கப்பட்டது.
- 1840 - நியூசிலாந்தில் வைதாங்கி ஒப்பந்தம் பிரித்தானிய அரச பிரதிநிதியாலும், மவோரி தலைவர்களாலும் எட்டப்பட்டது.
- 1863 - சிலோன் பேட்ரியட் (The Ceylon Patriot) இதழ் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டது.
- **1952 - இரண்டாம் ஜோர்ஜின் இறப்பை அடுத்து இரண்டாம் எலிசபெத் ஐக்கிய இராச்சியம் உட்பட 7 நாடுகளுக்கு அரசியானார்.**
- 1959 - டெக்சாஸ் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த ஜாக் கில்பி integrated circuit க்கான முதலாவது காப்புரிமத்தைப் பெற்றார்.
- 1959 - கண்டம் விட்டுக் கண்டம் பாயும் முதலாவது டைட்டான் ஏவுகணை புளோரிடாவில் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.
- 2000 - டார்ஜா ஹலோனென் பின்லாந்தின் முதல பெண் ஜனாதிபதியானார்.


**பிறப்புகள்**

- 1465 - டெல் ஃபெர்ரோ, இத்தாலியக் கணிதவியலாளர் (இ. 1526)
- 1892 - வில்லியம் மேர்ஃபி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1987)
- 1911 - ரோனால்டு ரேகன், ஐக்கிய அமெரிக்காவின் 40 ஆவது குடியரசுத் தலைவர (இ. 2004)
- 1912 - இவா பிரான், கிட்லரின் மனைவி (இ. 1945)
- 1983 - ஸ்ரீசாந்த், இந்திய கிரிக்கெட் வீரர்

**இறப்புகள்**

- 1827 - சியாமா சாஸ்திரிகள், கர்நாடக இசை மும்மூர்த்திகளில் ஒருவர (பி. 1762)
- 1931 - மோதிலால் நேரு, இந்திய அரசியற் தலைவர் (பி. 1861)
- 1952 - ஆறாம் ஜார்ஜ், இங்கிலாந்தின் மன்னன் (பி. 1895)
- 1985 - ஜேம்ஸ் சேஸ், ஆங்கில எழுத்தாளர் (பி. 1906)
- 1991 - சல்வடோர் லூரியா, நோபல் பரிசு பெற்றவர் (பி. 1912)
- 2002 - மாக்ஸ் புருட்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1914)

# தமிழில் தேசியகீதம் பாடப்பட்டது ஆச்சரியப்படத்தக்க விடயமல்ல



**(கொழும்பு) சம்பந்தன் தெரிவிப்பு**

**இலங்கையின் 68 ஆவது சுதந்திர தின நிகழ்வில் தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டது ஆச்சரியப்படத்தக்க விடயமல்ல என்று எதிர்க்கட்சித் தலைவரும், தமிழுத் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர்,

இது புதியதுமல்ல, அதே வேளை ஆச்சரியப்பட வேண்டிய ஒன்றும் அல்ல.

ஏனென்றால், தேசிய கீதம் ஏற்கனவே சுதந்திர நாள் நிகழ்வில் தமிழில் பாடப்பட்டு வந்ததே. ஏற்கனவே இருந்த ஒன்று மீள நடைமுறைக்கு வந்துள்ளது. எனவே இது பெரிய விடயமல்ல.

மீண்டும் அதனைப் பாடத் தொடங்கியிருப்பது மகிழ்ச்சிதான். எனினும் இதனை மீள் நடைமுறைப்படுத்தியதால் அரசாங்கத்திற்கும் நன்மையாகும். அதே போன்று மக்களுக்கும் நல்லது தான்.எனினும் தமிழ் மக்கள் பிறரின் தயவில் வாழ வேண்டியவர்களல்லா என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# இலங்கை- பாகிஸ்தான்- மாலைதீவு படையினர் கூட்டு இராணுவப்பயிற்சி

இலங்கை, பாகிஸ்தான் மற்றும் மாலைதீவு படையினர் இணைந்து பயங்கரவாத எதிர்ப்பு இராணுவ பயிற்சி ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியில் இந்த பயிற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாகிஸ்தானிய இராணுவம் அறிவித்துள்ளது.

இந்த பயிற்சி இரண்டு வாரங்களுக்கு தொடந்த நிலையில் பயங்கரவாதத்துக்கு எதிரான தாக்குதல் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டதாக அந்த நாட்டின் இராணுவம் அறிவித்துள்ளது.

இவ்வாறான பயிற்சிகள் ஏற்கனவே சவுதி, பஹ்ரெய்ன், சீனா ஆகிய நாடுகளுடனும் மேற்கொள்ளப்பட்டன.

ஈகல் டேஷ் 1 என்ற பெயரிடப்பட்ட இந்த பயிற்சிகளை பாகிஸ்தானிய இராணுவ தளபதி ரஹீல் செரீப் நேர்டியாக பார்வையிட்டுள்ளார். எனினும் இந்த பயிற்சிகள் எப்போது மேற்கொள்ளப்பட்டன என்ற விபரம் அறிவிக்கப்படவில்லை. (இ)

# அரச வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு

நாடெங்கிலுமுள்ள பல வைத்தியசாலைகளில் அத்தியாவசிய மருந்துகளுக்குக் கடும் தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இருதயநோய், சிறுநீரகநோய், நீரிழிவுநோய், புற்றுநோய், உயர் குருதி அழுத்தம், வாயுப்பிடிப்பு போன்ற பல்வேறு நோய்களுக்கான அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும், வடமத்திய மாகாணத்தின் அநுராதபுர வைத்தியசாலைகளில் மாத்திரம் 21 ஆயிரம் சிறுநீரக நோயாளிகள் உள்ளனர் என்றும் அவர்களுக்கான "வன் எல்பா" எனும் முக்கிய மருந்துக்கு கடந்த இரு மாதங்களாகத் தட்டுப்பாடு நிலவிவருவதாகவும் சுகாதார அமைச்சின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இந்த மருந்துத் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக் சுகாதார அமைச்சின் மருந்துகள் விநியோகப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் டாக்டர் கமல் ஜயசிங்கவை குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு மீண்டும் சேவையில் அமர்த்துமாறு சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன அமைச்சின் செயலாளர் அருண ஜயவிக்கிரமவுக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் அநத வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது நிலவும் மருந்துத் தட்டுப்பாடு பற்றி பரிசீலனை செய்வதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அநுராதபுரம் மற்றும் பதவிய பிரதேச வைத்தியசாலைகளுக்கு இன்று விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

பின்வரும் அதிமுக்கிய மருந்துகளுக்குக் கடும் தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. Pazopanib, Novo taxel, Filga Strim, Be Vaci mnstine Lapatonib, Meg Ace, Mitotaue.

சுகாதார அமைச்சரின் பணிப்புரையின் கீழ் வடமத்திய மாகாணத்தின் சிறுநீரக நோயாளிகளுக்கான அத்தியாவசிய மருந்துகளை உடனடியாக விநியோகிக்குமாறு மருந்துகள் விநியோகப் பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் அதன் பிரகாரம் இன்னும் ஓரிரு தினங்களில் அவை விநியோகிக்கப்படும் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்தார். (இ)


# பொன்சேகாவின் தேசியப் பட்டியல் விவகாரம்; ஐ.தே.க. செயற்குழு அவசரமாகக் கூடுகிறது

ஜனநாயகக் கட்சியின் தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு தேசியப் பட்டியல் வழங்குவது தொடர்பில் கட்சிக்குள் எழுந்துள்ள சர்ச்சை உட்பட கட்சியினால் முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்காக ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு நாளை மறுதினம் திங்கட கிழமை அவசரமாக கூடவுள்ளது.


ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நாளை மறுதினமதிங்கட்கிழமையன்று மாலை 4 மணிக்கு கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் செயற்குழு கூட்டம் நடைபெறவுள்ளது. (இ)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 625

சர்லின்




வர்மலன்



லவன் சிவா


வாழ்க்கைத் தத்துவம்..!

ஒரு ஆண் கல்யாணம் ஆகறதுக்கு முன்னாடி "இட்லி" மாதிரி.... அப்பா அம்மா அவனை பொத்தி பொத்தி வச்சுக்குவாங்க.....

அதுவே அவனுக்கு கல்யாணம் ஆயிடுச்சுனா அவன் "தோசை" மாதிரி....வீட்டுக்காரம்மா புரட்டி புரட்டி போடுவா.....

நீங்க தோசையா இல்லை இட்லியா......
நீங்களே முடிவு பண்ணிக்குங்க....

சபிதா




சோபிகா





அனற் றொய்சி



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சாள்ஸ் அன்ரனியும் யோஷித ராஜபக்ஷவும்









...மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட விசாரணை ஆணைக்குழுவானது பின்வரும் மூன்று விடயங்களை யோஷித தொடர்பில் முன்வைத்துள்ளது:-

இலங்கை கடற்படையின் 45 ஆவது அதிகாரிப் பயிலுனராக கடற்படையில் இணைந்து கொண்ட யோஷித ராஜபக்ஷ க.பொ.த. சா.த பரீட்சையில் ஒரே தடவையில் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் சிங்களம் உட்பட ஆறு பாடங்களில் திறமைச் சித்திகளையும், க.பொ.த.உ.த பரீட்சையில் இரண்டு சித்திகளையும் பெற்றிருக்க வேண்டும். ஆனால் யோஷித இவ்வாறான கல்வித் தகைமைகளைப் பெற்றிருக்கவில்லை என்பதை இவரது தனிப்பட்ட கோவை உறுதிப்படுத்துகின்றது.

ஒரே தடவையில் க.பொ.த.சா.த பரீட்சையில் யோஷித சிங்கள பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருக்கவில்லை. இவரது சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகளின் பெறுபேற்றுச் சான்றிதழ்கள் இவருக்காக ஒதுக்கப்பட்ட கோவையில் காணப்படவில்லை.

கடற்படைப் பயிலுனராக இணைந்து கொண்ட யோஷிதவால் வழங்கப்பட்ட 2003, 2004 காலப் பகுதியில் எடுக்கப்பட்ட க.பொ.த.சா.த பரீட்சைப் பெறுபேறுகளை கடற்படை அதிகாரிகள் ஏற்றுக்கொண்டனரா? இல்லையா? என்பதற்கான எவ்வித சான்றுகளையும் விசாரணை சபையால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இந்நிலையில் யோஷித எவ்வாறு கடற்படையில் இணைக்கப்பட்டார் என்பதற்கான தெளிவான அறிக்கையை இந்த சபையால் முன்வைக்க முடியவில்லை. யோஷித கடற்படையில் இணைக்கப்பட்டது எவ்வாறு என்பதை சிறப்பு விசாரணை மூலம் முன்னெடுக்கப்படுவதே சாத்தியமாக இருக்கும்.

கடற்படை கரையோரக் கற்கை நிறுவனத்தில் யோஷித பயிற்சி பெற்றிருந்தார். இவருக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக மூன்று மூத்த கடற்படை மாலுமிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். யோஷித பயிற்சி பெற்றிருந்த பகுதிக்கான பாதுகாப்புப் பணியை ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு மேற்கொண்டிருந்த போதும் அதற்கும் மேலதிகமாகவே மூத்த கடற்படை மாலுமிகள் மூவர் யோஷிதவின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்தனர்.

இலங்கை கடற்படையின் விதிகளுக்கு முரணாகவே யோஷித இணைக்கப்பட்டார் என்பதற்கு அப்பால், லெப்ரினன்ட் ராஜபக்ஷவிற்கு சிறப்புப் பரிசுகளும் வழங்கப்பட்டன. இவருக்கு சில சிறப்பு சலுகைகளும் முன்னுரிமைகளும் வழங்கப்பட்ட அதேவேளையில், முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவால் சிறப்புப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

பிரித்தானிய றோயல் கடற்படைக் கல்லூரியின் புலமைப் பரிசில் பயிற்சிக்குள் யோஷித உள்வாங்கப்படாத போதிலும் இவர் இதற்கான புலமைப் பரிசில் கட்டணங்களைப் பெற்றுக் கொண்டார். இதன் பின்னர் கடற்பயிற்சி தொடர்பான இரண்டு மேலதிக பயிற்சி நெறிகளைப் பெற்றுக் கொள்வதற்கு றோயல் கடற்படையுடன் இவர் இணைக்கப்பட்டமை விசாரணை மூலம் நிரூபணமாகிறது.

சப் லெப்ரினனாக இணைந்து கொண்ட பின்னர், இவர் ஹாம்ப்சையரில் உள்ள HMS Collingwood கரையோர போர் மூலோபாயக் கல்லூரியில் அனைத்துலக நிறைவேற்று கற்கை நெறியைப் பெற்றுக் கொள்வதற்காக அனுப்பப்பட்டார்.

யோஷித ராஜபக்ஷ, சப் லெப்ரினனட் நிலையை அடைந்த பின்னர், 29 ஒக்ரோபர் 2009 தொடக்கம் 31 ஓகஸ்ட் 2010 வரை உக்ரேய்ன் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அவரது மாமாவான உதயங்க வீரதுங்கவால் தெரிவு செய்யப்பட்டார். இதன் பின்னர் யோஷிதவிற்கான நாளாந்த வெளிநாட்டு கொடுப்பனவு, போக்குவரத்து மற்றும் தொலைபேசிச் செலவுகளை வழங்குமாறு பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கட்டளையிட்டார்.

வீரதுங்க நெருக்கமான தொடர்பைப் பேணிய உக்ரேய்னின் Ukrinmarsh நிறுவனத்தால் யோஷிதவிற்கு ஏற்கனவே சலுகைக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்ட சமநேரத்திலேயே கோத்தபாயவின் கட்டளைக்கு இணங்க மேலதிக வெளிநாட்டுக் கொடுப்பனவும் வழங்கப்பட்டன. யோஷித தனிப்பட்ட முறையிலேயே உக்ரேய்ன் நிறுவனத்தின் புலமைப்பரிசிலுக்குள் உள்வாங்கப்பட்டாரே தவிர, இவர் இலங்கை கடற்படையின் விதிமுறைகளுக்கு அமைவாக இவ்வாறான பயிற்சித் திட்டங்களுக்குள் உள்வாங்கப்படவில்லை. இந்த பயிற்சி நெறியைப் பூரணப்படுத்திய பின்னர், இவர் 'தத்துவவியல் கலாநிதிப்' பட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்கான பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டார் என்பது இங்கு அதிர்ச்சி தரும் தகவலாகும்.

திருகோணமலையில் இடம்பெற்ற பயிற்சி நிறைவு அணிவகுப்பின் போது, பயிலுனரான யோஷித ராஜபக்ஷவிற்கு அந்த ஆண்டிற்கான Midshipman பதவி வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. அத்துடன் இவர் 'கௌரவ பட்டயமும்' வழங்கி மதிப்பளிக்கப்பட்டார். இவ்வாறான சிறப்பு விருதுகளை யோஷித பெற்றுக் கொள்வதற்கு முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் கரன்னகொடவே காரணமாகும்.

இதன்பின்னர், கோத்தபாய ராஜபக்ஷவின் பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் பேரில், யோஷித ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுடன் இணைக்கப்பட்டார். கடற்படைத் தலைமையகத்தில் சாதாரண பணிகளைப் புரிந்த யோஷித, பின்னர் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் கீழ் அலரி மாளிகையில் பணியாற்றினார்.

இதற்காக இவருக்கு சிறப்பு அடையாள அட்டையும் வழங்கப்பட்டது. புதிய அரசாங்கம் இலங்கையின் ஆட்சியைப் பொறுப்பெடுத்துக் கொண்ட பின்னர், ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் கீழ் யோஷித பணியாற்றுவதற்கான கட்டளை இரத்துச் செய்யப்பட்டது.

யோஷித ராஜபக்ஷவினதும் சாள்ஸ் அன்ரனியினதும் சம்பவங்கள் மகிந்த ராஜபக்ஷவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் எவ்வாறான அர்ப்பணிப்புக்களுடனும் நாட்டுப்பற்றுடனும் பணியாற்றியுள்ளனர் என்பதை மிகத் தெளிவாக விளக்கி நிற்கின்றன.

தனது மகன் போரில் பங்கு கொண்டு போராடினான் என்பதை நினைத்து தலைவர் பிரபாகரன் திருப்தியடைந்தார். ஆனால் மகிந்தவின் மகன் போரின் நிழலைக் கூடத் தொட்டுப் பார்க்கவில்லை. குறிப்பாக இந்த நாட்டைப் பாதுகாப்பதற்காகத் தனது மகனை கடற்படையில் இணைத்துக் கொள்வதாகக் கூறி தனக்கான சொந்த அரசியல் இலாபத்தை மகிந்த ராஜபக்ஷ தேட முயற்சித்த போதிலும் இவரது மகனான யோஷித ராஜபக்ஷ போர் வலயத்திற்குள் தனது காலடியைக்கூட எடுத்து வைக்கவில்லை என்பதே உண்மை.

(முற்றும்)

**மொழியாக்கம்**
**நித்தியபாரதி**

# தனிநபரின் வருமானம் நாலாயிரம் டொலராக அதிகரிக்கும் சாத்தியம்

இந்த ஆண்டில் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி நூறு பில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்படும் என எதிர்பார்க்கப்படுவதுடன் தனிநபர் வருமானம் நாலாயிரம் டொலர்களாக உயர்ச்சி காணும் சாத்தியமும் உள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். அடுத்த ஐந்தாண்டு காலத்தினுள் மூன்று பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நேரடி வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக் கொள்ளவும் எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் முடிவுக்கு வந்ததில் இருந்து நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி மிக நல்லதொரு நிலையில் கையாளப்பட்டு வருகின்றது. எனினும் இந்த ஆண்டில் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி நூறு பில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்படும் என அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

கடந்த ஆண்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சி 5 தொடக்கம் 6 வீதத்தில் தான் இருந்தது. 3.3 வீதமான பணவீக்கத்தை தனி ஒற்றை இலக்கமாக மாற்றும் முயற்சியை இந்த அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

மொத்த தேசிய உற்பத்தியில் சேவைதுறை பாரிய பங்கினை வகிக்கின்றது. உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் நாட்டின் சுற்றுலாத்துறைஉள்ளிட்டசேவைத்துறை பாரிய அளவிலான முன்னேற்றத்தை கண்டுள்ளது. கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் ஒக்டோபர் மாதம் வரையிலான காலப்பகுதியில் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 1.5 மில்லியனாக அதிகரித்து வருமானம் 2.3 பில்லியனாக பதிவாகியுள்ளது.

மேலும் இந்த ஆண்டில் சுற்றுலா.கைத்தொழில் துறை சார் தொழில் வைப்புக்களை ஐந்து இலட்சம் வரை அதிகரிக்க எதிர்பார்த்துள்ளதுடன் இத்துறைசார் உற்பத்தி பல்வகைப்படுத்தலின் ஊடாக மொத்த தேசிய உற்பத்தியில் 1.6 சதவீதம் வரையிலான பங்களிப்பை வழங்கவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஐந்தாண்டு காலத்தினுள் மூன்று பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நேரடி வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக் கொளளவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோல் மொத்த தேசிய உற்பத்தியில் 75.5 வீதம் கடன் தொகையின் வீதமாகும. இப்போது நாட்டின் மொத்த கடன் தொகையானது 57 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். ஆகவே நாட்டின் அபிவிருத்தி மற்றும் உள்நாட்டு உற்பத்தியை பலமான வகையில் கையாள வேண்டுமாயின் இப்போதிருக்கும் அரசியல் சூழலை இன்னும் சில ஆண்டுகளுக்கு கொண்டு செல்ல வேண்டிய தேவை உள்ளது. பிரதான இரண்டு கட்சிகளினதும் பூரண ஒத்துழைப்பு இன்று நாட்டின் உள்நாட்டு உற்பத்திக்கு பாரிய பலமாக உள்ளதால் அதை தக்கவைக்க வேண்டிய அவசியம் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# அம்பாறையில் 33 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி

அம்பாறையில் சுகாதாரத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட மருந்து வகைகள் விசமானதில் 33 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை செவனகல் பிரதேசத்தில் உள்ள கொவுல் ஆர வித்தியாலயத்தில் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் நேற்று முன்தினம் விற்றமின் சி மற்றும் இரும்புச்சத்து மாத்திரைகள் வழங்கியுள்ளனர்.

இதனை உட்கொண்ட மாணவ, மாணவிகள் சுமார் 33 பேர் நேற்று முன்தினம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். நேற்று முன்தினம் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியிருந்த ஒரு மாணவர் நேற்று மீண்டும் வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பாடசாலையின் ஆறாம் மற்றும் மூன்றாம் வகுப்பு மாணவர்களே பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சரியான முறையில்உணவு உட்கொள்ளாத நிலையில் மாணவர்கள் மாத்திரைகளை உட்கொண்டதன் காரணமாகவே அவர்களுக்கு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாக சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.(இ)


இவர்களுக்கு மணமகள் தேவை

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா:25 செவ் 2 ல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: B/3792 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 38 செவ் 7 ல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில் : A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4321 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 68 செவ் 8 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர் லண்டன்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/3794 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 21<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/4329 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 62 செவ் 8 ல்<br>உயரம்: 6'3"<br>தகைமை/தொழில் : CIMA/ கணக்காளர்<br>தொ.இ: B/3797 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 28 சூரிசெவ் 4 ல்<br>உயரம்: 166cm<br>தகைமை/தொழில்:BA<br>தொ.இ: G/4330 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 86<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L ஜேர்மன் PR<br>தொ.இ: B/3798 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 70 செவ் 1 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BEd/ஆசிரியர்<br>தொ.இ: G/4331 |

கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## விசாரணை தொடரும்

மகிந்த அரசாங்க காலத்தின் போது தேசிய லொத்தர் சபையில் இடம்பெற்ற நிதி துஷ்பிரயோகம் தொடரபில் அதன் முன்னாள் தலைவர் சமிந்த அதுலவேவ மீணடும் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளார்.

இதனை நிதி மோசடிகளுக்கு எதிரான பொலிஸ் பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் கடந்த புதன்கிழமையன்று அவர் மூன்றாவது தடவையாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தநிலையில் அவர் வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கும் வகையில் நீதிமன்ற ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக மோசடிகளுக்கு எதிரான பொலிஸ் பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி 8ஆம் திகதியன்று இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலுக்காக தேசிய லொத்தர் சபையின் 65 மில்லியன் ரூபாய் நிதியை மகிந்த ராஜபக்ஷவின் பிரசாரங்களுக்காக செலவிட்டதாகவே முன்னாள் தலைவருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து தேசிய லொத்தர் சபையின் கணக்குகளிலும் ஜனாதிபதி தேர்தல் பிரசார செலவுகள் என்று பதிவு செய்யப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (இ)

# செய்தித் துளிகள்

## 'சிங்க லே'யின் ஆர்ப்பாட்டத்தில் 200பேர் மட்டுமே பங்கேற்றனர்

"சிங்க லே" இயக்கத்தினரால் நேற்று முன்தினம் ஹோமாகம நகரில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது குறைந்தளவானவர்களே பங்கேற்றனர்.

பௌத்த பிக்குகள் உட்பட சுமார் 200பேரே இந்த ஆர்பபாட்டத்தில் பங்கேற்றனர்.

இதன்போது அமைதியாக ஆர்ப்பாட்டத்தை நடத்துமாறு பொலிஸார் கோரிய போது இரண்டு தரப்பினருக்கும் இடையில் சிறிய முரண்பாடு தோன்றியது.

பௌத்த துறவிகளை சிறையில் அடைத்தமைக்கு எதிர்ப்பை தெரிவித்தும், தமிழில் தேசியகீதம் பாடப்படுவதை எதிர்த்தும் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (இ)

## வாஸ் குணவர்தனவின் மனைவிக்கு அழைப்பாணை

ஆபத்தான ஆயுதங்களை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் வழக்கு தொடரப்பட்டிருக்கும் முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தனவின் மனைவி ஷியா மலி பிரியதர்ஷினி பெரேராவை எதிர்வரும் 17ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு மேலதிக நீதவான் நிஷாந்த பீரிஸ் உத்தவிட்டுள்ளார்.

தற்போது மரண தண்டனை பெற்று சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வாஸ் குணவர்தன, அவரது மகன் ரவீந்து குணவர்தன உட்பட ஐந்து கைதிகளையும் அன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு நீதவான் சிறை நிர்வாகத்துக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். (இ)

## 'ஷிகா' வைரஸ் தொடர்பான இரத்த மாதிரிகள் சோதனை

ஷிகா வைரஸ் தொடர்பான இரத்த மாதிரிகள் பரிசோதனைகள் நேற்று முதல் பொரளை வைத்திய ஆராய்ச்சி மையத்தில் இடம பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த பரிசோதனைகளுக்கான இரசாயன திரவியங்கள் மலேசியாவிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

மேலும் ஷிகா வைரஸ் தொற்று பரவியுள்ள லத்தீன் அமெரிக்க நாடுகளின் சுற்றுலாப் பயணிகள் மற்றும் அந்த நாடுகளில் இருந்து நாடு திரும்பும் இலங்கையர்களை பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு நேற்று முனதினம் முதல் கட்டுநாயக்க விமான நிலையத்தில் விசேட பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## மின்சார சபை வாடிக்கையாளர் சேவைப்பிரிவில் திடீர் தீ விபத்து

மாத்தறை - விகாரைக்கு அருகில் அமைந்துள்ள மின்சாரசபை வாடிக்கையாளர் சேவை மையத்தில் நேற்று அதிகாலை 2.45 மணியளவில் திடீரென தீ பிடித்துளளதாக தெரிவிக்கப்படுள்ளது.

பின்னர் பொலிஸார் மற்றும் மாத்தறை நகர சபை தீ அணைப்பு பிரிவினரும் இணைந்து சிறிது நேரத்தில் தீயை அணைத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

தீ காரணமாக கட்டடத்தின் சில பகுதிகள் சேதமடைந்துள்ளதோடு, தீயினால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (இ)

## கேரளாக் கஞ்சாவுடன் ஒருவர் கைது

கொழும்பு மாளிகாவத்தை பிரதேசத்தில் ஒரு தொகை கேரளா கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

மாளிகாவத்தை பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து பஞ்சிகாவத்தை பிரதேசத்தில் நேற்று முற்பகல் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் 16.315 கிலோ கிராம் கேரளா கஞ்சாவுடன் இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

35 வயதான இந்த சந்தேக நபர் பஞ்சிகாவத்தை பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் அவர் இன்று மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவிருப்பதாகவும் பொலிஸார தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மாளிகாவத்தை பொலிஸார மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## அம்பன்பொல பிரதேசத்தில் ரயில் மோதி இளைஞர் பலி

அம்பன்பொல, தேக்கவத்தைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் ரயில் மோதி ஒருவர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பை நோக்கி வந்த ரயிலிலேயே ,23 வயதான சுராங்க ஜயதிலக என்ற இளைஞர் மோதி பலியாகியுள்ளதாகவும்.பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பன் பொல பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# தமிழ் சினிமா வரலாறு

93

## ஏவி.எம்.மின் வேதாள உலகம்
## லலிதா- பத்மினி நாட்டிய நாடகம்

...மற்றும் பி.ஆர்.பந்துலு கே.சாரங்கபாணி, டி.ஆர். ராமச்சந்திரன், பேபி கமலா ஆகியோரும் நடித்தனர்.


**அற்புத நடனங்கள்**

ஜகதலப் பிரதாபன், ஸ்ரீவள்ளி ஆகிய படங்களிலும் சில இந்திப் படங்களிலும் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி, நடனம் ஆடிய கமலா, நாம் இருவர் படத்தின் மூலம் நடனக் கலைக்கே மறுமலர்ச்சி உண்டாக்கினார் என்று சொன்னால் அது மிகை அல்ல.

ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே, வெற்றி எட்டுத் திக்கும் எட்ட கொட்டு முரசே ஆகிய பாரதியார் பாடல்களை டி.கே. பட்டம்மாள் பாட, அதற்கு கமலா ஆடிய நடனங்கள் படத்தின் வெற்றிக்கு பெரிதும் உதவின.

காரைக்குடியில் அமைக்கப்பட்ட ஏவி.எம். ஸ்டூடியோவில் லேப் வசதி கிடையாது. அதனால் ஒவ்வொரு நாளும் படப்பிடிப்பு முடிந்ததும் பிலிம் சுருளை எடுத்துக் கொண்டு ஒருவர் ரெயில் மூலம் சென்னைக்கு வருவார்.

இங்குள்ள ஸ்டூடியோவில் அந்த பிலிம் சுருளை கழுவிப் பார்ப்பார்கள். படம் ஓகே என்று அங்கிருந்து டெலிபோன் மூலம் காரைக்குடிக்கு தகவல் சொன்ன பிறகுதான் ஸ்டூடியோவில் போடப்பட்ட செட்களை கலைப்பார்கள்.




சிரமங்கள் இருந்தாலும் திட்டமிட்டபடி நாம் இருவர் படப்பிடிப்பு முடிவடைந்தது. படம் முதலில் மதுரையில் 1947 பொங்கல் தினத்தன்று ரீலிஸ் ஆகியது.

கமலாவின் முரசு நடனத்துக்கு பெரிய ஆரவாரம். தியேட்டருக்கு சென்றிருந்த டி.ஆர்.மகாலிங்கத்தை ரசிகர்கள் அலாக்காக் தூக்கிக்கொண்டு ஆடினார்கள்.

**வாசன் பாராட்டு**

அந்த வருடம் மார்ச் மாதத்தில்தான் நாம் இருவர் சென்னையில் திரையிடப்பட்டது.

ஜெமினி அதிபர் எஸ்.எஸ்.வாசன் அதைப் பார்த்துவிட்டு நாம் இருவர் படத்தை பார்த்தேன். அப்படியே பிரமித்துவிட்டேன் என்று தன் கைப்பட மெய்யப்பச் செட்டியாருக்குக் கடிதம் எழுதினார்.

காரைக்குடியில் ஏவி.எம். கீற்றுக் கொட்டகைகளைப் போட்டுக்கொண்டு படம் எடுக்கிறாராம் என்று, பட உலகத்தினர் சிலர் கேலியாகப் பேசி வந்தார்கள். ஆனால் படத்தைப் பார்த்ததும் அவர்கள் வாயடைத்துப் போனார்கள்.

ஏவி.எம். பேனரில் முதலாவதாக வந்த நாம் இருவர், ஏவி.எம்.முக்குப் பெருமை தேடித்தந்த படம் மட்டும் அல்ல. புராணப் படங்களும் மாயா ஜாலப் படங்களும் மட்டுமே ரசிகர்களைக் கவர்ந்து வந்த நேரத்தில் சமூகப் படங்களை நோக்கித் திரும்ப வைத்த படமும் நாம் இருவர்தான்.

தமிழ்த் திரைப்பட உலகில் ஒரு பெரிய திருப்புமுனை ஏற்படுத்திய படம் அது.

நாம் இருவர் படத்தைத் தொடர்ந்து என்ன படம் எடுக்கலாம் என்று யோசித்தார் ஏவி.எம். *(தொடரும்)*

# தற்கால சர்வதேச அரசியல் பொருளாதார நோக்கு


....அத்துடன் குவடார் ஒரு வர்த்தக துறைமுகமாக- சாதாரண மக்கள் தேவையை நோக்காக கொண்ட வகையில் கட்டியமைக்கப்பட்ட போதிலும் தேவைகள் ஏற்படுமிடத்து இராணுவ கடற்படை உபயோகத்திற்கும் ஏற்றவாறு சீன கடற்படை தளபாடங்களை இலகுவாக பொருத்தி உபயோகப்படுத்தக் கூடிய வகையிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளது.

தேவை ஏற்படும் பொழுது எந்தவித வடிவமைப்பு மாற்றங்களும் செய்து கொள்ளாது சீன கடற்படை இராணுவ தேவைகளுக்கு பாவித்துக் கொள்ள கூடிய வகையில் ஒவ்வொரு துறைமுகமும் அமைக்கப்பட்டு வருவது குறித்த மேலைத்தேய கேந்திர பாதுகாப்பு நோக்கர்கள் கரிசனை கொண்டுள்ளனர்.

சீனாவின் Uygur பிரதேசத்திலிருந்து பாகிஸ்தானிய எல்லைக்குள் நுழைவதற்கு குஞ்சிராப் கடவை எனும் பகுதி ஊடாக, 1947 ஆம் ஆண்டு தொடக்கம் பாகிஸ்தான் தனது கட்டுபாட்டிற்குள் வைத்திருக்கும் காஷ்மீரப் பகுதி ஊடாக இப்பாதை தொடங்குகிறது. இந்தியா தனது சொந்தமான வரலாற்று முக்கியத்துவம் கொண்ட புறநிலப்பகுதியாக இந்த பிரதேசத்தை பார்க்கிறது.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் ஒரு பகுதியான கில்கிட்-பல்திஸ்தான் மீதான சீன பாகிஸ்தானிய தலையீட்டுகள் தனது புவியியல் முலோபாயத்திற்கு சவால் விடும் நகர்வாக இந்தியா நோக்குகிறது. அதே வேளை நீண்டகாலமாக தீர்க்கப்படாது இருக்கும் இரு நாடுகளுக்கும் இடையிலான காஷ்மீரப் பிரச்சினையை தீர்த்து விடுவதற்கு இது நல்ல சந்தர்ப்பமாக அமைவதாக பாகிஸ்தானிய ஆய்வாளரகள் கருதுகின்றனர்.





சீன அதிகாரிகள் பாகிஸ்தானிய தரப் பிறகு ஏற்கனவே கொடுத்த அழுத்தங்களின் அடிப்படையில் கில்கிட் - பல்திஸ்தான் பகுதியை தனது சட்டபூர்வ மாநிலமாக மாற்றுவதில் பாகிஸ்தான் முயன்று வருகிறது. இந்த வகையில் சீனாவின் தேவையை பூர்த்தி செய்ய வேண்டிய நிலையில் இருக்கும் பாகிஸ்தான், இந்தியாவையும் திருப்தி செய்யும் வகையில் தீர்ப்பது குறித்த கவனத்தில் உள்ளது.

அதேபோல சீன-பாகிஸ்தானிய பொருளாதார பாதையின் செயல் வேகம் உச்ச நிலையை அடைந்து கொண்டிருக்கும் அதேவேளை, பரகிஸ்தானிய அரசாங்கம் தென்மாநிலமான பலூசிஸ்தானில் பாதுகாப்பு சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்த வேண்டிய தேவையில் உள்ளது. பலூசிஸதான் தேசியவாதிகள், இஸ்லாமிய அடிப்படைவாதிகள், மதப் பிரிவினைவாதிகள் என பல ஆயுதக்குழுக்களின் செல்வாக்கினை கடந்து சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்த வேண்டிய பொறுப்பு பாகிஸ்தானிய அரசாங்கத்திடம் உள்ளது

ஆக சடுதியான மாற்றங்களை உருவாக்கக் கூடிய பலூசிஸ்தான் பிரதேசம் இந்த முழுத்திட்டத்திற்கும் வாயிற்கதவாக அமைந்திருப்பது பாகிஸ்தானின் பாதுகாப்பு செலவீனத்தை பெருமளவில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சீன-பாகிஸ்தானிய பொருளாதார பாதையில் பாகிஸ்தானின் அயல் நாடான ஈரான் இணைந்துகொள்ளும் போது சீன-பாகிஸ்தான்- ஈரானிய கூட்டு மத்திய ஆசிய பிராந்தியத்தை தன்னிறைவு பெற்ற பிராந்தியமாக மாற்றக்கூடிய நிலை ஏற்படலாம் என்பது மேலைதேய ஆய்வாளர்களின் பார்வையாகும்.

பிராந்திய நாடுகள் மத்தியிலான ஒன்றில்-ஒன்று தங்கி இருக்கக்கூடிய இராஜதந்திரம் வளர்ச்சியடையும் போது, மேலைத்தேய இராஜதந்திர பலம் பிராந்தியங்களில் வலுவிழந்து போவது தவிர்க்க முடியாது என்பது சர்வதேச உறவு குறித்த கோட்பாட்டாளர்களின் பார்வையாகும்.

பிரதான கனிம வளங்களை கொண்ட மத்திய ஆசியாவின் முக்கியத்துவம் மிக வேகமாக வளர்ச்சி நிலையை கண்டு வரும் அதேவேளை, சீன பொருளாதார உதவியும். இருதரப்பிற்கும் வெற்றியை தரும் பொருளாதார ஒப்பந்தங்களும் நாடுகள் பிராந்திய நாடுகள் மத்தியிலே போர் தவிர்ப்பு உடன்படிக்கைகளை உருவாக்க வேண்டிய தேவை உள்ளது.

சீன-பாகிஸ்தானிய பொருளாதார பாதையின் உறுதிப்பாடும் அதன் அவசியமும் பாகிஸ்தானுக்கு எதிரான எந்த வல்லரசின் நடவடிக்கையும் சீன பொருளாதார வளர்ச்சிக்கான பிராண வாயுவை தடுக்கும் செயலாக சீனா பார்க்க வேண்டிய நிலை ஏற்படும். மிக நீண்டதூரத்திற்கு முழு நாட்டையும் கொள்ளடக்கியுள்ள இப்பாதை அமைக்கும் திட்டத்திற்காக, பாகிஸ்தானை ஒரு கட்டமைப்பின் கீழ் வைத்திருப்பதன் முலமே சீனா தனது பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

தோல்வியுற்ற அரசுகளின் பட்டியலில் பாகிஸ்தானை சேர்த்து விமர்சித்து வரும் மேலை நாடுகள், சிறு சிறு ஆயுதக் குழுக்கள், மதவாத அமைப்புகள், அடிப்படைவாதக் குழுக்களின் தலைமைகளை விமானி அற்ற விமானங்கள் மூலம் குண்டு வீசி அரசியல் படுகொலை செய்யும் நடவடிக்கைகளை பாகிஸ்தானின் பின்தங்கிய பிரதேசங்களில் மேற்கொண்டு வருகின்றன.

அதேவேளை இந்த குழுக்களை பாகிஸ்தான் கட்டுப்படுத்த வேண்டும் என்பது மேற்கின் தொடர்ச்சியான அழுத்தமாகும். நாட்டின் சட்டம் ஒழுங்கு வலு அற்ற நிலை, உள்ளூர் மக்களின் வறுமை நிலை, அரசியல் தலைவர்களின் ஊழல் அரசியல், இராணுவ தலையீடுகள் ஆகிய உள்ளக அழுத்தங்களோடு சீன-பாகிஸ்தானிய பொருளாதார பாதையின் புதிய நலன்களை எதிர்பார்த்து பயணிக்கிறது பாகிஸ்தான்.

(முற்றும்)

**லோகன் பரமசாமி-**

உரோமபுரி பற்றி எரியும் போது
நீரோ மன்னன் பிடில் வாசித்தானாம்
- ஆங்கிலப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நாம் செய்த தியாகம் எல்லாம் தமிழில் தேசிய கீதம் பாடவோ?

இலங்கைத் திருநாட்டின் 68ஆவது சுதந்திர தின வைபவம் நேற்று முன்தினம் காலி முகத்திடலில் நடந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொண்டனர்.

சுதந்திர தின நிகழ்வில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டது சரியா? தவறா? என்பதை தமிழ் மக்களே தீர்மானிக்க வேண்டும்.

காணாமல் போனவர்கள் பற்றி இன்னமும் ஒரு முடிவில்லாதபோது; தமிழ் மக்களின் வாழ்விடங்களை இப்போதும் படையினர் தம்வசம் கையகப்படுத்தி வைத்திருக்கின்ற நேரத்தில்; தமிழ் அரசியல் கைதிகளை இன்னமும் விடுதலை செய்யாத நிலையில்; போரினால் பாதிக்கப்பட்டு அங்கவீனமானவர்கள்; குடும்பத் தலைவரை இழந்த பெண்கள்; பெற்றோர்களை இழந்த பிள்ளைகள்; பிள்ளைகளைப் பறி கொடுத்த பெற்றோர்கள்; வீடற்றவர்கள்; அனைத்து உடைமைகளையும் இழந்தவர்கள் என பெரியதொரு துன்பப்பட்டியல் எங்களிடம் இருக்கும் போது, தமிழ் அரசியல் தலைவர்கள் சுதந்திரதின நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டிய தேவை என்ன? என்ற கேள்வி எழுவதில் நிறைந்த நியாயம் உண்டு.

இதேநேரம் சுதந்திர தினத்தன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கறுப்புக் கொடி கட்டப்பட்டு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருந்தது என்ற விடயமும் இங்கு நோக்குதற்குரியது.

இவை ஒருபுறம் இருக்க, சுதந்திர தின நிகழ்வின் நிறைவில் தமிழில் தேசியகீதம் இசைக்கப்பட்டது.

தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்ட போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரின் கண்கள் கலங்கியதாகத் தகவல். இத்தகவலை அறியும் போது, இலங்கையில் இது காறும் இருந்த பிரச்சினை தமிழில் தேசிய கீதம் இசைக்காததுதான்.

இதற்காகவே தமிழ் இளைஞர்கள் போராளிகளாகப் புறப்பட்டு வீர மரணத்தை தழுவிக் கொண்டனர். யுத்தம் நடந்த போதெல்லாம் தமிழ் மக்கள் ஊர் ஊராகச் இடம் பெயர்ந்தனர் என்று பொருள் கொள்ளத் தோன்றும்.

1948களில் முதுபெரும் புலவர் மு.நல்லதம்பி அவர்களால் தேசிய கீதம் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.

அன்றில் இருந்து தமிழர் பகுதிகளில் நடக்கும் பொது நிகழ்வுகளில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. போராட்ட காலத்தில் இது தடைப்பட்டிருக்கலாம்.

எதுவாயினும் தமிழில் தேசிய கீதம் இசைப்பதால் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை. எனவே சம்பந்தரின் கண்கள் கலங்கியமை, தமிழர்களின் கண்களில் இருக்கின்ற கண்ணீர் காலம் எல்லாம் அழுவதற்கு என்று நினைத்ததால் ஏற்பட்டதாக இருக்கலாம்.

அல்லது தமிழர்கள் தமக்கொரு தேசிய கீதத்தைப் பாட நினைத்து எத்தனையோ இழப்புகளைச் சந்தித்தனர். அவை எல்லாம் கைக்குக் கிட்டாமல் இன்று இந்த நாட்டின் தேசிய கீதம் தமிழில் இசைக்கப்பட்டதுதான் மிச்சம் என்று நினைத்து அவர் கண் கலங்கி இருந்தாலன்றி, வேறு எந்த விதத்திலும் சம்பந்தரின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் முகிழ்ப்பது அர்த்தமற்றது; பொருத்தமற்றது.

## போக்குவரத்து விதி மீறும் சாரதிகள் மீது கடும் நடவடிக்கை - அரச அதிபர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்து விதிகளை மீறும் தனியார் பயணிகள் பேருந்து சாரதிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தனியார் போக்குவரத்து சங்க தலைவரும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபருமாகிய நா.வேதநாயகன் தெரிவிக்கையில், யாழ் மாவட்டத்தில் போக்குவரத்து விதிகளை மீறும் பேருந்து சாரதிகளால் பாரிய விபத்துக்கள் ஏற்படுவதை அவதானிக்க முடிகிறது.

அத்துடன் இனிவரும் காலங்களில் போக்குவரத்து விதிமுறைகளுக்கு அமைவாக வாகனங்களை செலுத்துமாறு சாரதிகளை கேட்டுக் கொள்வதுடன் அவ்வாறு விதிகளை மீறி செலுத்தும் சாரதி மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுத்து அவர்களின் சாரதி அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்வதுடன் வாகன அனுமதிப்பத்திரமும் எதிர்வரும் காலங்களில் இரத்து செய்யப்படுமென தெரிவித்தார்.



எனவே யாழ் மாவட்டத்தில் போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் பேருந்துகளின் சாரதிகள் உரிய வீதி போக்குவரத்து விதிகளை கடைப்பிடித்து பயணிகளுக்கு இடையூறு விளைவிக்காத வண்ணம் தமது பயணங்களை மேற்கொள்ளவும் என அவர் மேலும் தெரிவித்தார். (1)

## கரைச்சி பிரதேச செயலர் மீது தாக்குதல் கிளிநொச்சி பொலிஸார் நேற்று விசாரணை

கரைச்சி பிரதேச செயலாளர் 8 பேர் கொண்ட குழுவினரால் கடந்த 3ஆம் திகதி தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொதுச்சந்தை வியாபாரிகளிடம் நேற்று விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

இத்தாக்குதல் தொடர்பான விசாரணைகள் நேற்று பிற்பகல் 4 மணியளவில் முன்னெடுக்கப்பட்டன.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் சி.ஸ்ரீதரன், கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர், கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் சந்தையில் வியாபாரத்தில் ஈடுபடும் வர்த்தகர்கள், மரக்கறி வியாபாரிகள் ஆகியோரிடம் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கருத்துத் தெரிவிக்கையில், தாக்குதல் மேற்கொண்டோர் விரைவில் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி மொழி வழங்கினார். (2-271)

## உருத்திரபுரீஸ்வரர் ஆலய பொதுக்கூட்டம் இன்று

கிளிநொச்சி மாவட்டத்தின் தொன்மை மிகு உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தின் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆலய போசகரும் கரைச்சி பிரதேச செயலாளருமான கோ.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் ஆலய அறங்காவலர் சபைத் தெரிவு நடைபெறவுள்ளதால் சிவாலய அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது பங்கு கொள்ளுமாறு அறங்காவலர் சபை செயலாளர் க.வயிரமுத்து அறிவித்துள்ளார். (2-254)

## சட்டவிரோத மணல் கடத்தல் மணல் நிரப்பப்பட்ட உழவு இயந்திரத்துடன் முள்ளியவளையில் சாரதி கைதானார்

(வற்றாப்பளை)

முல்லைத்தீவு முள்ளியவளை ஐயனார் குடியிருப்பு பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் கடத்த முயன்ற உழவு இயந்திர சாரதியொருவர் மணல் நிரப்பப்பட்ட உழவு இயந்திரத்துடன் முள்ளியவளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம்பெற்றது. இது தொடர்பில்தெரிய வருவதாவது,

முள்ளியவளை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து முள்ளியவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர். இரத்தினசிங்கம் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட அதிரடி தேடுதல் நடவடிக்கையில் மேற்படி பகுதியில் சட்ட விரோதமாக மணல் ஏற்றப்பட்ட நிலையில் இருந்த உழவு இயந்திரத்தை கைப்பற்றியதுடன் அதன் சாரதியையும் கைதுசெய்து முள்ளியவளை பொலிஸ்நிலையம் கொண்டு சென்றனர்.

குறித்த சாரதியை முல்லைத்தீவு நீதிமன்றில் ஆஜர் படுத்தநடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுவருகின்றது. (2-3-310)

## மூன்று பனங்கைப்பணி பயிற்சி நிலையங்கள் மன்னார் மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது

பனை அபிவிருத்திச் சபையினரால் மன்னார் மாவட்டத்தில் 3 பனம் கைப்பணிப் பயிற்சி நிலையங்கள் நேற்றையதினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

பனை அபிவிருத்திச் சபையின் இணைப்பாளர் ய.பெமில்டாஸ் பீரிஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மன்னார் பிரதேச செயலர் பிரிவில் தோட்டவெளி மற்றும் சாந்திபுரம்பகுதியிலும்மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் பாலைபெருமாள்கட்டு பகுதியிலும் இந்த பனம் கைப் பணிப் பயிற்சி நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் தலா 25 பயனாளிகள் பயிற்சியை மேற்கொள்ளவுள்ளனர்.

இப்பயிற்சி நெறியானது 6 மாத காலம் நடைபெறும் என்றும் இப்பயிற்சிக்கான மூலப்பொருட்கள் இலவசமாக வழங்கப்படுவதோடு பயிற்சி நிறைவில் 8 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உபகரணப் பொதியும் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பனை அபிவிருத்திச் சபை தலைவர் மா. கணபதிப்பிள்ளை, சிறப்பு விருந்தினராக பனை அபிவிருத்தி சபையின் செயலாற்றல் அதிகாரி கோபாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். (2-3-9)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வட மாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

அந்தவகையில் 07.02.2016 ஞாயிறு காலை யாழ். பிரதேசத்தில் உரும்பிராய் பிரதேசம் முழுவதும், உடுப்பிட்டி V.C, நாச்சிமார் கோவிலடி, கொற்றாவத்தை, பொலிகண்டி, ஆலடி, நெடியகாடு, வெள்ள றோட், உடுப்பிட்டி சந்தி, உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, பாரதி சனசமூக நிலையத்தடி, பழைய பொலிஸ நிலையத்தடி, வல்வெட்டித்துறை சந்தி, உடுப்பிட்டி வாசிகசாலை சந்தி, பொக்கணைச் சந்தி, கெருடாவில், தொண்டைமானாறு, மயிலியதனை, சிதம்பராக்கல்லூரி, வத்திராயன், உடுத்துறை, கொடுக்குளாய், ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில், வெற்றிலைக்கேணி இராணுவ படைமுகாம், நித்திய வெட்டை இராணுவ படை முகாம், நாவற்குழி சங்கென கொன்ஸ்ரக்சன் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் சாம்பல்தோட்டம் கிராமம், மடுக்கந்தவிலிருந்து குடாகச்சக்கொடிய வரை, TMM கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் மன்னார்பிரதேசத்தில் ஒலைத்தொடுவாய், வங்காலை, வங்காலை கடற்படைமுகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய பிரதேசங்களிலும். மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



எங்கள் இந்து முன்னோர்கள் தனி யிடத்தில் அமர்ந்து இறைவனையும் ஒழுக்கத்தையும் பற்றிச் சிந்தித்தார்கள். எனவே அதே நோக்கத்திற்காகப் பயன்படும் அறிவுத் திறனை நாங்கள் பெற்றோம். ஆனால் பொருள் தேடுவதில் எங்களுக்குள்ள வேகத்தால் அந்த அறிவுத் திறனை இழந்து வருகிறோம்.


சுதந்திரமும் மேலான அன்பும் இணை பிரியாமல் இருக்கவேண்டும். அப்போது இரண்டுமே பந்தமாகாது.

பிற உடம்புகளிலும் நீ இருப்பதை உணரக் கற்றுக் கொள். நாம் அனைவரும்ஒன்றே என்பதைத் தெரிந்து கொள். மற்ற அறிவீனங்களை எல்லாம் காற்றில் பறக்கவிடு. நற்செயல், தீய செயல் நிகழ்ந்தது நிகழ்ந்ததுதான். மூட நம்பிக்கையைவிடு. மரணமே எதிர்வந்தாலும் பலவீனம் அடையாதே.




ஆசை என்னும் மதுவை அருந்தி, உலகம் பித்துப் பிடித்துப்போய் இருக்கிறது. இரவும் பகலும் சேர்ந்து வருவதில்லை. அதுபோலவே ஆசையும் இறைவனும் சேர்ந்திருக்க முடியாது. ஆசையை விடு.

நடந்ததை எண்ணி வருந்தாதே. கடந்தை எண்ணிக் கலங்காதே. நீ செய்த நல்ல செயல்களையும் நினைவில் வைத்துக்கொள்ளாதே. சுதந்திரனாக இரு. பலவீனனாக, பயந்தவனாக, முட்டாளாக இருப்பவன் ஆன்மாவை அடைய முடியாது.

# முல்லை.துடுப்பாட்டச் சங்கம் நடத்திய துடுப்பாட்ட சுற்றுப்போட்டி







முல்லைத்தீவு மாவட்ட துடுப் பாட்ட சங்கம் நடத்திய கடின பந்து சுற்றுப்போட்டியில் வித்தியா அணி சம்பியனானது. முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கடின பந்து அணியினரின் திறமைகளை வெளிக்கொண்டு வரும் முகமாக முல லைத்தீவு செண்ட், முள்ளியவளை

## வித்தியா அணி சம்பியன்

வத்தியா, கள்ளப்பாடு உதயம், செல்வபுரம் சந்திரன், றெட்பானா பாரதி, விசுவமடு தோழர்கள் ஆகிய அணிகளுக்கிடையில் கிரிக்கெட் போட்டிகள் இடம்பெற்றன.

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில் முல்லைத்தீவு சென்யுட் முள்ளியவளை வித்தியா கழகங்கள் மோதிக் கொண்டன. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வித்தியா அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதனடிப்படையில் 27.1 ஓவர் முடிவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 119 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்யுட் அணி 19 ஓவரில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 94 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொள்ள வித்தியா அணி சம்பியனாகியது.

இதில் ஆட்ட நாயகனாக வித்தியா அணியின் அருணா, சிறந்த பந்து வீச்சாளராக சென்யுட் அணியின் குகதாஸ், சிறந்த துடுப்பாட்ட வீரனாக வித்தியா அணியின் நிப்ராஸ் போன்றவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுக்கான வெற்றிக்கிண்ணங்களை முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன் மற்றும் எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் வழங்கி வைத்தனர். (க-281)

# இன்றைய போட்டி


அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. 3 ஆட்டம் கொண்ட ஒரு நாள் போட்டி தொடரில் முதல் போட்டியில் அவுஸ்திரேலியா 159 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது.

2 ஆவது ஒரு நாள் போட்டி இன்று வெலிங்டனில் நடக்கிறது. முதல் போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு அவுஸ்திரேலியா பதிலடி கொடுக்குமா? என்று எதிர்பார்க்கப் படுகிறது. இதில் தோற்றால் தொடரை இழந்துவிடும்.

இன்றைய போட்டியில் வென்று தொடரை கைப்பற்றும் முனைப்பில் நியூசிலாந்து உள்ளது. (க)

# இங்கிலாந்து-தென்னாபிரிக்கா 2 வது ஒரு நாள் போட்டி இன்று

இங்கிலாந்து கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான 5 போட்டி கொண்ட ஒரு நாள் தொடரில் முதல் ஆட்டத்தில் தென் ஆப்பிரிக்கா 39 ரன் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. 2 ஆவது ஒரு நாள் போட்டி நாளை போர்ட் எலிசபெத்தில் நடக்கிறது. முதல் போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு தென்னா பிரிக்கா பதிலடி கொடுக்குமா என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால்அந்த அணிகடுமையாகபோராடும். முதல்போட்டியில் 399 ஓட்டங்கள குவித்து வென்றதால் இங் கிலாந்து நம்பிக்கையுடன் உள் ளது. (க)




# இறுதி போட்டியில் ஞானம்ஸ் அணி


பொற்பதி விளையாட்டுக்கழகம் நடததும் மாபெரும் மென்பந்து சுற்றுப்போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் குருநகர் கார்மேல் போய்ஸ் அணியையும் அரையிறுதி ஆட்டத்தில் கொக்குவில் பிரம்படி அணியையும் வெற்றி கொண்டு இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம் (க)

# மன்னார் லீக் அணி வெற்றி

தென்கொரிய நட்புறவுக் கிண்ணத்துக்காக இலங்கை காற்பந்தாட்ட சம்மேளனம் காற்பந்தாட்ட லீக்குகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடத்திவரும் காற்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் போட்டியொன்றில் மன்னார் லீக் அணி வெற்றிபெற்றுள்ளது. இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை நடைபெறற போட்டியில் மன்னார் லீக் அணியும் வலிகாமம் லீக் அணியும் மோதின.

முதற் பாதியாட்டத்தில் மன்னார் லீக் அணி ஒரு கோலைப் பெற்று முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியாட்டத்தில் வலிகாமம் லீக் அணி ஒரு கோல் பெற்று ஆட்டத்தை சமநிலை செய்தது. எனினும, தொடர்ந்து சிறப்பாக ஆடிய மன்னார அணி மேலும் ஒரு கோல் பெற்று வெற்றியை உறுதி செய்தது. இறுதியில் மன்னார் லீக் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க)

# தமிழில் தேசிய கீதம் பாடியதால் சுதந்திர தினத்தை புறக்கணித்த சம்பிக்க!



(கொழும்பு)

• நேற்று முன்தினம் காலிமுகத்திடலில் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வுகளை ஜாதிக ஹெல உறுமய கட்சி பகிஷ்கரிப்பு செய்துள்ளது.

தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்பட்ட காரணத்தினால் தேசிய சுதந்திர தின நிகழ்வுகளில் ஜாதிக ஹெல உறுமய பங்கேற்கவில்லை என கட்சியின் பேச்சாளர் நிசாந்த சிறிவர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய கீதம் தமிழில் பாடப்படுவது இனங்களுக்கு இடையில் பிணைப்பை ஏற்படுத்துவதற்கு பதிலாக இனங்களுக்கு இடையில் விரிசல் நிலைமையையே ஏற்படுத்தும். ஒவ்வொரு நபர்களை திருப்திபடுத்த தேசிய கீதம தமிழில் பாடுவதனை அனுமதிக்க முடியாது.

அரசாங்கத்திற்கு செய்ய எவ்வளவோ காரியம் இருக்கின்ற போதிலும் செய்யக் கூடாதவற்றை செய்து வருகின்றது. அரசியல் அமைப்பிற்கு முரணாகவும் தேசியம் பற்றிய உணர்வின்றியும் எடுக்கப்பட்ட தீர்மானமாகவே தேசிய கீதம் தமிழ் மொழியில் பாட எடுக்கப்பட்ட தீர்மானம் கருதப்படுகின்றது.

இவ்வாறான ஓர் நிலையில் அரசாங்கத்தின் புதிய அரசியல் அமைப்பில் எவ்வாறான விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும் என்ற நியாயமான சந்தேகம் எழுந்துள்ளது. அரசாங்கத்தின் தூர நோக்கற்ற தீர்மானங்களினால் தேசிய ஒற்றுமைக்கு பதில் ஒற்றுமையின்மையே ஏற்படும்.

தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்படுவதற்கு எதிர்ப்பு வெளியிட்டே, ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரான சம்பிக்க ரணவக்க சுதந்திர தின நிகழ்வுகளில் நேற்று முன்தினம் பங்கேற்றிருக்கவில்லை. ஜாதிக ஹெல உறுமய தேசிய கீதம் தமிழ் மொழியில் பாடுவதனை ஆரம்பம் முதல் எதிர்த்து வருகின்றது என நிசாந்த சிறி வர்ணசிங்க தெரிவித்துள்ளார். (12)

## தமிழில் பாடியது சிறந்ததே – வாசு



(கொழும்பு)

தேசிய கீதம் தமிழ் மொழியில் பாடப்பட்டமை சிறந்ததே என இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தேசிய கீதம் தமிழில் பாடப்பட்டமையை தாம் எதிர்க்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய எதிர்க் கட்சியினர் எவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாலும் தாம் இந்த நடவடிக்கையை இதயபூர்வமாக ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.(12)

# ராஜபக்ஷவினர் சொத்துக்கள் அரசுடமையாக்கப்படலாம்!

(கொழும்பு)

யோஷித ராஜபக்ஷ உள்ளிட்ட சிலர் மீது சுமத்தப்பட்டுள்ள கறுப்பு பணத்தை வெள்ளையாக்கிய குற்றச்சாட்டு மேல் நீதிமன்றத்தில் நடத்தப்படும் வழக்கு விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டால், அவர்களின் குடும்ப சொத்துக்கள் அனைத்தும் அரசுடமையாக்கபபடலாம் என தெரியவருகிறது.

பண சலவை சட்டத்தின் கீழ் வழக்கு தாகல் செய்யப்பட்டு, அந்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், குற்றவாளிகளுக்கு இந்த தண்டனை விதிக்கப்படும்.

யோஷித ராஜபக்ஷவுக்கு அவரது குடும்பத்தினர் சொத்தை இன்னும் பிரித்து கொடுக்காத நிலையிலும் அவருக்கு திருமணமாகாத நிலையிலும் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக சட்டத்துறை நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை தற்போது விசாரணைகள் நடத்தப்பட்டு வரும் ஷிராந்தி ராஜபக்ஷ நடத்தி வந்த சிரிலிய சவிய என்ற அரசசார்பற்ற நிறுவனத்திற்கு எப்படி பணம் கிடைத்தது என்ற பல சந்தேகமான நிலைமைகள் காணப்படுவதாக தெரியவந்துள்ளது.

சீ.எஸ்.என் தொலைக்காட்சி மற்றும் சிரிலிய சவிய அமைப்பு ஆகியவற்றுக்கு வெளிநாடுகளில் இருந்து பெருந்தொகை பணம் கிடைத்துள்ளது.


அந்த பணத்தை வேறு நாடுகளில் வைப்புச் செய்து, பணத்தை இலங்கையில் நடத்தப்படும் திட்டங்களுக்காக அனுப்பி வைத்த தன் மூலம் வெள்ளை பணமாக மாற்ற முயற்சித்துள்ளமை தெளிவாகியுள்ளது.

பண சலவை தடுப்புச் சட்டத்தின் மூன்றாவது பந்திக்கு அமைய இந்த குற்றச்சாட்டை எதிர்நோக்கும் நபருக்கு 5 முதல் 20 வருட காலம் வரை சிறைத்தண்டனையை வழங்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.

மேலும் மோசடி செய்யப்பட்ட பணத்தை விட மூன்று மடங்கு பணத்தை அவர்களிடம் இருந்து அபராதமாக பெற முடியும் என்பதுடன நபர்களின் சொத்துக்களையும் அரசுடமையாக்க முடியும் என அந்த பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (12)

# சிங்களவர் ஓர் அடி வைத்தால் தமிழர்கள் 10 அடி வைக்க தயார்

## விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

சிங்கள மக்கள் தமிழ் மக்களுடன் இணைந்து ஓர் அடி முன்னோக்கி வைப்பார்களேயானால், அதற்காக 10 அடி முன்னோக்கி வைக்க தமிழ் மக்கள் தயார் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் நயினாதீவு நாக விகாரைக்கு நேற்று சென்றிருந்த முதலமைச்சர், விகாரைகளில் வசித்து வரும் பிக்குமாரின் நலன் விசாரித்த பின்னர், ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே இதனை கூறியுள்ளார்.

இம்முறை தேசிய சுதந்திர தின நிகழ்வில் தேசிய கீதம் தமிழில் பாடப்பட்டமை நல்லிணக்கத்திற்காக செய்த சிறிய காரியம் என்றாலும் அது பாராட்டத்தக்கது.

இனங்களுக்கு இடையில் ஐக்கியத்தையும் சகோதரத்துவத்தையும் அதிகரித்து கொள்வதற்கான சிறந்த பின்புலம் உருவாகியுள்ளது எனவும் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (12)

## அமெரிக்காவிலும் தேசிய கீதம் தமிழில்

(வாஷிங்டன்)

இலங்கையின் 68-வது தேசிய தினத்தை முன்னிட்டு அமெரிக்காவில் நடைபெற்ற தேசிய தின நிகழ்விலும் தேசிய கீதம் சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் பாடப்பட்டுள்ளது.

இதற்கு வாழ்த்து தெரிவித்து டுவிட்டரில் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ள தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் நிஷா பிஸ்வால், கொழும்பில் மட்டுமல்லாது வாஷிங்டனிலும் இலங்கையின் தேசிய கீதம் சிங்களத்திலும் தமிழிலும் பாடப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார். இதற்கும் ஆதரவாகவும் எதிராகவும் விமர்சனங்கள் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(12)

## வடக்கில் 27...

உட்பட பிரதிநிதிகளும், இலங்கைத் தரப்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் உட்பட பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இந்த கலந்துரையாடலின் பின்னர் இரு நாடுகளுக்கு இடையில் மருத்துவ உபகரணங்கள் வழங்கல், பாடசாலைகளை கட்டிக்கொடுத்தல் தொடர்பில் முக்கியத்துவம் வாய்ந்த இரு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இதற்கமைய வடமாகாணத்தில் 27 பாடசாலைகளை மீள்புனரமைப்பு செய்வதற்கான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் இந்தியத் தூதுவர் வை. கே.சிங்ஹாவும், கல்வியமைச்சின் செயலாளர் பந்துசேனவும் கைச்சாத்திட்டனர்.

இதனைத் தொடர்ந்து, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் புதிதாக ஒரு சத்திர சிகிச்சைப் பிரிவு நிலையத்தினை அமைப்பது மற்றும் மருத்துவ உபகரணங்களை வழங்குவது குறித்த ஒப்பந்தமொன்றும் கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில் இந்தியத் தூதுவர் வை.கே.சிங்ஹாவும், சுகாதார அமைச்சின் செயலாளர் அநுர ஜயவிக்ரம ஆகியோர் கைச்சாத்திட்டனர். (12)

## ஐ.நா ஆணையாளர்...

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அல் ஹுசைன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், இராஜதந்திர சமூகத்தினர் மற்றும் தேசிய மனித உரிமை ஆணைக்குழுவினர் ஆகிய தரப்புகளைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

விசேடமாக முப்படைத் தளபதிகளையும் இவர் தனது விஜயத்தின்போது சந்திக்கவுள்ளார்.

இன்றும், நாளையும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள ஹுசைன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நஷீர் அஹமட் ஆகியோரை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

அதுதவிர, போரினால் பாதிக்கப்பட்டவர்களையும் சந்தித்துப் பேசவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மகிந்த ஆதரவு பொது எதிரணியினர் ஹுசைனை சந்திப்பதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருமாறு அரசிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர். எனினும், அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. (12)

## ரணிலை சந்தித்து...

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்று பிற்பகல் முக்கிய சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்திய-இலங்கை கூட்டுக் குழுக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக இரண்டு நாள் பயணமாக கொழும்பு வந்த, இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ், நேற்று பிற்பகல் பிரதமர் ரணிலை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

கொழும்பை வந்தடைந்த சற்று நேரத்தில் இந்தப் பேச்சுக்கள், அலரி மாளிகையில் இடம பெற்றுள்ளன.

இந்தச் சந்திப்பு சுமார் 50 நிமிடங்கள் வரை நீடித்தாகவும், பயனுள்ள வகையில் அமைந்திருந்ததாகவும், இந்தியத் தரப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

திருகோணமலையில் முன்மொழியப்பட்டுள்ள சிறப்பு பொருளாதார வலயத்தில், இந்திய முதலீடுகளை மேற்கொள்ள,பிரதமர் இந்தச் சந்திப்பின் போது அழைப்பு விடுத்துள்ளார்.

அத்துடன், இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமைகள், முன்னேற்றங்கள் குறித்தும், அவர் இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் சாகல ரத்நாயக்க, வெளிவிவகாரச் செயலர் சித்ராங்கனி வகீஸ்வரா உள்ளிட்டோரும், இந்திய வெளிவிவகார அமைச்சருடன், வெளிவிவகாரச் செயலர் எஸ்.ஜெய்சங்கர், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே. சின்ஹா உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.(12)

## குழு வாள்வெட்டு குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத மூன்று பேர் கொண்ட குழு ஒன்று வாளால் வெட்டியதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று இரவு 9 மணியளவில் கல்வியங்காட்டு சந்திப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் ஆனந்தபுரம், இருபாலை தெற்கைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான கதிர்காமன் பிரதீபன் (வயது24) என்ற ஆட்டோ சாரதியே வெட்டுக் காயத்துக்கு இலக்காகியுள்ளார்.

படுகாயமடைந்த இவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதோடு,

இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (30)

# உள்ளக...

தனது பதிலில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இலங்கையின் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவியேற்ற பின்னர் அங்கு குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்துள்ளது. படையினரால் சுவீகரிக்கப்பட்டிருந்த பொது மக்களின் காணிகள் சில மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஆயினும் இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் இன்னும் நிறைவு செய்ய வேண்டியுள்ளது. அத்துடன் வடக்கில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றுவதற்கும் பிரித்தானிய அரசாங்கம் தொடர்ந்து பங்களிப்புக்களை வழங்கி வருகின்றது.

நான் கடந்த மாதம் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது வடக்கில் மீளக் குடியேறியிருந்த சில குடும்பங்களை நேரில் சந்தித்து அவர்கள் தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதில் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பிலும் கலந்துரையாடியிருந்தேன்.

இலங்கையில் கடந்த மாதம் 14ஆம் திகதிக்கும் 17ஆம் திகதிக்கும் இடையில் நான் மேற்கொண்ட பயணத்தின் போது இலங்கையில் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை அவதானித்தேன். குறிப்பாக, முன்னைய அரசாங்கத்தால் தடை விதிக்கப்பட்ட சில தனிநபர்கள் மற்றும் புலம்பெயர் அமைப்புகள் மீதான தடைகள் நீக்கப்பட்டுள்ளதுடன், நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் சிலரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் கரிசனையுடன் இருக்கின்றது. அத்துடன் அத்தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முற்படும் போது எதிர்கொள்ளக்கூடிய சவால்கள் தொடர்பிலும் இலங்கை அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது. ஆயினும் இவ்விகாரம் தொடர்பில் அரசாங்கம் இன்னும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அரசாங்கம் ஐ.நா தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் பிரித்தானிய அரசாங்கம் எடுக்கும்.

ஐ.நா தீர்மானத்தில் பரிந்துரைத்ததன்படி போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமைகள் தொடர்பில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படவுள்ள விசாரணைகளில் பொதுநலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள், சட்டவாளர்கள், வழக்குத் தொடுநர்களின் பங்களிப்பு தொடர்பில் அரசாங்கத்துக்கு வலியுறுத்தியிருந்தேன். பொறுப்புக்கூறல் விவகாரத்தில் சர்வதேச பங்களிப்பின் முக்கியத்துவம் தொடர்பில் எனது விஜயத்தின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோருடனான சந்திப்பின் போது சுட்டிக்காட்டியிருந்தேன்.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனிதவுரிமைகளை மேம்படுத்தல் தொடர்பிலான நடவடிக்கைகளுக்கு பிரித்தானிய தொடர்ந்து ஆதரவு வழங்கும்.

ஐ.நா தீர்மானத்தை அரசாங்கம் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது தொடர்பில் ஐ.நாவுடனும், சர்வதேச பங்காளர்களுடனும் இணைந்து பிரித்தானியா முழுமையான நடவடிக்கைகளை எடுக்கும் என ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளருக்கு கடந்த மாதம் 28ஆம் திகதி நான் எழுதியிருந்த கடிதத்தில் தெரிவித்திருந்தேன். அரசாங்கத்தால் அமைக்கப்படவுள்ள உள்ளகப் பொறிமுறை நம்பகமானதாகவும், சர்வதேச நியமங்களுக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டியது அவசியம் என்பதில் பிரித்தானியா உறுதியாகவும், தெளிவாகவும் இருக்கின்றது.

எனது பயணத்தின் போது இலங்கையில் நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருக்கும் இனப பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் அரசாங்கத்தின் தலைவர்களுடனும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் கலந்துரையாடியிருந்தேன்.

இலங்கையில் உருவாக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்பில் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய பணியக இணை அமைச்சர் ஹியூகோ ஸ்வைர் தனது பதிலில் மேலும் தெரிவித்துள்ளார். (12)

# ஜனாதிபதி...

மோசடி பிரச்சினை ஏற்பட்டுள்ள நிலையில், நிதி மோசடி விசாரணைப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

நிதி மோசடி விசாரணைப் பிரிவின் மூலம் கடந்த காலத்தில் பல விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

கிடைத்துள்ள 198 முறைப்பாடுகள் குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. கிடைத்துள்ள முறைப்பாடுகளில் அமைச்சர்கள், ஜனாதிபதி, ஜனாதிபதியின் சகோதரர்கள், ஜனாதிபதியின் உறவினர்கள், அரசாங்கத்தின் பிரதான அதிகாரிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

198 முறைப்பாடுகளில் 35 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் முடிக்கப்பட்டு அடுத்த கட்ட விசாரணைகளுக்கு அனுமதி கோரி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனினும் சட்டமா அதிபர் திணைக்களம் 4 விசாரணைகளுக்கான அனுமதியை மாத்திரமே இதுவரை வழங்கியுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களம் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முடக்கி வருகிறது.

விசாரணைகளை தடுத்து நிறுத்த ஒரு புறம் சட்டமா அதிபர் திணைக்களத்தையும் மறுபுறம் அரசியலையும் இந்த அரசாங்கம் பயன்படுத்தியுள்ளது.

கொள்ளைகளுக்கு இரண்டு தரப்பினராலேயே தண்டனை வழங்க முடியாது. ஒன்று கொள்ளையடிப்பவர்கள் மற்றைய தரப்பு கொள்ளையடிப்பதை வேடிக்கை பார்க்கும் தரப்பு.

இவர்களை தவிர ஏனைய தரப்பினர் மோசடியாளர்களை கைது செய்து, தண்டனை வழங்கி, அவற்றை பறிமுதல் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். ஆனால், இந்த அரசாங்கம் அதனை செய்யாது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் விசாரணைகளை நடத்தும் நிறுவனங்களில் தலையிடாது, அதிகாரிகள் சுதந்திரமாக விசாரிக்க இடமளித்தால், அடுத்த மூன்று மாதங்களில் வரிசையாக பலர் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படும் எனவும் அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (12)

# இலங்கையில்...

கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு மற்றும் மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் சுஸ்மா சுவராஜ் கூடுதல் கவனம் செலுத்தியதாக அறியப்படுகிறது.

அத்துடன், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜை தமிழ் முற்போக்கு கூட்டணியும் கொழும்பில் இன்று சந்தித்து பேச்சு நடத்தவுள்ளது.

இதனிடையில் இந்தியா, இலங்கை கூட்டுக் குழுவின் கூட்டத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் உள்ளிட்ட பிரதிநிதிகளும், இலங்கை வெளிவிவ கார அமைச்சர் மங்கள சமரவீரவின் தலைமையிலான பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் இருநாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு, வர்த்தகம், சக்தி, தொழில்நுட்பம், கடல்சார் ஒத்துழைப்பு, சமூக, கலாசார மற்றும் கல்வி தொடர்பான விவகாரங்கள், பாதுகாப்பு ஒத்துழைப்பு, சுகாதாரம், சிவில் விமானப் போக்குவரத்து, சுற்றுலா மற்றும் மக்களுக்கிடையிலான தொடர்புகள் குறித்து ஆராயப்பட்டுள்ளதாக அறியக் கிடைக்கின்றது.

இந்தக் கூட்டத்துக்குப் பின்னர் இரு நாடுகளுக்கு இடையில் மருத்துவ உபகரணங்கள் வழங்கல் மற்றும் பாடசாலைகளை கட்டிக்கொடுத்தல் தொடர்பில் இரு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் இலங்கைக்கு மேற்கொள்ளும் இரண்டாவது பயணம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, இலங்கையுடன் இன்னும் வலுவான உறவுகளை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்த்திருப்பதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி 68ஆவது சுதந்திர ·தினத்தை முன்னிட்டு டு விட்டரில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். (12)

# காணாமல்போனோர் சங்கம் அல் ஹுசைனை சந்திக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கை வரும் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை ஆணையாளர் அல் ஹுசைனை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தருமாறு கோரி வடக்கு கிழக்கில் படையினரால் கடத்தப்பட்டு காணாமல் போனோர் சங்கம் வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி ஆகியோருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி சங்கத்தின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கில் படையினரால் கடத்தப்பட்டு காணாமல்போனோர் சங்கத்தின் தலைவி கமலநாயகி தலைமையில் நேற்று மதியம் யாழ். திருமறைக்கலாமன்றத்தில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் காணாமல் போனோரின் உறவுகள் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொது செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இக்கூட்டத்தில் இலங்கைக்கு வருகை தரும் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை ஆணையாளர் அல் ஹுசைனை சந்திப்பது தொடர்பில் ஆராயப்பட்டது.

இச்சந்திப்பினை எந்தவகையான முறையில் மேற்கொள்வது என ஆராயப்பட்டு மனிதவுரிமை ஆணையாளரினை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தருமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை ஆணையாளர் ஆகியோரினை கோருவது எனத் தீர்மானிக்கப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் கையெழுத்துக்களுடன் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கடிதம் ஒன்று கையளிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதிக்கான கடிதமும் அனுப்பி வைக்கப்பட்டது. மனிதவுரிமை ஆணையாளருடனான சந்திப்பு சாத்தியப்பட்டால் எவ்வாறான விடயங்கள் கலந்துரையாடப்பட வேண்டும் எனவும் மேற்படி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை ஆணையாளர் தமிழ் மக்கள் தொடர்பில் மிகவும் கரிசனையுடன் செயற்பட்டு வருகின்றார். இவ்வாறான நிலையில் அவருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் என முடிவெடுக்கப்பட்டே, அவருடனான சந்திப்பினை கோருவது என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள போதிலும் காணாமல் ஆக்கப்பட்டோர், காணாமல் போனவராகவே இருக்கின்றனர். ஆகையால காணாமல் போனோர் தொடர்பில் சர்வதேச விசாரனை ஒன்று அவசியம். அதனையே நாமும் கோருகின்றோம். தொடர்ந்து வரும் இலங்கை அரசுகள் மீது எமக்கு எவ்வித நம்பிக்கைககளும் இல்லை என கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்தனர். (4,9)

# பதவி விலகலுக்கு ஆளுநர் விளக்கம்

வடக்கு மாகாண ஆளுநர் எச்.எம்.ஜி.எஸ்.பளிகக்கார பதவி விலகவுள்ளார். தாம் இணங்கிக் கொண்ட காலப்பகுதிக்கு மேலதிகமாகவே, பணியாற்றி' விட்டதால்தான், வடக்கு மாகாண ஆளுநர் பதவியில் இருந்து விலகிச் செல்ல தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார் எச்.எம்.ஜி.எஸ். பளிகக்கார.

இது தொடர்பாக அவர் கருத்து வெளியிடுகையில், ஆளுநராக நியமனம் வழங்கப்பட்ட போது, ஆறு மாதங்கள் இந்தப் பணியில் இருப்பதற்கே இணக்கம் தெரிவித்திருந்தேன்.

நான் இணங்கிக் கொண்ட காலப்பகுதியை நிறைவு செய்து விட்டேன், உண்மையில் நான் இப்போது மேலதிகமாகத் தான் தங்கியிருக்கிறேன்.

இந்தப் பதவியை விட்டுப் போவதன் பின்னால் வேறு எந்த விடயங்களும் இல்லை. எனது ஓய்வுக்காலத்தை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுனராக இவர் கடந்த ஒரு ஆண்டாகப் பதவி வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை வட மாகாணத்துக்கான புதிய ஆளுநராக றெஜினோல்ட் குரே நியமிக்கப்படவுள்ளன என தெரிவிக்கப்படுகிறது. (12)

## வேலையாள் தேவை

அப்பம், றொட்டி
வேலை தெரிந்தவர்கள் தேவை
(துங்கி நிற்பவர்கள் விரும்பத்தக்கது)
(3514)
தொடர்பு:- 077 371 5920

## சிற்றூழியர் தேவை

சுற்றுப்புறச் சூழல் பராமரிப்பு மற்றும் இதர பணிகளுக்காக சிற்றூழியர்கள் (ஆண்கள்) தேவை.

- யாழ்ப்பாண நகர மையத்தை அண்மித்து வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- உணவு வசதிகளுடன் தங்கியிருந்தும் வேலை செய்ய முடியும்.

பொருத்தமானவர்கள் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நேரில் வரவும்.

பொது முகாமையாளர்
வலம்புரி
இல. 3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

UK, France, Germany, Swiss, Italy...



வாசல் திறக்கிறது ஐரோப்பா!

Study in Romania
(ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடு)



வங்கி பண வைப்பு, IELTS அவசியமில்லை
With Work Permit & PR
பிரத்தியேக தூதரக அங்கீகாரம் கொண்ட பிரதிநிதியூடான சேவை
SIKARAM Any Visa to Any Country
மேலதிக விபரங்களையும் ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றியும் அறிந்துகொள்ள
www.sikaram.lk
Tel: 0777 32 4004 , 021 222 00 11
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரான்ஸ்,சுவிற்சர்லாந்து கனடா, செல்வோர் விரையுங்கள்!



- பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSYயின்கீழ் இயங்குகிறது. தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.
- எமது CERTIFICATES & INTERNATIONAL DIPLOMA (DELF A1) பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சை தேவையில்லை.
- இலவசம்: படிக்கும் பாடங்களின் PHOTOCOPIES, படித்ததற்கான LETTRE, VISA FORM நிரப்புதல், CD, BOOKS பாவனை...
- யாழ்,வன்னி,மன்னார்,திருகோணமலை,மட்டக்களப்பு,கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AFஇல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்.

ஆரம்பம் 14.02.16 2 pm உடன் அழைத்து பதியவும்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

## BASIC ENGLISH & SINHALA PERSONAL CLASSES & Translation

அடிப்படையிலிருந்து கிரமமான பாடங்கள், மொழிபெயர்ப்புப் பயிற்சிகள் ஊடாக இரு மொழிகளும் G.C.E (0/L) வரை கற்பிக்கப்படும். ஆறாம் ஆண்டுக்கு மேற்பட்ட மாணவர்கள், பாடசாலை விலகியோர், அரச மற்றும் தனியார் நிறுவன சேவையாளர் உட்பட எவ் வயதினரும் எத் திகதியிலும் இணைந்து கொள்ளலாம்.

மொழிபெயர்ப்பு வேலைகள்

கடிதங்கள், ஆய்வுக்கட்டுரைகள் நூல்கள், இணையத்தளக் குறிப்புக்கள் உட்பட்ட பிரத்தியேக மொழிபெயர்ப்பு வேலைகள் மூன்று மொழிகளிலும் செய்து தரப்படும்.

T.SAGATHEVAN, B.A. Londan
Trilingual Tutor / Translator (PVT)
46,பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
MAHALUCKSMY CONTRUCTION
T.No:-0212223520/0778210178

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.